உ

கடவுள் துணை.

நந்திதேவர் திருவாய்மலர்ந்தருளிய

ஸ்திரீ புருஷ
ஜாதகத்திறவுகோல்

3930

இஃது
சிலசோதிடர்கள் அனுக்கிரகத்தின்படி
செஞ்சி-ஏகாம்பரமுதலியா ரவர்களால்
எழுதப்பெற்றது.

சென்னை
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியா ரவர்களால்
வெளியிடப்பட்டது.
1930

காபிரைட் ரிஜிஸ்டார்ட்]

[விலை அணு 8.

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 6. LAWYER CHINNATHAMBI MUDALI STREET,
MADRAS.

உ

3930

கடவுள் துணை

ஸ்திரீபுருஷ ஜாதகத்திறவுகோல்

அட்டவணை

பெயர்	பக்கம்
அ	
அசுபதியின் பலன்	16
அஸ்த நட்சத்திர பலன்	22
அனுஷத்தின் பலன்	24
அவிட்டத்தின் பலன்	26
அசுவனி:—	
முதற்பாதத்தின் பலன்	28
இரண்டாம்பாதத்தின் பலன்	29
மூன்றாம்பாதத்தின் பலன்	29
நான்காம்பாதத்தின் பலன்	29
அஸ்தம்:—	
முதற்பாதத்தின் பலன்	36
இரண்டாம்பாதத்தின் பலன்	36
மூன்றாம்பாதத்தின் பலன்	36
நான்காம்பாதத்தின் பலன்	36
அனுஷம்:—	
முதற்பாதத்தின் பலன்	38
இரண்டாம்பாதத்தின் பலன்	38
மூன்றாம்பாதத்தின் பலன்	38
நான்காம்பாதத்தின் பலன்	38
அவிட்டம்:—	
முதற்பாதத்தின் பலன்	41
இரண்டாம்பாதத்தின் பலன்	41
மூன்றாம்பாதத்தின் பலன்	41
நான்காம்பாதத்தின் பலன்	42
ஆ	
ஆயிலியம்:—	
முதற்பாதத்தின் பலன்	33
இரண்டாம்பாதத்தின் பலன்	33
மூன்றாம்பாதத்தின் பலன்	34
நான்காம்பாதத்தின் பலன்	34
ஆயுற்பாவம்	65

பெயர்	பக்கம்
ஆயுற்பாவ பலன்	71
ஆயுற்பாவம்	75
ஆயுற்பாவம்	79
ஆயுற்யோக பலாபலன்	96
இ	
இராசிசங்கிரக விபரம்	2
இராசி நாழிகை	2
இராசி மாதங்கள்	2
இராசி உருவங்கள்	3
இராசி அங்கங்கள்	3
இராசி திக்குகள்	3
இராசியில் சஞ்சாரக்காலங்கள்	3
இராசி சாதிகள்	3
இராசி விழிப்புகள்	3
இருகால் ராசிகள்	4
இரா குருட்டு ராசிகள்	4
இரா செவிட்டு ராசிகள்	4
இராசிகளின் மூடம்	4
இரேவதியின் பலன்	28
இரேவதி:—	
முதற்பாதத்தின் பலன்	43
இரண்டாம்பாதத்தின் பலன்	43
மூன்றாம்பாதத்தின் பலன்	44
நான்காம்பாதத்தின் பலன்	44
இராசிபலன் கூறுகின்றன	44
இரஷபலக்கின பலன்	44
இனி பாப விதிகளை கிரக சஞ்சார மூலங்களாலும் அம்சவழியாலுங் கூறப் படும்	49
உடலுதைய ராசிகள்	4
உரோகணியின் பலன்	17

பெயர்	பக்கம்
உத்திரத்தின் பலன்	22
உத்திராடத்தின் பலன்	25
உத்திரட்டாதியின் பலன்	27
உரோகணி:—	
முதற்பாதத்தின் பலன்	30
இரண்டாம்பாதத்தின் பலன்	30
மூன்றாம்பாதத்தின் பலன்	31
நான்காம்பாதத்தின் பலன்	31
உத்திரம்:—	
முதற்பாதத்தின் பலன்	35
இரண்டாம்பாதத்தின் பலன்	35
மூன்றாம்பாதத்தின் பலன்	35
நான்காம்பாதத்தின் பலன்	36
உத்திராடம்:—	
முதற்பாதத்தின் பலன்	40
இரண்டாம்பாதத்தின் பலன்	40
மூன்றாம்பாதத்தின் பலன்	40
நான்காம்பாதத்தின் பலன்	41
உத்திரட்டாதி:—	
முதற்பாதத்தின் பலன்	43
இரண்டாம்பாதத்தின் பலன்	43
மூன்றாம்பாதத்தின் பலன்	43
நான்காம்பாதத்தின் பலன்	43
க	
கடகலக்கின பலன்	45
கன்னிலக்கின பலன்	46
கணவனுபுள் பாவம்	53
கணவனுபுள் யோக பலன்	59
கடகலக்கினத்திற் பிறந்தவர்களின் பலாபலன் கூறப்படும்	65
கணவனுடைய ஆயுளும் யோகாவ யோகத்தின் பலாபலன்	67
கணவன் ஆயுளும் யோகமுங் கூறுகின்றன	71
கணவன் ஆயுள் யோகபலன்	76
கணவன் யோகபலன்	80
களத்திரபல னறியும்வகை	107

பெயர்	பக்கம்
கா	
காலுதைய ராசிகள்	4
கார்த்திகையின் பலன்	17
கார்த்திகை:—	
முதற்பாதத்தின் பலன்	30
இரண்டாம்பாதத்தின் பலன்	30
மூன்றாம்பாதத்தின் பலன்	30
நான்காம்பாதத்தின் பலன்	30
கிரகங்களின் பெயர்	4
கிரகங்களின் சாதி	4
கிரகங்களின் நிறம்	5
கிரக அங்கங்கள்	5
கிரக குணங்கள்	5
கிரக பாஷைகள்	5
கிரக வாகனங்கள்	5
கிரக ரத்தினங்கள்	5
கிரக லோகங்கள்	5
கிரக தானியங்கள்	5
கிரக திக்குகள்	6
கிரக வூணகள்	6
கிரக சுவைகள்	6
கிரக தேவதைகள்	6
கிரக வடிவம்	6
கிரக ஆசனம்	6
கிரக புஷ்பம்	7
கிரக சமுத்து	7
கிரக விராசிகள்	7
கிரகங்களின் பார்வைகளறியும் வகை	10
கிராம்ச பலன்	50
கு	
கும்பலக்கின பலன்	48
கே	
கேந்திரஸ்தானமறியும் வகை	10
கேட்டையின் பலன்	24
கேட்டை:—	
முதற்பாதத்தின் பலன்	38
இரண்டாம்பாதத்தின் பலன்	39
மூன்றாம்பாதத்தின் பலன்	39

பெயர்	பக்கம்
நான்காம்பாதத்தின் பலன்	39
கோ	
கோணமென்பதறியும் வகை	10
ச	
சரவிராசிகள்	4
சனிக்கிழமையின் பலன்	15
சதையத்தின் பலன்	27
சனியங்கிச பலன்	52
சதயம்:—	
முதற்பாதத்தின் பலன்	42
இரண்டாம்பாதத்தின் பலன்	42
மூன்றும்பாதத்தின் பலன்	42
நான்காம்பாதத்தின் பலன்	42
சகோதரர்கள் அறியும் வகை	101
சா	
சாத்விகாதிகுண கிரகங்கள்	6
சாதகப்பலன் கிரகநிலை	90
சி	
சித்திரை நட்சத்திர பலன்	23
சித்திரை:—	
முதற்பாதத்தின் பலன்	36
இரண்டாம்பாதத்தின் பலன்	36
மூன்றும்பாதத்தின் பலன்	37
நான்காம்பாதத்தின் பலன்	37
சிம்பலக்கின பலன்	46
சிம்பலக்கினத்திற் பிறந்தவர்களின் யோகாவயோக பலன்களாவன	70
சு	
சுபக்கிரகங்கள் சுபக்கிரகங்களறியும் வகை	9
சுபர்களென்னறியும் வகை	9
சுபஸ்தான்மறியும் வகை	10
சுபக்கிரகம் புரபக்கிரகம் அறியும் விபரம்	12
சுவாதியின் பலன்	23
சுக்கிரன் அங்கிச பலன்	52
செ	
சென்மவாரபலன்கூறுகின்றன	12
செவ்வாய்க்கிழமையின் பலன்	14
சோ	
சோதி:—	
முதற்பாதத்தின் பலன்	37
இரண்டாம்பாதத்தின் பலன்	37
மூன்றும்பாதத்தின் பலன்	37
நான்காம்பாதத்தின் பலன்	37
ஞா	
ஞாயிற்றுக்கிழமையின் பலன்	12
த	
தலையுதையராசிகள்	4
தனுசுலக்கின பலன்	47
தனுசு மீனங்களில்பிறந்தவர்களின்பலாபலன்களாவன	75
தா	
தானவிபரங் கூறுகின்றன	12
தி	
திங்கட்கிழமையின் பலன்	13
திருவாதிரையின் பலன்	19
திருவோணத்தின் பலன்	26
திருவாதிரை:—	
முதற்பாதத்தின் பலன்	32
இரண்டாம்பாதத்தின் பலன்	32
மூன்றும்பாதத்தின் பலன்	32
நான்காம்பாதத்தின் பலன்	32
திருவோணம்:—	
முதற்பாதத்தின் பலன்	41
இரண்டாம்பாதத்தின் பலன்	41
மூன்றும்பாதத்தின் பலன்	41
நான்காம்பாதத்தின் பலன்	41
தீ	
தீர்க்காயுளறியும் வகை	94
தீர்க்காயுளும் செல்வமும் அறியும் வகை	95
து	
துலாலக்கின பலன்	46
தூ	
தூமாதி பஞ்சகிரகங்கள்	7
ந	
நட்பாட்சியுச்சம் பகை நீசம் கூறுகின்றது	16

பெயர்	பக்கம்
நட்சத்திர பலன்களாவன	16
நா	
நாற்கால் ராசிகள்	4
நூ	
நூலின் வரலாறு	2
ப	
பலகால் ராசிகள்	4
பறக்கும் ராசிகள்	4
பகற்குருட்டு ராசிகள்	4
பகற்செவிட்டு ராசிகள்	4
பஞ்சபூத கிரகங்கள்	6
பரணியின் பலன்	16
பரணி:—	
முதற்பாதத்தின் பலன்	29
இரண்டாம்பாதத்தின் பலன்	29
மூன்றும்பாதத்தின் பலன்	29
நான்காம்பாதத்தின் பலன்	30
பா	
பாபக்கிரகங்களறியும் வகை	9
பாபஸ்தானமறியும் வகை	10
பாபக்கிரகங்கள் பலன்தரு மிடம் அறியும் வகை	10
பி	
பிதுர்ப்பலன் அறியும் வகை	105
பு	
புதன்கிழமையின் பலன்	14
புனர்பூசத்தின் பலன்	19
புனர்பூசம்:—	
முதற்பாதத்தின் பலன்	32
இரண்டாம்பாதத்தின் பலன்	32
மூன்றும்பரதத்தின் பலன்	32
நான்காம்பாதத்தின் பலன்	33
புதனங்கிசப் பலன்	52
புத்திரயோகாவயோக பலன்	55
புத்திர பலன்	56
புத்திரயோகாவ யோகப் பலன்களாவன	62
புத்திரயோகாவயோக பலன்	68
புத்திரயோகாவயோக பலன்	73
புத்திரயோகாவயோக பலன்	78
புத்திரயோகாவயோக பலன்	81
புருஷஜாதகத் திறவுகோல்	85
பூ	
பூசத்தின் பலன்	19
பூரத்தின் பலன்	21
பூராடத்தின் பலன்	25
பூரட்டாதியின் பலன்	27
பூசம்:—	
முதற்பாதத்தின் பலன்	33
இரண்டாம்பாதத்தின் பலன்	33
மூன்றும்பாதத்தின் பலன்	33
நான்காம்பாதத்தின் பலன்	33
பூரம்:—	
முதற்பாதத்தின் பலன்	35
இரண்டாம்பாதத்தின் பலன்	35
மூன்றும்பாதத்தின் பலன்	35
நான்காம்பபதத்தின் பலன்	35
பூராடம்:—	
முதற்பாதத்தின் பலன்	40
இரணடாம்பாதத்தின் பலன்	40
மூன்றும்பாதத்தின் பலன்	40
நான்காம்பாதத்தின் பலன்	40
பூரட்டாதி:—	
முதற்பாதத்தின் பலன்	42
இரண்டாம்பாதத்தின் பலன்	42
மூன்றும்பாதத்தின் பலன்	43
நான்காம்பாதத்தின் பலன்	43
பெ	
பெண்ராசி யல்லது இரட்டைராசி	4
பொதுலட்சணங் கூறுகின்றன	11
பொதுலட்சணம் முற்றுப் பெற்றன	12
ம	
மகத்தின் பலன்	21
மகம்:—	
முதற்பாதத்தின் பலன்	34

பெயர்	பக்கம்
இரண்டாம்பாதத்தின் பலன்	34
மூன்றாம்பாதத்தின் பலன்	34
நான்காம்பாதத்தின் பலன்	34
மகரலக்கின பலன்	48
மகர கும்பலக்கினத்திற் பிறந்தவர்களின் யோகாவயோக பலன்களாவன	79
மலடாவதறியும் வகை	99
மா	
மாதுருபலனறியும் வகை	103
மீ	
மிருகசீரிடத்தின் பலன்	18
மிருக சீரிடம்:—	
முதற்பாதத்தின் பலன்	31
இரண்டாம்பாதத்தின் பலன்	31
மூன்றாம்பாதத்தின் பலன்	31
நான்காம்பாதத்தின் பலன்	31
மிதுனலக்கின பலன்	45
மீ	
மீனலக்கின பலன்	48
மு	
முகவுரை	1
முப்பிணி கிரகங்கள்	6
மூ	
மூலத்தின் பலன்	24
மூலம்:—	
முதற்பாதத்தின் பலன்	39
இரண்டாம்பாதத்தின் பலன்	39
மூன்றாம்பாதத்தின் பலன்	39
நான்காம்பாதத்தின் பலன்	39
மே	
மேஷலக்கின பலன்	44
மேஷவிருச்சிக பலன்	49
யோ	
யோகாவயோக பலன்	57
வி	
வியாழக்கிழமையின் பலன்	15
விசாகத்தின் பலன்	23
விசாகம்:—	
முதற்பாதத்தின் பலன்	37
இரண்டாம்பாதத்தின் பலன்	38
மூன்றாம்பாதத்தின் பலன்	38
நான்காம்பாதத்தின் பலன்	38
விருச்சிகலக்கின பலன்	47
விருஷபதுலாலக்கின பலன் ஆயுற்பாவம்	58
வெகு புத்திரருண்டாவதறியும் வகை	96
ஸ்திரீ ஜாதகத்திறவுகோல்	11

3930

நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார் இயற்றியவை.

	ரூ.	அ.
ஞானசெல்வாம்பாள் 5 பாகம்	9	10
கற்பகச்சோலையின் அற்புதக் கொலை	1	4
கடற்கொள்ளைக்காரன் 2 பாகம்	3	4
மதனும்பாள் 2-பாகம் ...	3	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச்சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	0
தபால்கொள்ளைக்காரர்கள்	0	14
இந்திராபாய் ...	2	8
அமராவதி 2-பாகங்கள் ...	4	0
மஞ்சள்அறையின் மர்மம் ...	1	8
கற்கோட்டை ...	2	0
பூங்கோதை ...	0	10
வீரநாதன் ...	0	12
கனகபூஷணம் 2 பாகமும்	3	0
கமலசேகரன் ...	1	12
தீனகரசுந்தரி ...	1	0
ரத்னபுரி ரகசியம் 3-பாகமும்	6	0
சந்திராபாய் ...	2	0
ஸ்ரீராஜாமணி ...	2	0
இரத்தினபாய் ...	1	12
மதனபூஷணம் ...	1	0
சுவர்ணம்பாள் ...	0	12
தேவசுந்தரி ...	1	4
குணசுந்தரன் ...	0	12
பத்மாஸனி ...	0	14
ஆனந்தஸிங் ...		0
மின்சாரமாயவன் ...	1	8
ஆனந்தஸிங்கின் அஷ்டஜயங்கள்	1	12
அர்ஜுனஸிங், சுந்தர் ...	0	2
கைவல்லிய நவநீத வசனம்	1	8
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	1	12
சகோதரவாஞ்சை ...	0	7

	ரூ.	அ.
தத்வஸங்க்ரஹ ராமாயணம்	4	0
விவேகாநந்தர் ...	4	0
தமிழ் மெடீரியா மெடிகா ...	3	0
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	0
மலையாளபகவதி ...	1	0
அற்புத நவநீதரம்பை ...	1	0
அகட விகட விலாச விநோதம்	0	10
தயாளன் கதை ...	0	12
பூலோக லக்ஷ்மிகதை ...	0	10
கனகரத்தினம் ...	0	8
கண்டிராஜா நாடகம் ...	0	12
நளினசுந்தரி ...	0	10
கம்பராமாயணசங்கிரகவசனம்	2	0
குசேலோபாக்கியானவசனம்	1	0
ஸ்ரீபாலன் ...	0	10
உதயணன் ...	0	8
தசக்கிரீவன் ...	0	14
போஜ சரித்திரம் ...	0	5
சதானந்தர் ...	1	4
ஜீவகன்வசனம் ...	1	0
கர்ணன் சரிதை ...	0	12
பீஷ்மவிஜயம் ...	0	10
கீர்த்திசிங்கன் ...	0	8
மூப்பெருந்தாசர் ...	0	10
அரிச்சந்திரன் சரிதை ...	0	8
நீலக்கொடி ...	0	5
மணவாளன் ...	0	8
பரசுராமன் ...	0	8
சிசுபாலன் ...	0	8
அங்கதன் ...	0	4
தசாவதாரம் ...	0	6
கிருஷ்ணன் தூது வசனம்	0	8
சண்டோபாக்கியானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும்	0	8
சத்தியவசனி ...	0	4
விமலன் ...	0	4
கண்ணபிரான் ...	0	4
செய்யுட்பாடத்திரட்டு ...	0	4
நாலுமந்திரிகதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	8
தக்கன் ...	0	6
சீமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோச விளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	8
மேனாமினுக்கி கதை ...	0	8
வீணாகானன்ஞானேந்திரி ...	0	8
மனோன்மணி கதை ...	0	8
சோமளவல்லி கதை ...	0	8
விகடவல்லி கதை ...	0	6
கமலமதி ...	0	8
காமசேன ரசிகா ...	0	8
பூர்ணவல்லி ...	0	6
ஸ்திரீபுருஷஜாதக திறவுகோல்	0	8
தாலிகட்ட மறந்த கதை ...	0	5

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

உ

கடவுள் துணை.

நந்திதேவர் திருவாய் மலர்ந்தருளிய

ஸ்திரீபுருஷ ஜாதகத் திறவுகோல்

விநாயகர் காப்பு

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

விந்தையுட னிப்புவியோ ரனுபவமாய்க் கண்டுணர்ந்து
விளம்ப நன்றாய்
சிந்தைகளி கூர்ந்துநந்தி தேவர்சொன்ன சோதிடத்தைச்
சிந்தா தாய்ந்து
சுந்தரமாஞ் ஸ்திரீபுருஷ ஜாதகத் திறவுகோலைச்
சொல்க வின்றுக்
கந்தமிகுங் கரிமுகவ னிருகமலப் பொன் சரணங்
காப்பதாமே.

முகவுரை.

விருத்தம்

சீரினமா மின்னூலின் செயலைக் கேளீர்
ஸ்திரீபுருஷ ஜாதகத்திறவு கோலைப்
பூரணமாய்க் கண்டுமனம் பூர்த்திகொண்டு
புகழாகுஞ் செனனஞ் சுகாசுகமுந் தீர்க்கம்
ஆரினமா யாயுளொடு மகவின் விருத்தி
அருள் செல்வம் யோகாவ யோகம் யாவும்
சேரினமாய்ப் பலாபலன்கள் செப்ப யின்னூல்
செஞ்சி ஏகாம்பரமும் வெளியிட்டேனே.

இதுவுமது

வெளியிட்ட ஸ்திரீபுருஷ ஜாதகத்தை
வேண்டியே கையேந்திக் கண்ணுற்றே தான்
ஒளிவாக வெள்ளுக்காய்ப் பிளந்தாற் போலும்
உகமையுடன் பலாபலனை யுணர்ந்து நன்றாய்

தெளிவாக வெடுத்துரைக்கப் புகழ்வாருன்னை
தியங்காதே யிந்நூலைக் கைவிடாதே
நளிவான நந்திதேவர் கடாட்சமோங்க
நானிலத்திற் சொல்லிபுகழ் கொண்டிடாயே.

நூலின் வரலாறு

இராசி சங்கிரக விபரம்.

12 மீனம்	1 மேஷம்	2 ரிஷபம்	3 மிதுனம்
11 கும்பம்	இராசி சக்கரம்		4 கடகம்
10 மகரம்			5 சிங்கம்
9 தனுசு	8 விருச்சிகம்	7 துலாம்	6 கன்னி

இராசி நாழிகை		இராசி மாதங்கள்	
மேஷம்	$4\frac{1}{4}$	மேஷம்	சித்திரை
ரிஷபம்	$4\frac{3}{4}$	ரிஷபம்	வைகாசி
மிதுனம்	$5\frac{1}{4}$	மிதுனம்	ஆனி
கடகம்	$5\frac{1}{2}$	கடகம்	ஆடி
சிங்கம்	$5\frac{1}{4}$	சிங்கம்	ஆவணி
கன்னி	5	கன்னி	புரட்டாசி
துலாம்	5	துலாம்	ஐர்ப்பிசி
விருச்சிகம்	$5\frac{1}{4}$	விருச்சிகம்	கார்த்திகை
தனுசு	$5\frac{1}{2}$	தனுசு	மார்கழி
மகரம்	$5\frac{1}{4}$	மகரம்	தை
கும்பம்	$4\frac{3}{4}$	கும்பம்	மாசி
மீனம்	$4\frac{1}{4}$	மீனம்	பங்குனி

ஆக இராசிமீ 12

இராசி உருவங்கள்

மேஷம்	வெள்ளாடு
ரிஷபம்	எருது
மிதுனம்	ஸ்திரீ புருஷாள்
கடகம்	ஞெண்டு
சிங்கம்	சிம்பம்
கன்னி	பெண்
துலாம்	தராசு
விருச்சிகம்	தேள்
தனுசு	வில்
மகரம்	முதலை
கும்பம்	குடம்
மீனம்	மீன்

இராசி அங்கங்கள்

மேஷம்	தலை
ரிஷபம்	முகம்
மிதுனம்	கழுத்து
கடகம்	தோள்
சிங்கம்	மார்பு
கன்னி	பக்கம்
துலாம்	முதுகு
விருச்சிகம்	பீஜம்
தனுசு	தொடை
மகரம்	முழங்கால்
கும்பம்	கணுக்கால்
மீனம்	பாதம்

இராசி திக்குகள்

மேஷம்	கிழக்கு
ரிஷபம்	கிழக்கு
மிதுனம்	கிழக்கு
கடகம்	தெற்கு
சிங்கம்	தெற்கு
கன்னி	தெற்கு
துலாம்	மேற்கு
விருச்சிகம்	மேற்கு
தனுசு	மேற்கு
மகரம்	வடக்கு
கும்பம்	வடக்கு
மீனம்	வடக்கு

இராசிகளில் கிரகங்கள் சஞ்சாரக்கால அளவு

சூரியன் புதன் சுக்கிரனுக்கு மாதம்(1),செவ்வாருயிக்குமாதம் (1½), குருவுக்கு வருடம் (1), இராகு கேதுகளுக்கு வருடம் (1½), சனிக்கு வருடம் (2½), சந்திரனுக்கு நாள் (2¼)

இராசி ஜாதிகள்

கடகம்	பிராமண சாதி
விருச்சிகம்	பிராமண சாதி
மீனம்	பிராமண சாதி
தனுசு	க்ஷத்திரிய சாதி
மேஷம்	க்ஷத்திரிய சாதி
சிம்பம்	க்ஷத்திரிய சாதி
துலாம்	வைசிய சாதி
கும்பம்	வைசிய சாதி
மிதுனம்	வைசிய சாதி
கன்னி	சூத்திர சாதி
ரிஷபம்	சூத்திர சாதி
மகம்	சூத்திர சாதி

இதுவுமது

மேஷம்	வெள்ளாழன்
ரிஷபம்	இடையன்
மிதுனம்	சக்கிலியன்
கடகம்	கன்னன்
சிங்கம்	பிராமணன்
கன்னி	நாவிதன்
துலாம்	செட்டி
விருச்சிகம்	வேடன்
தனுசு	தட்டான்
மகரம்	வண்ணான்
கும்பம்	குயவன்
மீனம்	பறையன்

இராசி நிறங்கள்

மகரம்	கருமை
கன்னி	கருமை
மிதுனம்	கருமை
விருச்சிகம்	பச்சை
கும்பம்	பச்சை
மீனம்	பச்சை

மேஷம்	செம்மை
தனுசு	செம்மை
சிங்கம்	செம்மை
ரிஷபம்	வெண்மை
துலாம்	வெண்மை
கடகம்	வெண்மை

இராசி விழிப்புகள்

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம், இந்த (6) இராசியும் இராமுழுதும்சந்திரனுக்குரவாய் விழிக்கும்.

ஆண்ராசி அல்லது ஒற்றை ராசி

மேஷம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், இந்த ஆறு யிராசியுமே யாகும்.

பெண்ராசி அல்லது இரட்டை ராசி

ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம், இந்த ஆறு யிராசியுமே பாகும்.

சரவி ராசிகள்

மேஷம்	சரம்
ரிஷபம்	ஸ்திரம்
மிதுனம்	உபயம்
கடகம்	சரம்
சிங்கம்	ஸ்திரம்
கன்னி	உபயம்
துலாம்	சரம்
விருச்சிகம்	ஸ்திரம்
தனுசு	உபயம்
மகரம்	சரம்
கும்பம்	ஸ்திரம்
மீனம்	உபயம்

இருகால் ராசிகள்

மிதுனம், கன்னி, துலாம், கும்பம், இவை நான்குமேயாம்.

நாற்கால் ரர்சிகள்

மேஷம், ரிஷபம்,சிங்கம்,தனுசு, இவை நான்குமேயாம்.

பலகால் ராசிகள்

கடகம், விருச்சிகம், இவைகள் இரண்டுமேயாம்.

பறக்கும் ராசிகள்

மகரம், மீனம், இவைகள் இரண்டுமேயாம்.

தலையுதைய ராசிகள்

மிதுனம், சிங்கம், கன்னி, விருச்சிகம், கும்பம், இவைகள் ஐந்துமேயாம்.

காலுதைய ராசி

மேஷம், இரிஷபம், கடகம், தனுசு, மகரம், இவைகள் ஐந்துமேயாம்.

உடலுதைய ராசி

மீனம், ஒன்றே யாகுமென மேலோர் கூறுகின்றனர்.

பகற்ருட்டு ராசிகள்

மேஷம், இரிஷபம், சிங்கம், இவைகள் மூன்றுமேயாம்

இராதருட்டு ராசிகள்

மிதுனம், கடகம், கன்னி இவைகள் மூன்றுமேயாம்.

பகற்சேவிட்டு ராசிகள்

துலாம், விருச்சிகம், இவைகள் இரண்டுமேயாம்.

இராசேவிட்டு ராசிகள்

தனுசு, மகரம், இவைகள் இரண்டுமேயாம்.

இராசிகளின் மூடம்

கும்பம் பகல் மூடம், மீனம் இராமூடமாகு மென்றறியவும்.

கிரகங்களின் பெயர்

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவைகள் ஒன்பதுமேயாம்.

கிரகங்களின் சாதி

சூரியன்	அரசன்
சந்திரன்	பெண்
செவ்வாய்	ஆண்
புதன்	வைசியன்
குரு	புருஷன்
சுக்கிரன்	பெண்

சனி	சூத்திரன்
இராகு	பாம்பு
கேது	யினகுலம்

கிரகங்களின் நிறம்

சூரியன்	பவளம்
சந்திரன்	தவளம்
செவ்வாய்	செகப்பு
புதன்	பச்சை
குரு	குங்குமம்
சுக்கிரன்	வெண்மை
சனி	மைநிறம்
இராகு	கருமை
கேது	செம்மை

கிரக அங்கங்கள்

சூரியன்	மார்பு
சந்திரன்	தோள்
செவ்வாய்	தலை
புதன்	கழுத்து
குரு	வயறு
சுக்கிரன்	முகம்
சனி	தொடை
இராகு	முழங்கால்
கேது	உள்ளங்கால்

கிரக குணங்கள்

சூரியன்	குரூரன்
சந்திரன்	சௌமியன்
செவ்வாய்	குரூரன்
புதன்	சௌமியன்
குரு	சௌமியன்
சுக்கிரன்	சௌமியன்
சனி	குரூரன்
இராகு	குரூரன்
கேது	குரூரன்

சந்திரன் வளர்ப்பிறையில் சவுமியன், தேய்ப்பிறையில் குரூரனாகக் கொள்கவும்.

கிரக பாஷைகள்

சூரியன்	சமஸ்கிருதம்
சந்திரன்	தமிழ்
செவ்வாய் மந்திரம்,	தெலுங்கு
புதன்	சோதிடம்
குரு	சமஸ்கிருதம்
சுக்கிரன்	சமஸ்கிருதம்
சனி	அன்னிய பாஷை
இராகு	அன்னிய பாஷை
கேது	அன்னிய பாஷை

கிரக வாகனங்கள்

சூரியனுக்கு	தேர்
சந்திரனுக்கு	முத்து விமானம்
செவ்வாய்க்கு	அன்னம்
புதனுக்கு	குதிரை
குருவுக்கு	யானை
சுக்கிரனுக்கு	கருடன்
சனிக்கு	காகம்
இராகுக்கு	ஆடு
கேதுக்கு	சிங்கம்

கிரக ரத்தினங்கள்

சூரியன்	மாணிக்கம்
சந்திரன்	முத்து
செவ்வாய்	பவளம்
புதன்	பச்சை
குரு	புஷ்பராகம்
சுக்கிரன்	வயிரம்
சனி	நீலம்
இராகு	கோமேதகம்
கேது	வைடூரியம்

கிரக லோகங்கள்

சூரியனுக்கு தம்பாக்கு, சூரிய காந்தம், சந்திரனுக்கு ஈயம், சந்திர காந்தம்.

செவ்வாய்க்கு	செம்பு
புதனுக்கு	பித்தளை
குருவுக்கு	பொன்
சுக்கிரனுக்கு	வெள்ளி
சனிக்கு	இரும்பு
இராகுக்கு	கருங்கல்
கேதுக்கு	துருக்கல்

கிரக தானியங்கள்

சூரியன்	கோதுமை
சந்திரன்	நெல்லு
செவ்வாய்	துவரை
புதன்	பச்சைபயறு

குரு	கடலை
சுக்கிரன்	மொச்சை
சனி	எள்ளு
இராகு	உளுந்து
கேது	கொள்

கிரக திக்குகள்

சூரியன்	நடுமையம்
சந்திரன்	தென்கிழக்கு
செவ்வாய்	தெற்கு
புதன்	வடகிழக்கு
குரு	வடக்கு
சுக்கிரன்	கிழக்கு
சனி	மேற்கு
இராகு	தென்மேற்கு
கேது	வடமேற்கு

கிரக வூண்கள்

சூரியன்	சுடுகை
சந்திரன்	குளிர்ச்சி
செவ்வாய்	சுடுகை
புதன்	சீதோஷ்ணம்
குரு	சுடுகை
சுக்கிரன்	குளிர்ச்சி
சனி	சீதோஷ்ணம்
இராகு	சீதோஷ்ணம்
கேது	சீதோஷ்ணம்

கிரக சுவைகள்

சூரியனுக்கு	கார்ப்பு
சந்திரனுக்கு	தித்திப்பு
செவ்வாய்க்கு	துவர்ப்பு
புதனுக்கு	உவர்ப்பு
குருவுக்கு	தித்திப்பு
சுக்கிரனுக்கு	தித்திப்பு
சனிக்கு	கைப்பு
இராகுக்கு	பளிப்பு
கேதுக்கு	புளிப்பு

கிரக தேவதைகள்

சூரியன்	உருத்திரன்
சந்திரன்	விஷ்ணு
செவ்வாய்	சுப்பிரமணியர்
புதன்	விஷ்ணு
குரு	பிரமன்
சுக்கிரன்	பிரமன்
சனி	அன்னியதேவதை
இராகு	பத்திரகாளி
கேது	பத்திரகாளி

பஞ்சபூத கிரகங்கள்

சூரியன்	தேய்வு
சந்திரன்	அப்பு
செவ்வாய்	பிரிதிவு
புதன்	வாய்வு
குரு	தேய்வு
சுக்கிரன்	அப்பு
சனி	ஆகாயம்
இராகு	ஆகாயம்
கேது	ஆகாயம்

கிரக வடிவம்

சூரியன்	சமனாவர்
சந்திரன்	குரியர்
செவ்வாய்	குரியர்
புதன்	நெடியர்
குரு	நெடியர்
சுக்கிரன்	சமனாவர்
சனி	குரியர்
இராகு	நெடியர்
கேது	நெடியர்

சாத்விகாதிகுண கிரகங்கள்

சூரியன்	தாமசர்
சந்திரன்	சாத்மீகர்
செவ்வாய்	இராட்சதர்
புதன்	தாமசர்
குரு	சாத்மீகர்
சுக்கிரன்	இராட்சதர்
சனி	தாமசர்
இராகு	தாமசர்
கேது	தாமசர்

மூப்பிணி கிரகங்கள்

சூரியன்	பித்தம்
சந்திரன்	சிலேத்துமம்
செவ்வாய்	பித்தம்
புதன்	வாதம்
குரு	வாதம்

சுக்கிரன்	சிலேத்துமம்
சனி	வாதம்
இராகு	பித்தம்
கேது	பித்தம்

கிரக ஆசனம்

சூரியனுக்கு	வட்டவடிவம்
சந்திரனுக்கு	சவுக்கவடிவம்
செவ்வாய்க்கு	திருவோணவடிவம்
புதனுக்கு	அம்புவடிவம்
குருவுக்கு	நீண்ட சவுக்கவடிவம்
சுக்கிரனுக்கு	ஐங்கோணவடிவம்
சனிக்கு	வில்வடிவம்
இராகுக்கு	கொடிவடிவம்
கேதுக்கு	முச்சல்வடிவம்

கிரக புஷ்பம்

சூரியனுக்கு	செந்தாமரை
சந்திரனுக்கு	வெள்ளல்லி
செவ்வாய்க்கு	செண்பகம்
புதனுக்கு	வெண்காந்தல்
குருவுக்கு	முல்லை
சுக்கிரனுக்கு	வெண்டாமரை
சனிக்கு	கருங்குவளை
இராகுக்கு	மந்தாரை
கேதுக்கு	செவ்வல்லி

கிரக சமுத்து

சூரியனுக்கு	எருக்கு
சந்திரனுக்கு	முருக்கு
செவ்வாய்க்கு	கருங்காலி
புதனுக்கு	நாயுருவி
குருவுக்கு	அரசு
சுக்கிரனுக்கு	அத்தி
சனிக்கு	வன்னி
இராகுக்கு	அருகு
கேதுக்கு	அருகு

கிரக விராசிகள்

சூரியனுக்கு	சிங்கம்
சந்திரனுக்கு	கற்கடகம்
செவ்வாய்க்கு	மேஷம், விருச்சிகம்
புதனுக்கு	மிதுனம், கன்னி
சுக்கிரனுக்கு	ரிஷபம், துலாம்
சனிக்கு	மகரம், கும்பம்
இராகுக்கு	கன்னி
கேதுக்கு	மீனம்
குளிகனுக்கு	மீனம்

இவை ஆட்சி வீடாம்.

கிரகங்களுக்கு உச்சராசிகள்

சூரியனுக்கு	மேஷம்
சந்திரனுக்கு	ரிஷபம்
செவ்வாய்க்கு	மகரம்
புதனுக்கு	கன்னி
குருவுக்கு	கடகம்
சுக்கிரனுக்கு	மீனம்
சனிக்கு	துலாம்
இராகுக்கு	ரிஷபம், கடகம்
கேதுக்கு	விருச்சிகம், மகரம்
குளிகனுக்கு	விருச்சிகம், மகரம்

தூமாதி பஞ்ச கிரகங்களின் உச்சவீடு

தூமனுக்கும் தூமகேதுக்கும் சிங்கம், இந்திரனுக்கு விருச்சிகம் தனுசு, பரிவேடனுக்கு மிதுனம், விதி பாதகனுக்கு கும்பம், நட்பனுக்கு கும்பம் உச்ச வீடாம்.

நட்பாட்சி, உச்சம், பகை, நீசம், கூறுகின்றன.

முதலாவது

சூரியனுக்கு	மேஷ ராசி	உச்சமாகும்
சந்திரனுக்கு	ரிஷப ராசி	உச்சமாகும்
செவ்வாய்க்கு	மகர ராசி	உச்சமாகும்
புதனுக்கு	கன்னியா ராசி	உச்சமாகும்
குருவுக்கு	கடக ராசி	உச்சமாகும்

சுக்கிரனுக்கு	மீன ராசி	உச்சமாகும்
சனிக்கு	துலா ராசி	உச்சமாகும்
இராகுக்கு	விருச்சிக ராசி	உச்சமாகும்
கேதுக்கு	விருச்சிக ராசி	உச்சமாகும்

இரண்டாவது

சூரியனுக்கு	சிம்பராசி	ஆட்சியாகும்
சந்திரனுக்கு	கடக ராசி	ஆட்சியாகும்
செவ்வாய்க்கு	மேஷம், ரிஷபம்	ஆட்சியாகும்
புதனுக்கு	மிதுனம், கன்னி	ஆட்சியாகும்
குருவுக்கு	தனுசு, மீனம்	ஆட்சியாகும்
சுக்கிரனுக்கு	ரிஷபம், துலாம்	ஆட்சியாகும்
சனிக்கு	மகரம், கும்பம்	ஆட்சியாகும்
இராகுக்கு	மகரம்	ஆட்சியாகும்
கேதுக்கு	மேஷம்	ஆட்சியாகும்

மூன்றுவது

சூரியனுக்கு	தனுசு, கடகம், கும்பம், மீனம்	நட்பாகும்
சந்திரனுக்கு	கன்னி, தனுசு, மேஷம்	நட்பாகும்
செவ்வாய்க்கு	மிதுனம், சிம்பம், துலாம், மீனம்	நட்பாகும்
புதனுக்கு	துலாம், மகரம், மேஷம், சிம்பம்	நட்பாகும்
குருவுக்கு	கும்பம், மேஷம், மிதுனம், விருச்சிகம்	நட்பாகும்
சுக்கிரனுக்கு	தனுசு, கும்பம், மேஷம்	நட்பாகும்
சனிக்கு	மிதுனம், சிம்பம், விருச்சிகம்	நட்பாகும்
இராகுக்கு	மீனம், மிதுனம், துலாம்	நட்பாகும்
கேதுக்கு	மீனம், மிதுனம், துலாம். மேஷம், மகரம்	நட்பாகும்.

நான்காவது

சூரியனுக்கு	மகரம், ரிஷபம், மிதுனம், விருச்சிகம்	பகை
சந்திரனுக்கு	மிதுனம், சிம்பம், துலாம், மகரம், கும்பம் மீனம்	[பகை
செவ்வாய்க்கு	ரிஷபம், கன்னி, தனுசு, கும்பம்	பகை
புதனுக்கு	தனுசு, கும்பம், ரிஷபம், கடகம்	பகை
குருவுக்கு	ரிஷபம், சிம்பம், கன்னி, துலாம்	பகை
சுக்கிரனுக்கு	மகரம், விருச்சிகம், மிதுனம், கடகம், சிம்பம்	பகை
சனிக்கு	மீனம், ரிஷபம், கடகம், தனுசு	பகை

ராகுக்கு தனுசு, கும்பம், மேஷம், கடகம், சிம்பம், கன்னி பகை,
கேதுக்கு தனுசு, கும்பம், கடகம், சிம்பம், கன்னி, பகை.

ஐந்தாவது

சூரியனுக்கு	துலாம்	நீசமாகும்
சந்திரனுக்கு	விருச்சிகம்	நீசமாகும்
செவ்வாய்க்கு	கடகம்	நீசமாகும்
புதனுக்கு	மீனம்	நீசமாகும்
குருவுக்கு	மகரம்	நீசமாகும்
சுக்கிரனுக்கு	கன்னி	நீசமாகும்
சனிக்கு	மேஷம்	நீசமாகும்
இராகுக்கு	ரிஷபம்	நீசமாகும்
கேதுக்கு	ரிஷபம்	நீசமாகும்

கேந்திர திரிகோண மென்பதையும் (3), (6), (8), (12), (2), இந்த ஸ்தானங்களை ஜெனனமான லக்கினம் முதற்கொண்டுப் பார்த்துக் கொள்ளவேண்டியது.

சுபக்கிரகம் அசுபக்கிரகம் அறியும் வகை

சுபக்கிரகங்களாவது யாதெனில்—வியாழன், சுக்கிரன், புதன், சந்திரன், இவைகள் நான்குமேயாம். அசுபமென்னும் பாபக்கிரகங்களாவது யாதெனில்—சனி, இராகு, கேது, செவ்வாய், சூரியன், இவைகள் ஐந்துமேயாம்.

சுபர்களை யெண்ணறியும் வகை

வியாழன் முழுசுபன், சுக்கிலபட்சம் பஞ்சமி முதல் கிருஷ்ண பட்சம் பஞ்சமி வரையில் ஜெனித்த ஜாதகங்களுக்கு சந்திரனும் முழுசுபன். சுக்கிலபட்சம் பிரதமை முதல் சுக்கிலபட்சம் பஞ்சமி வரையில் செனித்தவர்களுக்கு சந்திரன் காற்சுபனென்றும் தெரிந்துக் கொள்ளவும். அன்றியும் சுக்கிரன் முக்கால் சுபன். புதன் அரை சுபனென்றும் கூறப்படும்.

பாபக்கிரகங்கள் அறியும் வகை

சனி, இராகு, கேது, இவர்கள் முழுப்பாபிகள். செவ்வாய், முக்கால் பாபி. சூரியன் அரைப்பாபி. பாபர்களுடனே கூடியிருக்கும் சந்திரன், புதன், இவர்கள் காற்பாபிகள். குரு, சனி, இராகு கேதுக்களுடன் கூடியிருக்கில் சனிபோலப் பாபியென்றும், சந்திரன் அமாவாசையில் புதனுடன் கூடியிருக்கில் சந்திரனுக்கு முக்கால் சுப பலனென்றும் கூறப்படும்.

சுபஸ்தானம் அறியும் வகை

ஜென்மலக்கினத்திற்கு (1), (4), (7), (10), (5), (9), இந்த ஆறு ஸ்தானங்களும் சுப விடங்களாகும். சுபஸ்தானத்தில் யாரிருந்தால் சுப பலத்தைக் கொடுப்பார்களெனில் (1), (4), (7), (10), (5), (9), இந்த சுபஸ்தானங்களில் குரு, சந்திரன், சுக்கிரன், புதன், இவர் களிருக்கில் சுப பலத்தையும் இராஜ யோகத்தையுங் கொடுப்பார் களெனக் கூறப்படும்.

பாபஸ்தானம் அறியும் வகை

ஜென்மலக்கினத்திற்கு (6), (8), (12), இந்த ஸ்தானங்களில் நிற்கில் கெட்டப் பலனைக் கொடுப்பார்கள். (2), (3), (11), இந்த ஸ்தானங்களில் மத்திய பலனும் சமகஷ்ட பலன்களையும் நிரவிக் கொடுப்பார்களெனக் கூறப்படும்.

பாபக்கிரகங்கள் பலந்தருமிடம் அறியும் வகை

ஜென்மலக்கினத்திற்கு (1), (4), (5), (6)ல் சனி, இராகு, கேது, இவர்கள் நிற்கில் கெடுதல் பலன் தருகுவர். செவ்வாய், சூரியன், இவர்கள் (1), (2), (7), (8), (12)ல் இருக்கில் கெடுதற் பலனைக் கொடுப்பார்கள். மற்ற விடங்களிலிருக்கில் உத்தம சுப பலன் கொடுப்பார்களெனக் கூறப்படும்.

கேந்திரஸ்தானம் அறியும் வகை

ஒரு சிசு ஜெனித்த இலக்கின முதற்கொண்டு (5), (4), (7), (10), இந்த ஸ்தானங்களே யாகும். சிலர் கேந்திரத்தைக் கண்டமென் றும் சதுஷ்டயமென றும் வடமொழிகளில் கூறுவதுமுண்டு.

கோணமென்பதறியும் வகை

ஒருவன் ஜெனித்த இலக்கின முதல் (5)வது, (9)வது ஸ்தா னங்களே யாகுமெனக் கூறப்படும்.

கிரகங்களின் பார்வையறியும் வகை

வியாழன் தானிருக்கும் இடமுதல் (5), (7), (9), ஆமிடங்களை யும், சனி தானிருக்கும் இடமுதல் (3), (7), (10) ஆமிடங்களையும், செவ்வாய் தானிருக்கும் இடமுதல் (4), (7), (8),வது இடங்களை யும் நோக்கும் மற்றக்கிரகங்கள் அவரவர்களிருக்கும் இடமுதல் (7) ஆமிடத்தையே நோக்குமெனக் கூறப்படும்.

ஸ்திரீ ஜாதகத் திறவுகோல்

பொது லக்ஷணங் கூறுகின்றன

விருத்தம்

சீரோங்கும் பெண்களிடச் சாதகந்தான்
 செப்புதற்கு யின்னூலை செயலென்றெண்ணி
நோகப் புகர்கின்ற யிராசியோர்ந்து
 நிதைந்த மதித்தானின்ற நிலையுங்கண்டு
பேரோங்குஞ் ஜென்ம லக்கினமும் பார்த்து
 பெருமையுடன் யிவைமூன்று முதலாய் கொண்டு
தாரோங்கப் பலாபலனைத் தெளிவாய்ச் சொல்லி
 தவமுனையி னருள்பெருக யின்னங்கேளே.

(இதன் பொருள்.) பெண்களின் ஜாதகத்தைப் பார்க்க வேண்டிய:முறைமை யென்னவெனில்: சுக்கிரன் நின்ற இராசியும், சந்திரன் நின்ற இராசியும் ஜெனன லக்கினமும் இவை மூன்றும் முதன்மையாகக் கொண்டு பார்க்கவேண்டும். என்றவாறு. 1

கேளப்பா பெண்களிட வுருவம் ரூபம்
 கெணிதமுடன் கணிதங்கள் காணவேண்டில்
ஆளப்பா ஜென்மமுடன் மதியின் லக்கினம்
 அடவாகு முறையற்திற் கேழாம் வீடும்
கேளப்பா யிவைமூன்றின் குறிப்பினாலே
 குணகுணமும் புருஷனுட நன்மை தீமை
நாளப்பா நற்குணமும் பார்த்து நன்றாய்
 நயப்பெறவே ஜாதகற்கு நன்மை சொல்லே.

(இ-ள்.) பெண்களின் உருவமும் ரூபமும் வடிவமும் பார்க்க வேண்டில் ஜென்ம லக்கினத்தையும் சந்திர லக்கினத்தையும் ஏழாமிடத்தையும் கொண்டு அவளுடைய குணகுணங்களையும் இவைகளோடு உருவம், ரூபம், வடிவம், புருஷனுடைய நற்குணம் இவை முதலானதும் பார்க்கவேண்டும் எ - று. 2

சொல்லப்பா அஷ்டமத்தைக் கொண்டுதானும்
 சோதனையா யமங்கலிகளாகுந் தன்மை
புல்லப்பா சப்தமெனு மிடத்தைக்கொண்டு
 புகழோடுத் துக்கங்கள் கணவன் கீர்த்தி
அல்லப்பா லக்கினத்தைக் கொண்டு சொல்லாய்
 அரிவையின் தன்னழகோடு பெருமைதன்னை
வெல்லப்பா நவமதினால் புத்திரரோடு
 விருத்திமுத லானதுவுங் குறித்துபேசே.

(இ-ள்) பெண்களுக்கு எட்டாமிடத்தைக் கொண்டு சொல்வது அமங்கலியத்துவத்தையும் ஏழாமிடத்தைக் கொண்டு சொல்வது சுகதுக்கத்துடன் பர்த்தாவினுடைய பலாபலன்களையும் இலக்கினத்தைக் கொண்டுச் சொல்வது அழகு சீர்களையும் ஒன்பதாமிடத்தைக் கொண்டுச் சொல்வது புத்திர விருத்தி முதலானதுமென்பர். எ - று. 3

தான விபரம் கூறுகின்றன.

விருத்தம்

கேளப்பா கேந்திரமது சொல்லுகின்றோம்
கேடியான லக்கினமும் நாலேழ்பத்தும்
ஆளப்பா திரிகோண யறையக்கேளாய்
அரைகுவாய் ஐந்தொன்பா னென்று மாகும்
வாளப்பா மூன்றுடனே விரையந்தானும்
வளமில்லா துர்த்தான மதுவேயாகும்
நாளப்பா இரண்டுடனே பதினொன்றுந்தான்
நயமானத் தானமென்று நவிலுவாயே. 4

(இ-ள்) கேந்திரமாவது (1), (4), (7), (10)ம் திரிகோணமாவது (1), (5), (9)ம். துர்த்தானமாகிய கெட்டத்தானமாவது (12), (3)ம். (2), (11) தனலாப யோக்கியமென்று சொல்க.

சுபக்கிரகம் பாபக்கிரகம் அறியும் விபரம்

பூரணசந்திரன், வியாழன்—சுபன்.
சந்திரன்—முக்கால் சுபன்.
புதனுடன் சம்பந்தப்பட்ட தேய்வுபிறை சந்திரன்—கால்சுபன்.
செவ்வாய்—முக்காற்பாவி.
சனி, இராகு, கேது—முழுப்பாவி.
சூரியன்—அரைப்பாவி.

பாவிக்கு (6), (8), (12), ஆமிடம் சுபஸ்தானம். மற்றவர்களுக்குப் பாவஸ்தானமெனக் கொள்க.

பொதுலக்ஷணம் முற்றுப்பெற்றன.

ஜென்மவார பலாபலன் கூறுகின்றன

ஞாயிற்றுக் கிழமையின் பலன்.

விருத்தம்

ஆதியென்ற வாரமதில் ஜெனித்திட்டாலும்
அல்லதுகேள் ருதுவேனு மாகிட்டாலும்

ஓதுகிறே னதின்பலனை யுகந்துகேளு
ஊஷ்ணமுள தேகியவள் காமரூபி
கோதிலாக் கணவனோடு தனக்குங் கீர்த்தி
கொண்டிடுவாள் வெகுபுத்தி சாலியாகி
போதவே யாவர்களுந் திகைத்து நிற்கப்
பேசுவாள் படபடென வார்த்தை தானே.

(இ-ள்) ஆதிவாரத்தில் ருதுவானாலும் அல்லது ஜெனனமானாலும் அவள் ஊஷ்ண சரீர முடையவளாகியும் காமரூபியாகியும் கணவனுக்குந் தனக்குங் கீர்த்தியுடையவளாகியும் புத்திசாலியாகி படபடத்த வாக்குடையவளாகி யாவரும் பிரமிக்கப் பேசுவாள். எ - று. 5

காணவே தேகமது கன்னியற்குங்
கலைநிறம்போல் தான் விளங்குங் காணநன்றாய்
வேணவே மெய்சிரசில் முகத்திற் கண்ணில்
விளங்கிடும் வடிவமுடன் மருவொன் றுந்தான்
நாணவே முதற்கடையும் நாடுங்கஷ்டம்
நானிலத்தில வருந்துதலை யுடையாளாவாள்
தோணவே வரும்புத்திர தோஷமுண்டாம்
துலங்கிடும் விருத்தியது பின்னாற்பாரே

(இ-ள்) தேகம் மாநிறமுடையவளாகியும் சரீரத்தில் சிரசு முகமண்டலங்களிலேனும் நேத்திரத்திலேனும் ஓர் மரு வடுவடையாளமுடையவளாவாள், முதலுங் கடையிலும் அற்ப கஷ்டமும் வருந்துதலை யுடையவள், புத்திர தோஷமுண்டாகும் பின்பு விருத்தியடைவள். எ - று. 6

திங்கட்கிழமையின் பலன்

பாரப்பா திங்களிலே ஜெனித்திட்டாலும்
பரிவாக ருதுவேனு மாகிட்டாலும்
சீரப்பா யதின்பலனைச் செப்பக்கேளு
சிறப்பாகுங் காந்தியுள சரீரியாவள்
நேரப்பா ரோமமது நீக்ஷியுள்ளாள்
நிந்தையிலா ளபிமானி யாற்கு னல்லாள்
கூரப்பா கொண்டதோர் கணவனுற்குங்
குடும்பமது விருத்தியொடு யோகமாமே.

(இ-ள்) திங்கட்கிழமை ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் காந்தியான சரீரமும் உரோம நீக்ஷியும் யார்பேரிலும் அபிமானியாகியுந் தன்னைக் கொண்ட கணவனுக்கு குடும்ப விருத்தியும் யோகமு முண்டாம். எ - று. 7

ஆமெனவே யப்பலனை யின்னங்கேளு
அரிவையற்கு தேகதிடங் குறைச்சலாகும்
தாமெனவே கபரோகஞ் சிலநாள் வாட்டும்
தழைத்திடுமே பெண்விருத்தி யாண்பாலில்லே
போமெனவே பிறந்திடினு பிழைத்திராது
புகழக்கேள் வெண்மை னிறப்பணிகள் பூண்பள்
நாமெனவே யலங்காரப் பிரியமுள்ளாள்
நற்கனியும் வாசனையும் நயங்கொள்வாளே.

(இ-ள்) தேகதிடமில்லாதவள் கபஜல உரோக பாதைகள் சில சில காலங்களில் வந்தணுகும், பெண்பிரஜை யதிகமாகியும் புத்திரசந்ததி தோஷமடைவள் பின் விருத்தி அற்பமாகும் வெண் நிற மான ஆபரணம் அலங்காரப்பிரியமும் வாசனை கனி இவைகள் உல்லாச முடையவள். எ - று. 8

செவ்வாய்க் கிழமையின் பலன்

தானெனவே செவ்வாயிற் ஜெனித்திட்டாலும்
தக்கதோ ரவ்வாரம் ருதுவானாலும்
தேனெனவே யப்பலனைச் செப்பக்கேளு
தேடியே வுடுத்திடுவாள் வர்னசேலே
மானெனவே பிறந்திடத்தில் தரித்திரமாகும்
மருவியதோர் பொருள்போகுங் கோபியாவள்
ஊனெனவே யுடன்பிறப்பும் புத்திரதோஷம்
உற்றிடுமே கணவனுற்குந் தரித்திரமுன்னே.

(இ-ள்) செவ்வாய்க்கிழமை ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் வர்னசேலையிற் பக்ஷமுடையவள், தான் பிறந்த தாய் மனையிற் றரித்திரமும் பொருள்சேத மடைகுவள், கோபியாக விருப்பள், உடன் பிறந்தாருக்கும் புத்திரர்களுக்கும் தோஷங்காட்டும், கணவனுக்கு தோஷமும் முன் தரித்திரமும் மத்தியில் க்ஷேமத்தையுங் கொடுக்கும். எ - று. 9

புதன்கிழமையின் பலன்

முன்னவே புதன்கிழமை ஜெனித்திட்டாலும்
மெல்லியவள் ருதுவேனு மாகிட்டாலும்
கன்னவே பலமுள னற்றேகி யாவள்
கல்வியிலும் புத்தியிலும் விருத்தி கொள்வள்
பின்னவே தயவுமொடுப் பக்தியுள்ளாள்
பின்வயதில் சுகமடைவாள் வாஞ்சை யுள்ளாள்
மன்னவே சந்ததிக்குத் தோஷமுண்டாம்
மாதுரொடு பந்துகட்கும் நஷ்டங்கூறே.

(இ-ள்) புதன்கிழமை ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் தேகதிடமுடையவள், கல்வியிலும் புத்தியிலும் அதிகமுடையவள், தயவுடையவள், பக்தியுடையவள், பின்வயதில் சுகமுடையவள், வாஞ்சையுடையவள், சந்ததி தோஷ முடையவள், தாயாருக்கும் பந்துக்களுக்கும் தோஷங்காட்டும். எ - று. 10

வியாழக்கிழமையின் பலன்

கூறவே குருவாரஞ் ஜெனித்திட்டாலுங்
கோதையவள் ருதுவேனா மாகிட்டாலும்
சீறவே யதின்பலனைச் செப்பக்கேளு
சிறந்திடும் யோகமொடுங் கல்வி விருத்தி
நேறவே ரோகமுளச் சரீரியாவாள்
நிலைக்குமே நடுவயதில் புத்திரலாபம்
தேறவே பூஷணங்கள் தனமு முண்டாம்
தேகமது மாநிறமே யாகுஞ்சொல்லே.

(இ-ள்) வியாழக்கிழமை ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் கணவனாலுந் தன்னாலும் யோகத்தையும் கல்வி முதலிய புத்தியுடையவள் அற்ப ரோகசரீரியாகவும் தேவதா பக்திகளும் மத்திய காலம் புத்திரலாபம் அல்லது தனத்தால் வருந்திப் பின்னடைவள் பூஷணமுடையவள் தேகம் சிகப்பில் மாநிறமாகும். 11

வெள்ளிக்கிழமையின் பலன்

சொல்லவே வெள்ளியிலே ஜெனித்திட்டாலும்
சுகமாக ருதுவேனா மாகிட்டாலும்
புல்லவே பூஷணங்க ளுடையாளாகி
புவிமீது லீலாவினோதியாவாள்
வெல்லவே செல்வமொடு யோகமுண்டாம்
வேணதோர் புத்திரரும் விருத்தியாகும்
அல்லவே கணவனுக்கு மினியாளாகி
அதிரூப வதியாக வாழ்வாள் பாரே.

(இ-ள்) வெள்ளிக்கிழமையில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் பர்த்தாவின் யோகத்தையும் தனவஸ்திராதியாபரண பூஷணமுடையாளாகியும் லீலா வினோதியாயும் அதிக புத்திரலாபாதி செல்வத்தை யுடையாளாகியும் ரூபவதியாகியும் வாழ்வாள். எ - று. 12

சனிக்கிழமையின்பலன்

பார்க்கவே சனிவாரம் ஜெனித்திட்டாலும்
பாவையவள் ருதுவேனா மாகிட்டாலும்

கோர்க்கவே யதின பலனைக் கூறக்கேளு
கோதையவள் மந்தபுத்தி யுள்ளோளாவள்
வேர்க்கவே வரும்புத்திர தோஷமுண்டாம்
வேதனையாம் மெய்தனிலே ரோகம்பூணும்
ஆர்க்கவே மெய்தனிலே ரோகங்காணும்
அவத்தையாம் குடும்பத்தில் நஷ்டமென்னே.

(இ-ள்) சனிக்கிழமையில் ஜெனனமானாலும், அல்லது ருது வானாலும், அவள் மந்த புத்தியும் தேவதா பதாதியும் தேகரோக முடையவள் புத்திர ரெவஷ்ட முடையவள் கணவனின் நஷ்டமும் குடும்ப நஷ்டமு மடைகுவள். எ - று. 13

வாரபலன்முற்றுப் பெற்றன

நட்சத்திரப் பலன்களாவன.

அசுபதியின் பலன்

என்னவே யசுபதியில் ஜெனித்திட்டாலும்
எழிலாக ருதுவேனு மாகிட்டாலும்
அன்னியற்கு வுதவிசெய்வாள் பாவியாவள்
அரும்பொருளை விகாதத்தாலழிவு செய்வாள்
மன்னவே மருவும் நடுவயதிற்றானும்
மங்கையவள் கணவனுக்குந் தோஷமுண்டாம்
பன்னவே வரும்புத்திரர் விருத்தியில்லை
பாவையவள் மெல்லிய சரீரியாமே.

(இ-ள்) அசுவனி நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் அன்னியருக்கு உதவி செய்வாள், குறைந்த சரீரமுடையவள், பாவத்தொழில் செய்குவள், மத்திய வயதிலேயே கணவனுற்கு தோஷங்காட்டும் புத்திரவிருத்தியடைவள், மெல்லிய சரீரமுடையவள் துர்க்குணியாவள் முன் பொருளையும் சவுக்கியத்தையும் விகாதங்களினால் தோற்பாள். எ - று. 14

பரணியின் பலன்

ஆமப்பா பரணிதனில் ஜெனித்திட்டாலும்
அல்லதுகேள் ருதுவேனு மாகிட்டாலும்
நாமெனவே யதின்பலனை நவிலக்கேளு
நங்கையவள் சரீரமதுப் பெருத்தாளாகும்
போமெனவே புத்திரர்க்குந் தோஷமுண்டாம்
புகலக்கேள் மகவிருத்தி யாகுமாகில்
வாமெனவே கணவனுற்கும் வருகுந்தோஷம்
வஞ்சியவள் நிகரன்றி வாழ்வாள் பாரே.

(இ-ள்) பரணி நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் சரீரகனமுடையவள், புத்திரதோஷமுண்டு, புத்திரர் விருத்தியாகில் பாலியவயதில் கணவனாரை யிழந்து விடுவள், முன்னும் கடையிலும் பிரபலயோகமடைவள் யாவரையும் நிகான்றி வாழ்குவள். எ - று. 15

கார்த்திகையின் பலன்

பாரப்பா கார்த்திகையில் ஜெனித்திட்டாலும்
பாவையவள் ருதுவேனு மாகிட்டாலும்
கூறப்பா தேகமதுக் காந்தியுள்ளாள்
கொண்டவற்கு மேலதி காரியாவாள்
நேரப்பா செல்வமுடன் தனமுமுள்ளாள்
நேர்ந்திடுங் குடும்பநஷ்ட மாணதுக்கம்
காரப்பா கல்விபுத்தி மோகியாவாள்
கன்னியற்கு நாள்முதலும் யோகமென்னே.

(இ-ள்) கார்த்திகை நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் தேககாந்தியுடையவள், புருஷனுக்கு மேலான வதிகாரமும் செல்வமும் தனமுமுடையவள், குடும்ப நஷ்டமும் மாணதுக்கியாவள், உஷ்ணசரீரி, தியாகி, மோகியாகிப் புத்தியுங் கல்வியும் அல்லது கல்விமானை இச்சித்தடைவள், சென்ற நாள் முதலே அதிக யோகமுடையவள். எ - று. 16

உரோகணியின் பலன்

என்னவே ரோகணியில் ஜெனித்திட்டாலும்
எழிலாக ருதுவேனு மாகிட்டாலும்
மின்னவே ரூபமுளாள் விழியும்ரோமம்
மிகவழகாம் ருசியின்மேல் பிரியமுள்ளாள்
குன்னவே கோபமில்லாள் செல்வமுள்ளாள்
குடும்பவழி யாற்றமுங் கீர்த்தியுள்ளாள்
பன்னவே தனநஷ்டம் பட்டுத்தானும்
பகரக்கேள் பின்சுகியாய் வாழ்வாள் தானே.

(இ-ள்) உரோகணி நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் நல்ல ரூபியாவள், விழியும் மயிரும் அழகுடையவள், உருசிப்பிரியமாவள், கோபமில்லாதவள், செல்வமும் தன் குடும்ப வழியால் பிரபலமடைவள், பிற்காலத்தில் தனம் நஷ்டமடைந்து பின் சுகமாக வாழ்குவாள். எ - று. 17

தானெனவே கணவனுக்கு மினியாளவள்
தக்கதோர் வஸ்திரா பரணம் பூண்பள்

தேனெனவே போகியெனத் திகழாய் வாழ்வள்
தீங்காக வரும்புத்திர தோஷமுண்டாம்
கோனெனவே வாகனம்பார் பாக்கியமுண்டாம்
கோதையற்கு யெப்போதுங் குறவொன்றில்லை
நானெனவே மேலான யிச்சையுண்டாம்
நங்கையவள் லபிதமது யடைவாள்காணே.

(இ-ள்) கணவனுக்கு இனியாளாகுவள், வஸ்திராபரணாலங்காராதிபோகியாகி வாழ்குவள், மகவுதோஷமடைவள், பாற்பாக்கிய வாகனமுடையவள், எப்பொழுதும் மேலான இச்சையுடன் லபிதமடைகுவள். எ - று. 18

மிருகசீரிடத்தின் பலன்

காணவே மிருகசீ ரிடத்திற்றானுங்
கன்னியவள் ஜெனித்திடினு றுதுவாகிற்றான்
பூணவே புத்திரலா பங்களுண்டாகும்
பொருந்தியபின் வயதிலற்ப வாயுளாகும்
தோணவே புருடனுக்கு மறிட்டங்காட்டும்
தோஷமாம்பால் பாக்கிய செல்வமேகும்
நாணவே விவாதமுடன் வழக்குண்டாகும்
நங்கையவள் தானதரு மங்கள்செய்வள்.

(இ-ள்) மிருகசீரிட நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் புத்திரர் அதிகலாப முடையவள், பின் ஆயுள் விருத்தியற்பமாவள், பத்தாவுக்கு அறிஷ்டமுடையவள், பாற்பாக்கியாதி செல்வமும் விவாத வழக்குடையவள், தான தருமங்கள் செய்வள். எ - று. 19

செய்யவே புராணாதி ஞானங்கல்விச்
சிந்தைதனில் பிரியமுட னபேக்ஷியாவள்
மொய்யவே மயிரது சுருண்டிருக்கும்
முகமதுவுஞ் சுருக்கமுட னழகாய்தோற்றும்
பெய்யவே பிறந்திடமும் விருத்தியோங்கும்
பேசிடுவாய் கணவனுக்கும் போகியாவாள்
துய்யவே சீலமது வுடைபோளாவள்
தோகையறுஞ் சுகமுள சரீரியாகும்.

(இ-ள்) புராணாதி ஞானங் கல்விப் பிரபலவதியாவள், சுருண்ட மயிரும் முகபிம்பச்சுருக்க வழகுடையவளாவள். தான் பிறந்த வம்சவழி விருத்தியும், பத்தாவுக்குப் போகத்தையும், பிரபலிக்கும் போகமுடையவள், சீலமுடையவள், சுகசரீரியாகும். எ - று. 20

திருவாதிரையின் பலன்

ஆகவே யாதிரையில் ஜெனித்திட்டாலும்
அல்லதுகேள் ருதுவேனு மாகிட்டாலும்
தாகமாய்க் கணவனுக்கும் நண்ணுங்கஷ்டம்
தானுமே பிணியுடையாள் குடும்பவாதை
போகவே வயததுவு மாகவாகப்
பொருள்விருத்திக் குன்றிடினு பின்னுலுண்டாம்
ஏகவே வரும்புத்திர விருத்தியில்லாள்
ஏந்திழையும் பெண்வழியால் ஜீவிப்பாளே.

(இ-ள்) திருவாதிரை நட்சத்திரத்தில் ஜெனனமானுலும் அல்லது ருதுவானுலும் அவள் பர்த்தாவகை கஷ்டமும் பிணியுமடைவள், உரோகி, குடும்ப பகையாவள், வயதாக வயதாகப் பொருள் விருத்திக் குன்றினும் பின்சுகமடைவள், கலக்கமுடையக் கிலேசி, புத்திர விருத்தியில்லாள், சுகமுமில்லாள், பெண் வழியினுல் தான் ஜீவனம் செய்குவாள்- எ - று. 21

புனர்பூசத்தின் பலன்

ஆளப்பா புனர்பூசக் தன்னிலேதான்
அறிவையவள் ஜெனித்திடினும் ருதுவாகிற்ருன்
கேளப்பா செவ்வமுளா ளதிகமோகிக்
கீர்த்தியுடன் பிறாலுங் தனங்கள்சேற்பாள்
வேளப்பா லதிகாரி வெண்மையுள்ள
விளங்கிடும் பொருளின்மே லிச்சையுள்ளாள்
தாளப்பா விரணவிஷனேய் சூடுமுண்டாம்
தான்பிறந்த வழிநஷ்டம் புத்திரதோஷம்

(இ-ள்) புனர்பூச நட்சத்திரத்தில் ஜெனனமானுலும் அல்லது ருதுவானுலும் அவள் செல்வமுடையவள், அதிக மோகி, பிறாலுங் தனம் விருத்தியடைவள், அதிகாரஞ் செய்வள், வெண்மைகளில் அதிகப்பிரிய முடையவள், விரணநோயும் விஷனேயும் சூடுமுடையவள், பிறந்தவழி நஷ்ட மடைகுவள், புத்திரதோஷ முண்டாம். எ - று. 22

பூசத்தின் பலன்

தோஷமென பூசமதில் ஜெனித்திட்டாலும்
தோகையவள் ருதுவேனுமாகிட்டாலும்
ஆசையுரு மதிரூப வுதியுமாவாள்
யார்மீதும் நேசமுடன் பிரியங்கொள்வள்
பாசமெனச் செல்வமுடன் புத்தியுண்டாம்
பரிவாகு முகவழகும் விருத்தியுண்டாம்

நேசமெனப் புருஷனெடு தந்தையாலும்
நீணிலத்தில் பிரபல விருத்தியாவாள்.

(இ-ள்) பூசநட்சத்திரத்தில் ஜெனனமானலும் அல்லது ருது வானலும் அவள் அதிக ரூபவதியாக விருப்பள், யாவர்கள் மீதிலும் பிரியமடைவள், புத்தி விசாலமுஞ் செல்வமும் முகமும் சிரோபார வழகும் விருத்தியு முடையவள், புருடனலும் தகப்பனலும் பிரபல முண்டாம். எ - று. 23

ஆகவே வஸ்திரா பரணந்தன்னை
அனேகவித மிச்சையொடு வணிந்துகொள்வாள்
பாகவே யிச்சையுள்ள மகவுமுண்டாம்
பரிகிடும் நடுவயதில் துக்கங்கொள்வள்
யேகவே முன்னும்பின்னுஞ் சுகங்களுண்டு
யெழிலான போகபாக் கியமுமுண்டு
போகவே கொண்டதோர்க் கணவனுற்குப்
பொருந்திடும் யோகமிவள் தன்னலென்னே.

(இ-ள்) வஸ்திராபரணதி பூஷணங்கள் அனேக விதமானவை கள் அணிவள், சிறுவரிச்சையான மகவுடையவள், மத்தியகாலத் தில் துக்கமுடையாள், முன்னும் பின்னுமான வயதுகளிற் சுகமும் போகபாக்கியமும் உடையவள், பத்தாவிற்கு யிவள் தன்னல் யோக முண்டாம். எ - று. 24

ஆயிலியத்தின் பலன்

எண்ணவா யிலியமதில் ஜெனித்திட்டாலும்
எழிலாக ருதுவேனு மாகிட்டாலும்
வண்ணமாம் வரும்புத்திர விருத்தியில்லாள்
வாய்மதத்தாள் கோபிசத்துரு வுடையோளாகும்
திண்ணமாம் குடும்பத்தில் கலகம்நஷ்டம்
தீதாகும் பீடையுடன் கர்ப்பதோஷம்
பண்ணுமாம் பத்தாவுக் காயுள்பீடை
பாவையுட வம்மிசமு மழியும்பாரே.

(இ-ள்) ஆயிலிய நட்சத்திரத்தில் ஜெனனமானலும் அல்லது ருதுவானலும் அவள் புத்திர விருத்திக் கிடையாதவள், வாய்மத முடையவள், கோபி, சத்ருடையவள் குடும்ப கலகமும் நஷ்டமு முடையவள், தேகவிளைப்பும் பிணிபீடையும் கெர்ப்ப தோஷமு முடையவள், பத்தாவிற்கு ஆயுள் பீடையுண்டாம், வம்சக்ஷய மடை வள். எ - று. 25

மகத்தின் பலன்

பாரப்பா மகமதனில் ஜெனித்திட்டாலும்
பாவையவள் ருதுவேனு மாகிட்டாலும்
கூறப்பா பாலியத்தில் தகப்பனோடுக்
குடும்பமுதல் மரணமுறக் கிலேசியாவள்
மீரப்பா திடமுள சரீரிகுரூர
மனமுடையாள் யாருக்கு மஞ்சாளாகும்
கோரப்பா புத்திரரொடு பத்தாவிருத்தி
குலவிடுஞ் செல்வமுன் குறவுள்ளாளே.

(இ-ள்) மகநட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருது வானாலும் அவள் பாலிய வயதிலேயே தகப்பன் முதலிய குடும்ப மரணக்கிலேசியாவள், திடசரீரியும் குரூரமன முடையவள், யாருக்கு மஞ்சாள், புத்திர விருத்தியும் பத்தாவிருத்தியு முள்ளவள், முன்வய தில் செல்வங் குறைவுடையவள். எ - று. 26

உள்ளவே பின்வயதில் சுகமுண்டாகும்
உற்றதோர் தனம்படைப்பள் சிலநாள்கஷ்டம்
விள்ளவே சுகஞ்சிலநாள் வேணதுண்டாம்
விளங்கிடு மானமற்ப முடையாளாகும்
கொள்ளவே மேகனோ யுதரப்பீடைக்
கோதையற்குத் தானுண்டுப் பக்தியுண்டு
துள்ளவே மனமுருகி யுள்ளாள்காத்திரம்
துலங்கிடு முயர்ந்ததோர் சரீரியாமே.

(இ-ள்) பின்வயதில் சுகமும் தனத்தையும் படைப்பள், சில நாள் கஷ்டமுஞ் சிலநாள் சுகமும் பெறுவள், மானமற்ப முள்ளவள் மேகநோய் முதலிய உதரபீடை யுடையவள், தேவதாபக்தி யுடையவள், மனவுறுதி யுள்ளவள், சரீரகாத்திரமும் உயர்ந்த சரீரியாவள். எ - று. 27

பூரத்தின் பலன்

ஆமெனவே பூரத்தில் ஜெனித்திட்டாலும்
அல்லதுகேள் ருதுவேனு மாகிட்டாலும்
நாமெனவே நீண்டதோர் சரீரியாவள்
நருஞ்சிவப்பு வடிவமுள்ளாள் பிளைத்ததேகி
தாமெனவே போகசுகி மருமணத்தாள்
தானலது அகாலசந் ததியுமுள்ளாள்
சாமெனவே செல்வமுன் னனுபவித்துங்
கஷ்டம்பின் குடும்பக்ஷ யதுக்கியாவாள்.

(இ-ள்) பூர நட்சத்திரத்தில் ஜெனன மானாலும் அல்லது ருது வானாலும் அவள் உயர்ந்த சரீரமும் சிவப்பு நிறமும் வடிவமும் இளைத்த தேகியுமாவரள் போகசுகியாகியும் மறுமணம் அல்லது அகாலபுத்திர விருத்தியுடையவள் செல்வம் முன் அனுபவித்துப் பின் சிலநாள் கஷ்டமடைவள், பிறந்த குடும்பக்ஷயத்தால் துக்கியா வள். எ - று. 28

உத்திரத்தின் பலன்

ஆவதுவே உத்திரத்தில் ஜெனித்திட்டாலும்
அறிவையவள் ருதுவேனு மாகிட்டாலும்
தாவதுவே பத்தூர்வகைத் தருக்குங்கஷ்டம்
தன்குடும்பச் சேதமோடுப் புத்திரீனம்
போவதுமே பெருத்துயர்ந்த சரீரமாகும்
புகழ்யோகி மோகியோக வம்சம்வந்தோள்
மேவதுவே புத்திரரும் விருத்தியாகும்
மேலாகுங் கணவனுக்கு மிவளால்யோகம்

(இ-ள்) உத்திர நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் பர்த்தூர்வகை நஷ்டமும் குடும்பச்சேதமும் புத்திரீனமும் பெருத்த அல்லது உயர்ந்த சரீரமும் அதியோகி மோகியாகியுந் தனயோகப் பிரபல வம்சயோகத்தினு லுதித்தவளா வள், புத்திரவிருத்தி யுடையாள், பத்தாவுக்கு இவளாற் செல்வ மோங்கும், தருணியாவள், பக்தியுங் குணமும் மேலானவளாகுவள். எ - று. 29

அஸ்தநட்சத்திரன் பலன்

யோகமென அஸ்தத்தில் ஜெனித்திட்டாலும்
யுகமையுடன் ருதுவேனு மாகிட்டாலும்
பாகமென மானியவள் ரூபமுள்ளாள்
பத்தாவின் விருத்தியிலாள் செல்வமுள்ளாள்
போகுமென வரும்புத்திர தோஷமுண்டாம்
புருஷனொடு குடும்பக்ஷயம் வருத்தமுண்டாம்
தாகமென க்ஷீணமுளச் சரீரியாவாள்
தரிக்கொணுக் கவலையுளா ளென்றுபேசே.

(இ.ள்) அஸ்த நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருது வானாலும் அவள் மானியாகவிருப்பள், ரூபவதியாயுஞ் செல்வ முடையவள், பத்தா விருத்தியடையாள், புத்திர தோஷமும் புருஷ குடும்ப க்ஷயமும் பலவகை வருத்தமடைவள், க்ஷீணசரீரியென்றும் நாளுங் கவலையுடையவளாக விருப்பள். எ - று. 30

சித்திரை நட்சத்திரத்தின் பலன்

பேசவே சித்திரையில் ஜெனித்திட்டாலும்
பெண்ணவள்தான் ருதுவேனு மாகிட்டாலும்
போசவே பர்த்தூர்வழி க்ஷயமுமுள்ளாள்
பொல்லாத வாதமொடு விரோதஞ்செய்வள்
வீசவே கடூரிகோபி பந்துவிற்கும்
விரோதியாய் யீனதொழில் பிரவேசிப்பள்
நேசவே முன்சுகமும் பின்னூற் றுக்கம்
நேரிழையும் ரூபகுறை யுடையாள்சொல்லே.

(இ-ள்) சித்திரை நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் பர்த்தூர் வம்சாதி க்ஷயமுடையவள், விரோத வாதம் புரிவள், கடூரி, கோபி, பந்துவிரோதியாவள், ஈனகாரியப் பிரவேசியாவள், முன்சுகமும், பின்னால் தரித்திராதி பீடையும் துக்கமுமடைகுவள், ரூபக்குறையுடையவள். எ - று. 31

சுவாதியின் பலன்

சொல்லவே சுவாதியினில் ஜெனித்திட்டாலும்
சுகமாக ருதுவேனு மாகிட்டாலும்
புல்லவே ரூபலா வண்ணியகாந்திப்
புரிகுஞ் சந்தோஷிதமு முடையோளாவள்
வெல்லவே தியாகியாம் புத்திரநஷ்டி
விளைவிக்கும் தோஷமுமே யுள்ளாளாகும்
அல்லவே யதிகாரஞ் செய்குணத்தாள்
அரிவையற்கும் மேலான வாழுமுண்டாம்.

(இ-ள்) சுவாதி நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் ரூபலாவண்ணிய காந்தியும் சந்தோஷிதமுடையவள், தியாகி, புத்திரநஷ்டமுடையவள், தோஷமுமுள்ளவள், அதிகாரஞ் செய்குணத்தவள், மேலாகிவாழ்குவள். எ - று. 32

விசாகத்தின் பலன்

உண்டாக விசாகமதில் ஜெனித்திட்டாலும்
உத்தமியாள் ருதுவேனு மாகிட்டாலும்
பண்டாகுஞ் சந்ததியும் யோகஞ்செல்வம்
பருகிடுந்தன் விருத்திபால் பாக்கியந்தான்
கொண்டாடுஞ் செல்விஸ்திர புத்தியுள்ளாள்
கூறிடும் வாக்கதுவும் விருத்தியாகும்
திண்டாகு மன்புடையாள் கணவன்நேசி
திகழாகும் பிரபலமுள யோகஞ்சொல்லே.

(இ-ள்) விசாக நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருது வானாலும் அவள் அனேக மகவுயோகமுஞ் செல்வமுமுடையவள், தனவிருத்தியும் பால்பாக்கியமும் முதலிய வதிகார விருத்தியுடையவள், செல்வமுள்ளவள், ஸ்திரபுத்தி யுடையாள், வாக்கு விருத்தியும், ஸ்திரமும் அன்புடையளாவள் பத்தாவிற்கனுகூலி, மிகவும் பிரபல யோகமடைவள். எ - று. 33

அனுஷத்தின் பலன்

சொல்லவே யனுடமதில் ஜெனித்திட்டாலும்
சுகமாக ருதுவேனு மாகிட்டாலும்
புல்லவே கணவனுக்கும் நஷ்டமுண்டாம்
பொல்லாத தரித்திரமுடன் பகையுங்கொள்வள்
அல்லவே தேகமதில் ரோகமுண்டாம்
அருமையுள்ள புத்திரரும் நஷ்டமாகும்
வெல்லவே யெப்போதும் விசனமுண்டாம்
விளங்கிடும் குள்ள சரீரமின்னாள்.

(இ-ள்) அனுஷ நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் பத்தாவுக்கு நஷ்டமுடையவள், தரித்திரமும் பகையு முடையவள், தேகரோகமாவள், புத்திர நஷ்டமுண்டாகும், விசனமுடையவள், குள்ளமான சரீரமுடையவள். எ - று. 34

கேட்டையின் பலன்

மின்னவே கேட்டையினில் ஜெனித்திட்டாலும்
மெல்லியவள் ருதுவேனு மாகிட்டாலும்
பன்னவே கணவனுக்கு மரிட்டதோஷம்
பகரக்கேள் வம்சக்ஷயம் விதவையாவாள்
துன்னவே ரோகமுளாள் கோபியீனி
துலங்கிடும் முன்வயதில் யோகமுள்ளாள்
கன்னவே பின்வயதில் தரித்திரமுண்டாம்
காரிழையும் ரூபகுறை யுடையாள்காணே.

(இ-ள்) கேட்டை நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் வம்சக்ஷயமும் பத்தாவரிஷ்ட தோஷமும் வைதவியமடைவள், ரோகமுடையவள், கோபி யீனமுடையவளானாலும் யோகமுடையவளாக முன்வயதி லடைந்து பின்தரித்திரமடைவள், உரூபக் குறையுடையவள். எ - று. 35

மூலத்தின் பலன்

கானென்ற மூலமதில் ஜெனித்திட்டாலும்
கன்னியவள் ருதுவேனு மாகிட்டாலும்

ஊனென்ற தேகமது சாந்தியுள்ளாள்
ஓங்கிடும் புத்திரரோடுச் செல்வமுள்ளாள்
நானென்ற சிலகாலம் பிணியுந்தோஷம்
நண்ணிடும் கணவனுக்கும் பகையுந்துக்கம்
வேணென்ற மத்தியக் காலந்தன்னில்
விதவையுமே யாவளென விளம்பிடாயே.

(இ-ள்) மூலநட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் தேக காந்தியுடையவள், புத்திரவிருத்தியும் செல்வமுடையவளாவள், சிலகாலம் வருந்தியும் பிணிமுதலிய புத்திர தோஷமுடையவள், கணவனுக்கும் அவர்களின் பகைக்குந் துக்காதி பாத்தியமடைவள், மத்தியகாலத்தில் மங்கிலியக் குறைவையடைவாள். எ - று. (36)

பூராடத்தின் பலன்

விளம்பவே பூராடமதில் ஜெனித்திட்டாலும்
வெகுவாக ருதுவேனு மாகிட்டாலும்
தளும்பவேபால் பாக்கியஞ் செல்வமுண்டாம்
தன்வகைபோம் பர்த்தூர்வகைப் பிரபலமுண்டாம்
வளம்பெருகு மதிகாரி யதிகாரி யதிகமோங்கி
வஞ்சியவள் ரூபவதி யாயிருப்பள்
களம்பெருக ஸ்தூலமுள சரீரியாவள்
காசினி மதிக்க யறம் புரிகுவாளே.

(இ-ள்) பூராட நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் பால் முதலிய பாக்கியமுஞ் செல்வமுடையவள், தன் வகை நாசமும் பர்த்தூர்வகை பிரபலமடைவள், மிகவும் அதிகாரியாவள், அதிபோக மோகியும் ரூபவதியும் ஸ்தூலசரீரமுடையவள், தருமத்தில் பிரிய முடையவள். எ - று. (37)

உத்திராடத்தின் பலன்

வாளென வுத்திராடமதில் ஜெனித்திட்டாலும்
வஞ்சியவள் ருதுவேனு மாகிட்டாலும்
தாளெனவே தயை புத்திக் கல்வியுள்ளான்
தனபெருக்கு மனபெருக்கு மத்தியிலுண்டாம்
வேளனவே மன்னரையும் மணமேசெய்வள்
விளங்கிடுந் தியாகியென யார்க்குநல்லாள்
கேளெனவே ரூபமுளாள் மயிற்சுருட்டை
கெண்டை விழிலக்ஷண விசாலமுண்டாம்.

(இ-ள்) உத்திராட நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் தயை முதலிய புத்தி கல்வியறியுங் குண முடையவள், செல்வப் பெருக்கு மனப்பெருக்கு மத்திபத்தி லடைவள், அரசி அல்லது மன்னரைப்போ லொற்றவர்களை மணப்பள், தியாகியாகியும் எவரையுங் காப்பாற்றுங்குணமும் நல்ல ரூபமும் மயிற் சுருண்டிருக்கும் விழிலக்ஷண விலாசமுடையவள். எ - று. (38)

திருவோணத்தின் பலன்

உண்டாகுந் திருவோணமதில் செனித்திட்டாலும்
உத்தமியாள் ருதுவேனு மாகிட்டாலும்
பண்டாகும் பக்தியுளாள் உயரமுள்ளாள்
பக்ஷமுள வஸ்திரா பரணத்தின்மீதிற்
கொண்டாடும் விருத்திபல தொழிலுஞ்செய்வள்
கோதையவள் புத்தியுளா கல்வியுள்ளாள்
வண்டாக சிலகாலம் வளமாய்வாழ்ந்து
வருந்துயரம் சிலகாலம்படுஞ் சஞ்சாரி.

(இ-ள்) திருவோண நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் தேவபக்தியும் புது நிறமும் உயரமான சரீரமும் கியாதியும் பெறுவள், வஸ்திராபரணதிகளின்மேற் பிரிய முடையவள், வாக்கு விருத்தியும் பலதொழிலுஞ் செய்ய புத்தி யுடையவள், கல்வி மேன்மையிற் கனமுடையவள், சிலகாலஞ் செல்வமும் சிலகாலஞ் செல்வக்குறைவைப் பொருந்துவள், தேச சஞ்சாரியாகத் திரிகுவள். எ - று. (39)

அவிட்டத்தின் பலன்

சாதகமா யவிட்டமதில் ஜெனித்திட்டாலும்
சதுராக ருதுவேனு மாகிட்டாலும்
போதகமாய் பிறந்திடத்தில் தனயோகந்தான்
பொருந்திடவே பாலியத்தி லனுபவிப்பள்
காதகமாய் சிலகாலங் கலங்கிநிற்பள்
கணவன்மேல் சிலகாலம் பிரியங்கொள்வள்
தோதகமாய் மெய்தனிலே பிணியுமுள்ளாள்
தோகையவள் மகப்பெரினும் விருத்தியில்லை.

(இ-ள்) அவிட்ட நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் ஜெனனவிடத்தாற் றனயோக மடைவாள் செல்வமும் பொருளும் பாலியத்தி லனுபவித்தும் சிலகாலம் சுகமடைந்தும் சிலகாலம் வருந்தி இளைப்பள், பர்த்தாமேல் பிரியஞ்

சிலகாலம் தோன்றும் பிணியற்பமுடையவள், மகவைப்பெறுவள், ஆகினும் விருத்தியடையாத புத்திரக் கிலேசமாவாள். 40

சதையத்தின் பலன்

இல்லையென சதையமதில் ஜெனித்திட்டாலும்
ஏந்திழையாள் ருதுவேனு மாகிட்டாலும்
தொல்லையென புத்திரர்க்கும் தோஷமுண்டாம்
தோகையருங் கணவனுக்கு மடங்கமாட்டாள்
புல்லையென தரித்திரமொடு குடும்பம்பாழாம்
புகழொணு மாச்சரியம் மோகிபோகி
எல்லையென பின்வயதில் சுகமேயுண்டாம்
ஏந்திழையு மானிட சரீரியாமே.

(இ-ள்) சதைய நட்சத்திரத்தில் ஜெனனமானுலும் அல்லது ருதுவானுலும் அவள் புத்திரதோஷமும் கணவனுக்கு அடங்கி நடக்காள், மாச்சரியமும் முன் தரித்திரத்தையு மனுபவிப்பள், குடும்ப வபிவிருத்திக் குறைவும் மோகி போகியாவள், செல்வமுஞ் சுகத்தையும் பின்வயதி லனுபவிப்பள், கருமை கலந்த மானிறமுமான சரீரமும் கீர்த்தியும்பெற்று யாவரும் புகழ வாழ்குவாள். எ-று. 41

பூரட்டாதியின் பலன்

ஆமெனவேவரும் பூரட்டாதி தன்னில்
அரிவையவள் ஜெனித்திடினும் ருதுவாகிற்றுன்
தாமெனவே பாற்பாக்கியங் குடும்பங்கீர்த்தி
தாய்வழியாற் செல்வமது தனக்குமுண்டாம்
நாமெனவே மாங்கிலிய விருத்தியொடு
நண்ணிடும் புத்திரவிருத்தி தனயோகங்கள்
காமெனவே சுத்தியொடுக் கல்வியோங்கும்
கன்னியவள் வஸ்திராபரணம் பூண்பள்பாரே.

(இ-ள்) பூரட்டாதி நட்சத்திரத்தில் ஜெனனமானுலும்; அல்லது ருதுவானுலும் அவள் பாற்பாக்கிய முடையவள், குடும்பந் தாய்வழி செல்வமடைவள், மங்கிலிய விருத்தியும் புத்திரலாபமும் பிரபலமாக யடைவள், தனயோக சாலியாவள், யாவருக்கும் மேலானபுத்தியும் கல்வி மேன்மையிற் பிரியமுடையவள், வஸ்திராபரணமும் தரிப்பள். எ-று. 42

உத்திரட்டாதியின் பலன்

பூணவே வுத்திரட்டாதி தன்னில்
புகழாக ஜெனித்திடினும் ருதுவாகிற்றுன்

காணவே சமதேகிக் காந்தியுள்ளாள்
கன்னியவள் பாலியத்தில் செல்வமுள்ளாள்
தோணவே பாற்பாக்கியம் புத்திரருண்டாம்
தோகையருங் கணவனிட குடும்பம்பூர்ந்து
நாணவே பின்வயதில் சிலநாள்கஷ்டம்
நங்கையவள் செல்வம்போய் இளைப்பாள்பாரே.

(இ-ள்.) உத்திரட்டாதி நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் சமசரீரி தேககாந்தியுடையவள், பாலியங்களிற் செல்வமும், ஜெனனஸ்தானத்தினாற் தனலாபமும் செல்வமும் பாற் பாக்கியமடைவள், புத்திரவிருத்தியைப் பெறுவள், தான் பர்த்துர் குடும்பஞ்சேர்ந்தும் பின் வயதிலும் பலவிதமான கஷ்ட நஷ்ட சோகமடைவள், செல்வங் குன்றுதலால் சிலநாள் வருந்தி யிளைப்பள். எ - று. 43

இரேவதியின் பலன்

பாரப்பா இரேவதியில் ஜெனித்திட்டாலும்
பாவையவள் ருதுவேனு மாகிட்டாலும்
கூரப்பா பாக்கியவதி செல்வமுள்ளாள்
கோதையரும் மனோதயிர்ய ரூபியாவள்
தேரப்பா சரீரபலன் காந்திமோகி
தேடிவருங் கணவனுக்கும் ராஜயோகம்
தேரப்பா தனலாபம் புத்திரலாபம்
திகழாக பெற்றுசுக மடைவாள்காணே.

(இ-ள்) இரேவதி நட்சத்திரத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் மிகவும் பாக்கிய முடையவள், செல்வத்தினால் மனோதைரியமும் ரூபலாவண்ணியமும் சரீர பலனும் காந்தியான மோகனவதியாவள், பர்த்தாவுக்கதிக இராஜயோகமும் தனலாபமும் சேரும், புத்திரரைப்பெற்று சுகமாக நாளும் வாழ்ந்து வருவாள். எ-று. 44

நட்சத்திரப்பாதங்களின் பலாபலன் கூறுகின்றன

அசுவனி முதற்பாதத்தின் பலன்

வசனம்.

அசுவனி நட்சத்திரம் முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கோள் சொல்லுவள், சஞ்சலமுடையவள்,

பாபியாவள், ரூபக்குறைவுடையவள், பிலுக்கினுள், அன்னியர்கள் மீது அன்பும் பிரியமு முடையவளாகுமென வறிக.

அசுவனி இரண்டாம் பாதத்தின் பலன்

அசுவனி இரண்டாம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வாஞலும் அவள் யாவர்கள் மீதும் பிரியமுடையவள், எதிரிகளு டையக் குணத்தை அறிகுவள், ரூபவதியாகியும் நன்மைப் புரிகு வள், புத்திரருள்ளவளென வறிக.

அசுவனி மூன்ரும் பாதத்தின் பலன்

அசுவனி மூன்ரும் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவா ஞலும் அவள் நற்குணமுடையவளாய் யாவருக்கும் புத்தியானது உரைப்பாள், மூலரோக முடையவள், தருமியாகுவளென வறிக.

அசுவனி நான்காம் பாதத்தின் பலன்

அசுவனி நான்காம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வாஞலும் அவள் சத்தியவாக்குடையவள், கல்விகற்பவள், புகழு டையவள், தேகம் வளமாயிருப்பவள், காமியாகுவள், அதிக புத்தி யுடையவளாக வாழ்குவாளென வறிக.

பரணி முதற் பாதத்தின் பலன்

பரணி முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவாஞ லும் அவள் தேக சிவப்புடையவள், யாவர்க்கு மஞ்சாதவள், தன தான்னிய முடையவள், காமி, சென்னிறமான உரோமமுடையவள், நீதியுடையவளென வறிக.

பரணி இரண்டாம் பாதத்தின் பலன்

பரணி இரண்டரம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வாஞலும் அவள் மானமுடையவள், ஆலஸ்யமுடையவள், குணமு டையவள், புத்தியுடையவள், காமி, தருமஞ்செய்வள், புராணம், சாஸ்திரம், இவைகளில் விருப்பமுடையவள், நிபுணியாகுவளென வறிக.

பரணி மூன்ரும் பாதத்தின் பலன்

பரணி மூன்ரும் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவா ஞலும் அவள் கோபி, உருண்ட விழியுள்ளவள், கன்னியமுடைய வள், மானி, சந்தோஷமுடையவள், சற்குணமுடையவள், நீண்ட உருவமாவள், யாவர்க்கும் நன்மையுடையவளென வறிக.

பரணி நான்காம் பாதத்தின் பலன்

பரணி நான்காம்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானு லும் அவள் ஸ்தூலதேகமுடையவள், கோபி இராஜ கன்னிகளிடத் தில் ஏவற்புறிகுவள், தூர்ச்சனியெனுங் கெர்வியாவளென வறிக.

கார்த்திகை முதற் பாதத்தின் பலன்

கார்த்திகை முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவா னுலும் அவள் ஆசாரமுடையவள், கல்விகற்பள், பிரபலமாக வாழ்கு வள், இலாபமுடையவள், தேகதிடமுடையவள், புத்தியும் உரோகமு முடையவள், வித்துவானுவளென வறிக.

கார்த்திகை இரண்டாம் பாதத்தின் பலன்

கார்த்திகை இரண்டாம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் ஆசாரயீனமுடையவள், யாவரும் வெறுக்கும் படியான கோபியாவள், அன்னியர்களைச் சேர்ப்பள், தன்னை விரும் பிடார்களென வறிக.

கர்ர்த்திகை மூன்றும் பாதத்தின் பலன்

கார்த்திகை மூன்றும் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வானுலும் அவள் துஷ்ட சகவாசமுடையவள், பரபுருஷரை யிச்சிப் பள், புத்தியில்லாதவள், சாமர்த்திய முடையவள், அதிக கோபி, சொல் பிசகி நடப்பாள், பொல்லாங்குச் செய்வளென வறிக.,

கார்த்திகை நான்காம் பாதத்தின் பலன்

கார்த்திகை நான்காம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வானுலும் அவள் கல்வியறியாதவள், மனஸ்தாபமுடையவள், பொ றுமை யில்லாதவள், துக்கமுடையவள், உரோகமுடையவ ளாகு மெனக் காண்கவும்.

உரோகணி முதற் பாகத்தின் பலன்

உரோகணி முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவா னுலும் அவள் பொருளுடையவள், அழகுடையவள், அலைச்சல் படு குவள், காமி, குற்றமில்லாதவள், வர்மமுடையவள், ரோகியாயிருப் பளென வறிக.

உரோகணி இரண்டாம் பாதத்தின் பலன்

உரோகணி இரண்டாம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் அருளுடையவள், சாந்தமாகியக் குணமுளாள்,

உரோகமுமுடையவள், ஆசாரமுடையவள், சத்திய வாக்கினுல் பொறுமையுடைய புருஷனை மணம்புரிகுவாள், வாய்ச்சாலமுடையவளென வறிக.

உரோகணி மூன்றும் பாதத்தின் பலன்

உரோகணி மூன்றும் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் குருவருளுடையவள், வித்தையும் சங்கீதமும் கற்பள், சுகமுடையவள், நற்கீர்த்தியுடையவ ளாகுமென வறிக.

உரோகணி நான்காம் பாதத்தின் பலன்

உரோகணி நான்காம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் அன்னியருடைமைக்கு இச்சைப்படுகுவள், புத்தியுடையவள், இனியாள், லீலாவினோதியாவள், குறையிலாளென வறிக.

மிருகசீரிஷம் முதற்பாதத்தின் பலன்

மிருகசீரிஷத்தின் முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் தனமுடையவள், சத்துருவை ஜெயம் செய்பவள், தூலதேகி, கோபி, ஆசாரவீனமுடைய ராட்சசியாவாளென வறிக.

மிருகசீரிஷம் இரண்டாம் பாதத்தின் பலன்

மிருகசீரிஷம் இரண்டாம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் ஞாயங்களறிந்துப் பேசுவள், பொறுமையுடையவள், மனோகரம் பெற்றவள், சத்தியவாக்குடையவள், புருஷர்கள் மேல் பிரியமுடையவள், நற்குணியாவளென வறிக.

மிருகசீரிஷம் மூன்றும் பாதத்தின் பலன்

மிருகசீரிஷம் மூன்றும் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் நல்ல வார்த்தையுடையவள், உத்தமி, சாதுசந்தோஷமுடையவள், புத்தி விஸ்தீரணமுடையவள், அதிகாரியாவளென வறிக.

மிருகசீரிஷம் நான்காம் பாதத்தின் பலன்

மிருகசீரிஷம் நான்காம் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் புத்தியுடையவள், சத்தியவாக்கால் சாது தருமம் புரிகுவள், காமி, வீரமுடையவள், கோபி, வஞ்சகமுடைய மனத்தாளாகுமென வறிக.

திருவாதிரை முதற் பாதத்தின் பலன்

திருவாதிரை முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் இனிமையான வார்த்தை யுடையவள், குணமுடையவள், மகாத்மா, புருஷனுக்கு உகந்தவளாகுமென வறிக.

திருவாதிரை இரண்டாம் பாதத்தின் பலன்

திருவாதிரை இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் வாய்ச்சால முடையவள், நிஷ்டூரியாவள், கெர்வி, தீட்சையில்லாதவள் புருஷனுடைய மனம்போற் போக முடையவளாவள், யாரையுமதியாதவளாகுமென வறிக.

திருவாதிரை மூன்றும் பாதத்தின் பலன்

திருவாதிரை மூன்றும் பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் வாதரோகமுடையவள், வாஞ்சையில்லாதவள், கோபி, கோள்சொல்லித்திரிகுவள், புருஷனுக்குக் குணமில்லாளென வறிக.

திருவாதிரை நான்காம் பாதத்தின் பலன்

திருவாதிரை நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் துணிவுடையவள் பந்துக்களுக்குப் பகையாகுவள், ஈனமுடைய மனத்தினள், துர்ப்புத்தியுடையவள், தேக அழுக்குடையவள், துர்ச்சனர் சகவாசமுடையவளென வறிக.

புனர்பூசம் முதற் பாதத்தின் பலன்

புனர்பூசம் முதற்பாதத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் நீண்ட தூல சரீரமுடையவள், பிலுக்குடையவள், போகி, காது மந்தமுடையவள், காமி, மயிர் அழகுடையவளென வறிக.

புனர்பூசம் இரண்டாம் பாதத்தின் பலன்

புனர்பூசம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் உஷ்ணமும் பித்தமுமுடைய தேகியாவள், சோம்பலுடையவள், ஆசாரமில்லாதவள், துக்கமுடையவள், தரித்திரியாக விருப்பாளென வறிக.

புனர்பூசம் மூன்றும் பாதத்தின் பலன்

புனர்பூசம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் குஷ்டரோகியாயும் சதாகாலம் அலைச்சல் படுகு

வள், சுல்வியுடையவள், தந்தரோகமுடையவள், தீர்க்க வயதுளாள், காவியங்கற்பாளென வறிக.

புனர்பூசத்தின் நான்காம் பாதத்தின் பலன்

புனர்பூசம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானலும் அவள் குள்ளமாகவிருப்பாள், நன்றிசெய்வோர்கள்மேல் பிரியமுடையவள், அழகுளாள், நல்ல மனமுடையவள், பார்வை லட்சண முடையவளாகுமென வறிக.

பூசம் முதற் பாதத்தின் பலன்

பூசம் முதற் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவான லும் அவள் புத்தியுள்ளவள், தருமதானஞ் செய்வள், கோபி நிஷ் டூரமுடையவள், தனமுடையவள், தீர்க்காயுளுள்ளவளென வறிக.

பூசம் இரண்டாம் பாதத்தின் பலன்

பூசம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானலும் அவள் தனதானியத்திற் பிரியமுடையவள், தருமவதி யாவள், ஜெனங்களை ஆதரிப்பாள், நிதானமுடையவள், அன்னியர் கள் மீது பிரியமுடையவளென வறிக.

பூசம் மூன்றும் பாதத்தின் பலன்

பூசம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவான லும் அவள் பந்துக்களுக்கு இனியவளாக விருப்பாள், யுத்தியுடைய ஞானியாகுவள், சந்தோஷி, நேயமுடையவள், தன்னுடைய இனத் திறை சகலகாரியமு முடிப்பாளென வறிக.

பூசம் நான்காம் பாதத்தின் பலன்

பூசம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவான லும் அவள் மனக்குறையுடையவள், கலகி, கோபி, புருஷன்மீது பிரியமுடையவள், மகிட்சியையுடையவளென வறிக.

ஆயிலியம் முதற் பாதத்தின் பலன்

ஆயிலியத்தின் முதற் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானலும் அவள் உருபவதியாயுந் தனமுடையவளாயு மிருப்பாள் மேன்மையாகிய புத்தியுடையவள், சந்தோஷமடைவள், யாதொரு வேலையுந் தவருமற் செய்குவள், விதரணசாலியென வறிக.

ஆயிலியம் இரண்டாம் பாதத்தின் பலன்

ஆயிலியம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானலும் அவள் அன்னிய மாதர்களுக்கு ஏவற்றெழில் புரிகு

வள், அழகுடையவள், ஏக்கமுடையவள், ஆசாரமுடையவள், நன்னடக்கை யுடையவளாகுமென வறிக.

ஆயிலியம் மூன்றாம் பாதத்தின் பலன்

ஆயிலியம் மூன்றாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கோபமுடையவளாகிக் கொலைப்புரிகுவள், ஆலசியமுடையவள், வீண் வார்த்தைபேசுவள், நன்மை யில்லாதவளாகுமென வறிக.

ஆயிலியம் நான்காம் பாதத்தின் பலன்

ஆயிலியம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பொன்பொருளும் குலநாசமு முடையவள், சுபமுடையவள், பொல்லாங்குச் செய்பவர்களுக்கு இனியாளாகுவள், நோயாளியைப் புணருவளென வறிக.

மகம் முதற் பாதத்தின் பலன்

மகத்தின் முதற்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும், அவள் யாவரும் பயப்படும்படியாக சிவந்த விழியுடையவள், அன்னியருடமையின் மீது ஆசையுடையவள், யூகி, சிவந்ததேகி, மயிர் நீண்ட அழகுடையவளென வறிக.

மகம் இரண்டாம் பாதத்தின் பலன்

மகம் இரண்டாம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும், அவளதிரூபமடைவள், புத்தியுள்ளவள், பொருள் செலவுடையவள், சந்தோஷி, பொன்னிறம் போன்ற கண்களை யுடையவள், காதுநோயுடையவ ளாகுமென வறிக.

மகம் மூன்றாம் பாதத்தின் பலன்

மகம் மூன்றாம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் தேக திடமுடையவள், பிணியுடையவள், சாது, பொல்லாதவள், கடினமாகப்பேசுவள், பேராசையுடையவள், துன்மார்க்கியெனப் பெயரெடுப்பாளென வறிக.

மகம் நான்காம் பாதத்தின் பலன்

மகம் நான்காம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் துன்மார்க்கமுடைய பெண்களின் வார்த்தையைக் கேட்பாள், சிரங்கும் பிணியுமுடையவள், மனக்கிலேசியாவள், இனிமையாகிய வார்த்தை பேசுவாளென வறிக.

பூரம் முதற்பாதத்தின் பலன்

பூரம் முதற்காலிற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் ஆசாரமுடையவள், கோபி, திறமுடையவள், வியாபாரஞ் செய்குவள், கூச்சமில்லாதவளென வறிக.

பூரம் இரண்டாம் பாதத்தின் பலன்

பூரம் இரண்டாம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் குடும்பவிருத்தியுடையவள், பயிர்த்தொழிலில் விருத்தியுடையவள், தாகமுங்கிலேசமு முடையவள், தான் ஒருவருக்கும் உபகாரம் புரியாளாகுமென வறிக.

பூரம் மூன்றும் பாதத்தின் பலன்

பூரம் மூன்றும்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கீர்த்தியுடையவள், நற்குணமும் மேன்மையுமுடையவள், யாவருக்கு மினியாளென வறிக.

பூரம் நான்காம் பாதத்தின் பலன்

பூரம் நான்காம்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் துக்கமுடையவள் தேகத்தில் வடுவுடையவள், நிந்தையாகிய தொழில் புரிகுவள், வறுமையோர்களையுந் தூஷித்துக் கொண்டு திரிகுவாளென வறிக.

உத்திரம் முதற் பாதத்தின் பலன்

உத்திரம் முதற்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கீர்த்தியுடையவள், மிருதுவாகிய வசனத்தினுள், கன்னியமுடையவள், தீறமுடையவள், பந்துக்கள்மீது பிரியமுடையவள், இங்கிதியாமென வறிக.

உத்திரம் இரண்டாம் பாதத்தின் பலன்

உத்திரம் இரண்டாம்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் அதிகமாக அன்னம் பொசிப்பாள், காமியாகியும் தரித்திரமடைகுவள், நாளுஞ் சஞ்சலப்படுகுவள், யாசகமானது எடுத்து ஜீவிப்பாளென வறிக.

உத்திரம் மூன்றும் பாதத்தின் பலன்

உத்திரம் மூன்றும் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பொய் சொல்லாத வார்த்தை யுடையவளாகும், எந்நேரமுங் கலகச் சிந்தையுடைவள், ஆசாரமுடையவள், பிரிய வசன முடையவளாகுமென வறிக.

உத்திரம் நான்காம் பாதத்தின் பலன்

உத்திரம் நான்காம்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் பிறர்செய்த நன்றியை மறவாதவள், யாரையும் மதியாள், தூஷணமான வார்த்தை புகலுவாள், இவள் வாலிபத்திற் றானே தாய் மரணமாகுவளென வறிக.

அஸ்தம் முதற் பாதத்தின் பலன்

அஸ்தம் முதற்பாதத்தில் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கலகப்பிரியையாகவிருப்பள், பொய்வார்த்தை பேசுவள், கொர்வமுடையவள், ஆசார முடையவள், பசுக்களின் மீது பிரிய முடையவளென வறிக.

அஸ்தம் இரண்டாம் பாதத்தின் பலன்

அஸ்தம் இரண்டாம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் நற்குண முடையவள், வாலிபத்தில் தாயை இழப்பள், ஆடல் பாடல்களிற் பிரியமுடையவள், செல்வமுடையவளாவாளென வறிக.

அஸ்தம் மூன்றும் பாதத்தின் பலன்

அஸ்தம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் வேசியர்கள்போல மனமுடையவள், சிறுவயதினிலே தானே தந்தை மரணமாகுவன், தந்திரவாதியாக விருப்பாள் உரோகமுடையவளாகுமென வறிக.

அஸ்தம் நான்காம் பாதத்தின் பலன்

அஸ்தம் நான்காம்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் நன்னடக்கை யுடையவள், ஈகையுடையவள், நீண்ட தேகி, சந்தோஷமுடையவள், தாயாருக்கு மினிமையானவளென வறிக.

சித்திரை முதற் பாதத்தின் பலன்

சித்திரை முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் ஆகாதகாரியங்களிற் பிரவேசிப்பாள், நேத்திர ரோக முடையவள், சஞ்சாரியாகுவள், கியானமுடையவ ளாகுமென வறிக.

சித்திரை இரண்டாம் பாதத்தின் பலன்

சித்திரை இரண்டாம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் பெருத்த தொனியுடையவள், பயமுடையவள், நெடியதேகி, சஞ்சலமுடையவள், பத்தியாளென வறிக.

சித்திரை மூன்றாம் பாதத்தின் பலன்

சித்திரை மூன்றாம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் இராஜகன்னியர்களுக்கு உபாத்தியாயராகுவள், கீர்த்தியுடையவள், ஞானமுடையவள், நன்னடக்கை யுடையவள், மொழிபிசகாதவளென வறிகவும்.

சித்திரை நான்காம் பாதத்தின் பலன்

சித்திரை நான்காம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் பகைவர்களை வணங்கிக்கொள்வள், புத்தியுடைய வள், செல்வமுடையவள், கீர்த்தியாளென வறிக.

சோதி முதற் பாதத்தின் பலன்

சோதி முதற்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானு லும் அவள் பிரபுவாகிய கணவனை மணம்புரிகுவள், சொற்பனங் காணுவள், ஞானமார்க்கத்திற் பிரியமுடையவள், வித்தை பலித முடையவள், தூதுவான புத்தி யுடையவளாக வாழ்குவாளென வறிக.

சோதி இரண்டாம் பாதத்தின் பலன்

சோதி இரண்டாம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் வாய்ஜ்ஜாலமுடையவள், தீரமுடையவள் புத்தி யில் மிகுந்தவள், காரியவாதி, காமி, உண்மையுடையவளென வறிக

சோதி மூன்றாம் பாதத்தின் பலன்

சோதி மூன்றாம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவா னாலும் அவள் குரூரமுடையவள், நன்னடக்கை யில்லாதவள், கல கப்பிரியாவள், குள்ளமாக விருப்பாளென வறிக.

சோதி நான்காம் பாதத்தின் பலன்

சோதி நான்காம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவா னாலும் அவள் பொய்வார்த்தைகள் பேசுவள், கோபமுடையவள், கலகம் பண்ணப் பிரியமுடையவள், துர்ச்சனர் சகவாசமுடையவள், சீலமுடையவள், காமி, சோரம்போகுவளென வறிக.

விசாகம் முதற் பாதத்தின் பலன்

விசாகம் முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானு லும் அவள் கல்வியுடையவள், வஞ்சகமுடையவள், சௌக்கிய முடையவள், வர்த்தகத்தில் விருத்தியுடையவ ளாகுமென வறிக.

விசாகம் இரண்டாம் பாதத்தின் பலன்

விசாகம் இரண்டாம்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வள், காமியாக விருப்பள், சத்தியவாக்குடையவள், உரோகி, சந்தோஷமுடையவள், இங்கித முடையவளாகுமென வறிக.

விசாகம் மூன்றும் பாதத்தின் பலன்

விசாகம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் குள்ளமான வடிவமுள்ளவள், பலமுடையவள், சோரமுடையவள், யாதொரு காரியமுந் தீரவிசாரிப்பள், பரபுருஷர்களின் மீது இச்சையுடையவளென வறிக.

விசாகம் நான்காம் பாதத்தின் பலன்

விசாகம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் அதிக யுக்தியுடையவள், யோகியாவள், தனசம்பத்துடையவள், ஞானமுடையவள், நெடியவளென வறிக.

அனுஷம் முதற் பாதத்தின் பலன்

அனுஷம் முதற்பாகத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் நீதியுடையவள், சத்தியவாக்கி, சகலமும் அறியவல்லமையுடையவள், ஆசாரமும் சீலமுமுடையவள், பத்தியாளென வறிக.

அனுஷம் இரண்டாம் பாதத்தின் பலன்

அனுஷம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் வாய்ச்சாலமுடையவள், மானமுடையவள், காமியாகுவளென வறிக.

அனுஷம் மூன்றும் பாதத்தின் பலன்

அனுஷம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் உரூபவதியாயும் புத்தியுடையவள், குயிற்போன்ற ஓசையுடையவள், வித்தையறிவள், எடுப்புளாளென வறிக.

அனுஷம் நான்காம் பாதத்தின் பலன்

அனுஷம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் விஷவாக்குடையவள், துரோகி, தமையர்களுடையவள், நாணமுடையவளாகுமென வறிக.

கேட்டை முதற் பாதத்தின் பலன்

கேட்டை முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கெர்வமுடையவள், வித்தையுடையவள், காந்தியுடை

யவள், பரிகாசஞ்செய்குவள், விளையாட்டுப்புத்தி யுடையவளென வறிக.

கேட்டை இரண்டாம் பாதத்தின் பலன்

கேட்டை இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் வாய்ச்சாலமுடையவள், ஈகையுடையவள், சுகமுடையவள், போகி, நல்ல மனமுடையவள், ரோகியாமென வறிக.

கேட்டை மூன்றும் பாதத்தின் பலன்

கேட்டை மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கலகப்பிரியாக விருப்பள், ரோகமுடையவள், ஈனப் புத்தியுடையவள், பால்பாக்கிய முடையவள், பிறருடைய காரியங்களைத் தன்னதென்று செய்யும் மனமுடையவளென வறிக.

கேட்டை நான்காம் பாதத்நின் பலன்

கேட்டை நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் முன் கோபியாவள், கலகப்பிரியாக விருப்பள். வஞ்சகமனமுடையவள், குரூரமான வார்த்தையுடையவள், தன் குலத்தை மேன்மையாகப் புகழ்ந்து பேசுவாளென வறிக.

மூலம் முதற் பாதத்தின் பலன்

மூலம் முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பாபத்தொழில்கள் புரிகுவள், கிழங்கின்மேற் பிரியமுடையவள், உரோகமுடையவள், மதியிலாளென வறிக.

மூலம் இரண்டாம் பாதத்தின் பலன்

மூலம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கல்வியில் விதரணமுடையவள், வயற்று நோயுடையவள், சத்தியவதியாயும் புத்தியுடையவள், மனிதர்களின்மீது பிரியமுடையவளாகுமென வறிக.

மூலம் மூன்றும் பாதத்தின் பலன்

மூலம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் ஈனப்புத்தியுடையவள், சோம்பலாள், காமியாவள் கனிவர்க்கங்களில் பிரியமுடையவள், கொடுமை யுடையவளாகுமென வறிக.

மூலம் நான்காம் பாதத்தின் பலன்

மூலம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கோபமில்லாதவள், ஞானமுடையவள். சத்துருக்களை அடக்க வல்லமையுடையவள் வித்தையுள்ளவளென வறிக.

பூராடம் முதற் பாதத்தின் பலன்

பூராடம் முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் வணக்கமுடையவள் புத்திர தோஷமுடையவள், விகாதம் புரிகுவள், மத்திய வயதுடையவளாகுமென வறிக.

பூராடம் இரண்டாம் பாதத்தின் பலன்

பூராடம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் ரூபவதியாக விருப்பாள், போகி, சினேகிதமில்லாதவள், பலவித சிந்தையுடையளென வறிக.

பூராடம் மூன்றும் பாதத்தின் பலன்

பூராடம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் அழிவில்லாதச் சுகமுடையவள், பாக்கியவதியாவள், வாலிபத்தில் தாயையிழப்பாள், பிணியுடையவளென வறிக.

பூராடம்நான்காம் பாதத்தின் பலன்

பூராடம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் திருடியா யிருப்பாள், முதுகு நோயுடையவள், வாதரோகி பலமுள்ளவள், சிறு வயதிற்றானே தந்தை மரணமாகி விடுவான், வாய்ச்சாலியாவளென வறிக.

உத்திராடம் முதற் பாதத்தின் பலன்

உத்திராடம் முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பலவிதமானக் கலைகளுங் கற்பாள், புத்தியும் ஈகையுமுடையவள், பத்தியிற் சிறந்தவளென வறிக.

உத்திராடம் இரண்டாம் பாதத்தின் பலன்

உத்திராடம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் வீண் வார்த்தைகள் புகலும் லோபியாவள் கலகம் பண்ணுவள், திடமுடையவள், விஷவாக்குடையவளென வறிக.

உத்திராடம் மூன்றும் பாதத்தின் பலன்

உத்திராடம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பெருத்த தொனியுடையவள், கெர்வி, குரூரமுடையக் கலங்கிய மனத்தாளாகும், கோபி, நலவடிவுள தேகியாகுமென வறிக.

உத்திராடம் நான்காம் பாதத்தின் பலன்

உத்திராடம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் தர்மசிந்தையுடையவள், வீரமுடையவள், யாதொரு காரியத்தையும் விருத்திச் செய்குவள், வியாபார விருத்தி யுடையவள், பந்து ஜனங்களின்மீது பக்ஷமுடையவளென வறிக.

திருவோணம் முதற் பாதத்தின் பலன்

திருவோணம் முதற் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் தூலதேகமுடையவள், புத்தியுள்ளவள், சந்ததியில் லாதவள், போகி, உற்சாகி, கலகப்பிரியாவளென வறிக.

திருவோணம் இரண்டாம் பாதத்தின் பலன்

திருவோணம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் காமரூபியாகியும் தயவிலாத லோபியாகுவள், சினேகமில்லாதவள், ஞானியுமாவளென வறிக.

திருவோணம் மூன்றும் பாதத்தின் பலன்

திருவோணம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் உரோகமுடையவள், போகி தனதான்னிய முடையவள், தயவில்லாதவளாகுமென வறிக.

திருவோணம் நான்காம் பாதத்தின் பலன்

திருவோணம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் தானதருமங்கள் செய்ய விருப்பமுடையவள், சிறப்புடையவள், தனவதியாக விருப்பாள், பயிற்றொழில் விருத்தி யுள்ளவளென் வறிக.

அவிட்டம் முதற் பாதத்தின் பலன்

அவிட்டம் முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் நிஷ்டூரமுடையவள், வகையில்லாதவள், கிலேசி பசிபொறுதவள், காமியாகுவள், தூலதேகி, கருநிறமுடையவளென வறிக.

அவிட்டம் இரண்டாம் பாதத்தின் பலன்

அவிட்டம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பேதா பேதமுடையவள், புத்திமான், சத்திய வாக்குடையவள், தருமவதியாகுவளென வறிக.

அவிட்டம் மூன்றும் பாதத்தின் பலன்

அவிட்டம் மூன்றும் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் குறுகிய தேகமுடையவள், குணமுடையவள், மான முடையவள், நன்னடக்கை யுடையவளென வறிக.

அவிட்டம் நான்காம் பாதத்தின் பலன்

அவிட்டம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் அதிக தனமுடையவளாகுவள், குரூரமுடையவள், தூலதேகி, பேதகி, உரோமமழகுடையவளென வறிக.

சதையம் முதற் பாதத்தின் பலன்

சதையம் முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் ரூபவதியாக விருப்பள், நற்குணமுடையவள், சுகமுடையவள், பிராமணாள் மேல் பக்தியுடையவள், பால்பாக்கிமுடையவள், பசுக்கள் மேல் பிரியமுடையவளென வறிக.

சதையம் இரண்டாம் பாதத்தின் பலன்

சதையம் இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் மனக்கிலேசமுடையவள், கோபி, வீண் வார்த்தைகள் பேசுவள், சஞ்சலமுடையவளென வறிக.

சதையம் மூன்றாம் பாதத்தின் பலன்

சதையம் மூன்றாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் யாதொரு காரியமும் பொருமையாகச் செய்து முடிப்பாள், வயற்றுநோயுடையவள், பசிபொறாள், பித்ததேகியாகுமென வறிக.

சதையம் நான்காம் பாதத்தின் பலன்

சதையம் நான்காம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் யாதொரு காரியமும் அறிந்துசெய்வள் மானமுடையவள், நினைத்த காரியத்தை முடிப்பள், சுகமுடன் வாழ்வானது பெருகி வாழ்குவாளென வறிக.

பூரட்டாதி முதற் பாதத்தின் பலன்

பூரட்டாதி முதற்பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பலமுடையவள், பறந்த முகத்தினள், புருஷன் மேல் பிரியமுடையவள், சண்டைக்காரியாக விருப்பள், சுகமுடையவள், உத்தேசமுடையவள், பத்தியாளென வறிக.

பூரட்டாதி இரண்டாம் பாதத்தின் பலன்

பூரட்டாதி இரண்டாம் பாதத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் யாவற்கும் சிரேஷ்டமுடையவளாக விருப்பாள், நினைத்த காரியம் முடிப்பாளென வறிக.

பூரட்டாதி மூன்றும் பாதத்தின் பலன்

பூரட்டாதி மூன்றும் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பேதமுடையவள், உரோகி, புத்தியுள்ளவள், பிறருடைய மனைவியிற் போசனஞ் செய்யப் பிரியமுடையவளென வறிக.

பூரட்டாதி நான்காம் பாதத்தின் பலன்

பூரட்டாதி நான்காம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் உரூபவதி, சத்தியவாக்குடையவள், யாவரும் புகழும்படியாக வாழ்குவள், சினேகிதங்களில் பிரியமுடையவள், சுகமுடையவள், பாக்கியமுடையவளென வறிக.

உத்திரட்டாதி முதற் பாதத்தின் பலன்

உத்திரட்டாதி முதற்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கோபமுடையவள், சஞ்சலமுடையவள், சிரேஷ்டியாவள், நலமில்லாதவளென வறிக.

உத்திரட்டாதி இரண்டாம் பாதத்தின் பலன்

உத்திரட்டாதி இரண்டாம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் காரகரோகமுடையவள், சாதுவாகப் பேசுவள், நற்குணமுடையவள், அறிவுள்ளவளென வறிக.

உத்திரட்டாதி மூன்றும் பாதத்தின் பலன்

உத்திரட்டாதி மூன்றும் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் முன் புத்தியில்லாதவள், பின் புத்தியுடையவள், முன்கோபி, பின்சந்தோஷி, செம்மைநிறம் மயிருள்ளவள், கோள்கள் சொல்லித் திரிகுவாளென வறிக.

உத்திரட்டாதி நான்காம் பாதத்தின் பலன்

உத்திரட்டாதி நான்காம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் சொன்ன சொல்லை அழியாள், பேதமையுடையவள், கோபியாவாளென வறிக.

இரேவதி முதற் பாதத்தின் பலன்

இரேவதி முதற்பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் கலகப்பிரியாகுவள், கிலேசமுடையவள், சிலவேளை சந்தோஷ முடையவளென வறிக.

இரேவதி இரண்டாம் பாதத்தின் பலன்

இரேவதி இரண்டாம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் தீரமுடைய மனத்தினள், கோபமுடையவள், காமி, மிருதுவாகிய தேகமுடையவளென வறிக.

இரேவதி மூன்றும் பாதத்தின் பலன்

இரேவதி மூன்றும் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் புத்தியில்லாதாள், பாபியாக விருப்பாள், தனமில்லாதவள், யாதொரு காரியமும் பேச சத்தியில்லாதவ ளாகுமென வறிக.

இரேவதி நான்காம் பாதத்தின் பலன்

இரேவதி நான்காம் பாதத்திற் செனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் சத்தியவாக்குடைய தீறமுடையவள், சுகமுடையவள், சத்துருக்களை செயம்புரிவாளென வறிக.

நட்சத்திரபலன் முற்றுப்பெற்றன.

இராசிபலன் கூறுகின்றன.

மேஷ லக்கின பலன்

விருத்தம்.

நாணப்பா மேஷமது லக்கினமாகக்
கன்னியவள் செனித்திடினும் ருதுவாகிற்ருன்
பூணப்பா புதுமையுள சிகப்புதேகி
புகழாகுஞ் சமமுள்ளச் சரீரியாகும்
ஊணப்பா குலத்திற்கு மூத்தோளாகும்
யுகமையுடன் மன்னர்பூ ஜிதமேயுள்ளாள்
நாணப்பா வரும்புத்திர தோஷமுண்டாம்
நயமாகப் பலவிதத்தும் செல்வமோங்கும்.

(இ-ள்) மேஷ லக்கினத்தில் ஜெனனமானாலும் அல்லது ருது வானாலும் அக்கன்னிகை சிகப்பு புதுமையான தேக வருணமும் சமசரீரமுடையவள், குலத்திற்கு மூத்தோளாவள், அனேகமான மன்னர் பூஜிதம் உடையவள், புத்திரதோஷமடைவள், பலவிதமான செல்வமும் யோகமுமுண்டாம். எ - று.

இரிஷப லக்கின பலன்

ஓங்கவே ரிஷபமது லக்கினமாக
உத்தமியாள் செனித்தாலும் ருதுவாகிற்ருன்
சாங்கவே புத்தியுடன் கல்வியுள்ளாள்
சகலபாக் கியவஸ்திரா பரணமுள்ளாள்

தாங்கவே குடும்பமதில் மேன்மையுள்ளாள்
　　தனமோடுச் சுகணவதி யாயிருப்பாள்
வாங்கவே பிரபலமும் புத்திரதோஷம்
　　வனிதையவள் தேகதிடவுடல் லாசியாமே.

(இ-ள்) இரிஷப லக்கினத்தில் ஜெனனமானாலும் அல்லது ருதுவானாலும் அவள் புத்திவிசாலமும் கல்விமேற் பிரியமாவள், அனேகதன வஸ்திராபரணாதி செல்வமுடையவள், குடும்ப மேன்மையும் சுகுணவதியாகியும் பிரபல யெண்ணமுடையவ ளாவளென்றும் புத்திரக்குறைவை யடைவாள், தேகதிடமுள்ள உல்லாசியாகும். எ - று. 2

மிதுன லக்கின பலன்

ஆமப்பா மிதுனமது லக்கினமாக
　　அரிவையவள் செனித்திடினும் ருதுவாகிற்றாள்
தாமப்பா வழகுடையா ளாகும்போகி
　　தரித்திடுமே பெண்பிரஜை யதிகந்தானும்
போமப்பா யிவள்தனக்கு வயதுமத்தில்
　　பீடையது தான்துடருங் கணவனாற்கும்
காமப்பா செல்வமுடன் போகமுண்டாம்
　　கன்னியருஞ் சுகமுடனே வாழ்வாள்பாரே.

(இ-ள்) மிதுன லக்கினத்தில் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் லட்சணவதியாயும் போகியாயும் பெண்பிரஜை யதிகமுடையவள், மத்திய காலங்களில் பர்த்தூர் பீடையுடையவள், செல்வமும் யோகமுமுண்டாகிச் சுகமுடன் வாழ்குவாள். எ - று. 3

கடக லக்கின பலன்

பாரப்பா கடகமது லக்கினமாகப்
　　பாவையவள் செனித்திடினும் ருதுவாகிற்றான்
கூரப்பா சஞ்சாரி மிருதுவாக்கி
　　குலவியக் கல்விபுத்திரச் செல்வமுண்டாம்
சீரப்பா செல்வமுடன் கீர்த்தியுண்டாம்
　　சிறந்திடும் வஸ்திரா பரணமுண்டாம்
நேரப்பா குடும்பமது விருத்தியுண்டாம்
　　நிலைகண்டு யிப்பலனை நோய்ச்சொல்லே.

இ-ள்) கடக லக்கினத்தில் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் சஞ்சாரி மிருதுவாக்குங் கல்வியும் புத்திரும் பிரபல செல்வமும் யோகமும் வஸ்திராபரணமும் குடும்ப விருத்தியுடையவள். எ - று. 4

சிம்ப லக்கின பலன்

சொல்லவே சிம்பமது லக்கினமாக
சோதனையாய் ஜெனித்தாலும் ருதுவாகிற்ருன்
வெல்லவே நல்லபுத்தி பெரியோர்பத்தி
விளங்குமே யுத்தியோகம் புத்திசித்தி
புல்லவே கல்வியொடு வாஞ்சையுண்டாம்
புகலுவாய் புத்திரர்க்குந் தோஷமுண்டாம்
அல்லவே பத்தாவிற் கடுக்கும் வியாதி
அதுநீங்கி யறிவைசுக மடைவாளென்னே.

(இ-ள்) சிம்பலக்கினத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவாளுலும் அவள் திடபுத்தியுடையவள், பெரியோர் பக்திசித்தியுடையவள், மேலான உத்தியோகமும் புத்தியும் கல்வியும் பிரியவாஞ்சையுமுடையவள், ஆனுலும் புத்திரதோஷ மடைகுவள், பர்த்தாவிற்கு வியாதியானதுத் தோன்றி பின்பு நிவர்த்தியாகி சுகமுடையவளாய் வாழ்வாள். எ - று. 5

கன்னியா லக்கின பலன்

என்னவே கன்னியது லக்கினமாக
ஏந்திழையாள் ஜெனித்தாலும் ருதுவாகிற்ருன்
மின்னவே கணவன்மேல் பத்தியுள்ளாள்
மேலான செல்வமுடன் யோகமுள்ளாள்
பன்னவே கல்வியொடு புத்தியுள்ளாள்
பரிகிய தனவஸ்திரா பரணமுள்ளாள்
உன்னியே யனவரனுக் கூலமோடும்
உகமையுள பர்த்தாவைச் சேர்வாள் மாதே.

(இ-ள்) கன்னியா விராசிலக்கினமாக அதில் ஜெனித்தாலும் அல்லது ருதுவாளுலும் அவள் பர்த்தாவின் பக்தியுள்ளவள், செல்வத்துடன் யோகமுடையவள், தனலாபமும் பிரபலயோக முடையவள், கல்வித்திறமையும் புத்தியுமுடையவள், வஸ்திராபாணுதி செல்வமும் அனேகர்களின் அனுகூலத்தையும் பெறுவள், அதிகாரமும் பிரபலமும் உடைய பர்த்தாவைச் சேர்ந்து வாழ்வாள். எ - று. 6

துலா லக்கின பலன்

மாதெனவே துலாமதுவும் லக்கினமாக
மங்கையவள் ஜெனித்திடினும் ருதுவாகிற்ருன்
ஏதவே யெத்தொழிலுங் கைத்தொழிலும்
யெழிலாகச் செய்யநல்ல யீகையுள்ளாள்

போதவே கணவனொடு புத்திரர்க்கும்
பொருந்திய தோஷமது உடையாளாவள்
சீதவே யதர்மியென்க் காலந்தப்பிச்
சேயர்களே யின்றுதரித் திரியாவாளே.

(இ-ள்) துலாலக்கினத்திற் ஜெனித்தாலும் அல்லது ருதுவாளுலும் அவள் எவ்விதத் தொழிலுங் கைத்தொழிற்களிலும் விவேகமுடையவள், பர்த்தா புத்திரதோஷ முடையவள், குடும்ப க்ஷயவதர்மியாவள், காலதாமதப் புத்திரரையுடையவள், பின் தரித்திரத்தை யடைந்து வாழ்குவாள், எ - று. 7

விருச்சிக லக்கின பலன்

ஆகவே விருச்சிகமும் லக்கினமாக
ஆரிழையாள் ஜெனித்திடினும் ருதுவாகிற்ருன்
போகவே கடுஞ்சொல்லிக் கபடியாவள்
புருடனுக் கடங்காள்ரூபி பெருத்ததேகி
காகவே பொருள்சேதம் புத்திர நஷ்டம்
கணவன்வழி யழிவுரினும் பயமில்லாதாள்
ஏகவே குரூபியாய் யெழிலுளோளாய்
இருந்திடினு மதிகசு மில்லாள்சீரே.

(இ-ள்.) விருச்சிக லக்கினத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானுலும் அவள் கடுஞ்சொல் பகருங்கட்டியாயும் புருடனுக்கடங்காள், கருமை உரூபம் பெருஞ்சரீரியாவள், புத்திரநஷ்டமாகும் பர்த்தாவகையழியும் பொருட்குன்றும் பயங்கரமில்லாதவள், குரூபியாவள், அதிக சுகமடைய மாட்டாதவளாகும். எ - று. 8

தனுசு லக்கின பலன்

சீரெனவே தனுசதுவும் லக்கினமாக
சிறப்பாக ஜெனித்திடினும் ருதுவாகிற்ருன்
நேரெனவே முகவழகும் பாலியதேகி
நிந்தையுள்ள வஞ்சகியாள் ராஜபோகி
பேரெனவே இரண்டுவிதக் குடும்பந்தன்னில்
பெட்புருகும் தனமதுவும் பெற்று வாழ்வள்
கூரெனவே புத்திரரைப் பெற்றிழப்பாள்
குன்றிடினும் பின்சுகத்தை யடைவாள்விள்ளே.

(இ-ள்) தனுசுலக்கினத்திற் ஜெனித்லாலும் அல்லது ருதுவானுலும் அவள் முகவசீகரமும் பாலியபலமுடைய சரீரி, வஞ்சகமுடையவள், தனுர்ச்சிதாதிமேல் அதிகக் கருத்தும் தனயோகப் பிரபலமுமுடையவள், இராஜபோகமாகி வாழ்குவள், இரண்டுவிதக்

குடும்பதனமுடையவள், புத்திர விருத்தியும் பெற்றிழப்பள், பின் பிரபலமுண்டாகி வாழ்துவாள். எ - று. 9

மகர லக்கின பலன்

விள்ளவே மகரமது லக்கினமாக
விளங்கவே ஜெனித்திடினும் ருதுவாகிற்ருன்
கொள்ளுமே குடும்பபகை சுகமேயில்லாள்
குமிங்கியக் கிலேசமுடன் பிணியுமுள்ளாள்
துள்ளவே தேவதையால் சிலநாள்பாதை
தொடுக்குமே தனக்குயோகம் பிரஜாவிருத்தி
தள்ளவே சிலகாலந் தரித்திரியாகித்
தான்மறிப்பள் யமங்கலியு மாகித்தானே.

(இ-ள்) மகாவிராசி லக்கினமாக அதில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் பர்த்தாவுக்குந் தனக்குஞ்சுகமில்லாள், குடும்பப் பகையுடையவள், மனதுக்கிலேசமுடையவள், தேகபிணியாலிளைப்பள், தேவதைகளாலுந் தேகபாதைச் சிலகாலத்தி லுண்டாகும் யோகமுடையவள், ஜெனனகுடும்ப தரித்திரமும் பிரஜாவிருத்திகளுமுள்ளாள், கருமை பொதுநிறத்தை யுடையவள், சமசரீரியாவள், சிலகாலம் தரித்திரத்தை யடைவள், அமங்கலியாகி மறிப்பாள். எ - று. 10

கும்ப லக்கின பலன்

தானெனவே கும்பமது லக்கினமாக
தையலவள் ஜெனித்திடினும் ருதுவாகிற்ருன்
நானெனவே திரேகதிடந் தரித்திரமுள்ளாள்
நளினமுள யதிமோகிப் போகியாவாள்
ஏனெனவே செல்வமொடு பாக்கியங்கள்
எளிதாகத் தாமதத்திற் பெற்றுவாழ்வள்
தேனெனவே தேகமது கருமையாகும்
திகழாகும் புத்திரரால் கிலேசமுண்டாம்.

(இ-ள்) கும்பலக்கினத்தில் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் தேகதிடமும் தரித்திரமுமுடையவள், அதிக போகமோகியாவள், செல்வமுடையவள், பாக்கியமுந் தாமதக் குணமுமுடையவள், தேகங்கருமை அல்லது புதுநிற முடையவள், கிலேசியாகி புத்திரரால் மனத்துபற மடைகுவாள். எ - று. 11

மீன லக்கின பலன்

விள்ளவே மீனமது லக்கினமாக
வெழிலாக ஜெனித்தாலும் ருதுவாகிற்ருன்

கொள்ளவே குடும்பவிருத்தி செல்வமோடுக்
குறைவிலாப் பூஷணமுந்தனமு முள்ளாள்
தள்ளவேகணவன் சுகம்மேன்மை யுள்ளாள்
தகப்பன்வழி விருத்திபர்த்தா வழியும்நாசம்
என்னவே சகலபத்திப் புத்திர விருத்தி
இருந்திடினும் துக்கபலன் அடைவாள் பாரே.

(இ-ள்) மீன விலக்கினத்திற் செனித்தாலும் அல்லது ருது வானாலும் அவள் குடும்ப விருத்தியுடையவள், செல்வ முடைமையும் ஆபரணாதி தனமும் மேலான பர்த்தா சுகமும் மிகவு மேன்மையுடையவள், பிதுர் குடும்ப விருத்தியும் கணவன் வழியழிவுமுடையவள், பலவிதத்தினாலுஞ் சிரேஷ்டம் உடையவள், என்றும் சுகத்தைப் பின்னடைவள், புத்திரலாப மதிக விருத்தியுடையவளென்றும் அவ்வழியிற்றானே துக்கப்பலன்களையும் அடைவள். எ-று. 12

இனிப் பாவவிதிகளை கிரகசஞ்சார மூலங்களாலும் மேற்கூறிய அம்சவழியாலுங் கூறப்படும்.

மேஷ விருச்சிக பலன்

அங்காரகனுடைய ஆட்சிவீடாகிய மேஷம் அல்லது விருச்சிகம் லக்கினமாக அதிற் ஜெனித்தாலும் அல்லது ருதுவானாலும் மாதுர்க்காரகனாகிய சந்திரன், களத்திரக் காரகனாகிய சுக்கிரன், இவர்கள் தனுசு, குடும்பம், மீனம், விருஷபம், கடகம், இந்த விராசிகளிலிருந்து பகைப்பெற்றப் பாவிகளைக் கூடவாவது நோக்கவாவது இல்லாதிருக்கினும், வியாழன் கூடவாவது கேந்திரகோண இடத்திலிருக்கினும், சுக்கிரன் பிரபல பெலவானாகி சந்திரகேந்திரம் அல்லது இலக்கின கேந்திரத்திலிருக்கினும், 2-8-12-ஆமிடத்திற் சனி, அங்காரகன், பாம்பு, சூரியன், இவர்களிருக்க அல்லது பார்க்காமலிருக்கில் ஏழாமிடம் சுத்தமானாலும் அல்லது அதில் சுபக்கிரகங்களிருக்கினும் ஜாதகமானவள், அதிக ரூபலா வண்ணியவதியாகி பிரபல குடும்பமுஈ இவளாற் கணவனுக்கு ஏராளமானச் செல்வமும் துதியுங் கீர்த்தியுங் கிரகவாகனாதி பூமிச்செல்வங்களையும் இராஜவதிகாரத்தையும் பாலிய முதலிலே அடைவள், இவ்வித மிருக்குங் கிரகத்துடன் சனி முதலிய பாபர்கூடினும் நோக்கினும் அற்பபாபிகள் கூடின் சிலநாள் செல்வமின்றியும் பலவகை வருத்தமடைந்தும் துன்பதுக்க மனுபவிப்பாளென வறிக (அன்றியும் தேகரூப மற்பமாகவும் கலற்பான சரீரியாகவும் இருப்பாள்.)

தனுசு, கும்பம், மீனம், விருஷபம், கடகம், இந்த விராசிகளில் பாபிகளிருக்கில் ஜாதகமானவள் வருந்தி யிளைப்பள், சமசெல்வமும் தேகதிட மில்லாதவளுமாவள் என வறிக.

கிரகாம்ச பலாபலன்

சனியம்சமாக ஜாதகமானவள் தனயோகமும் மேலான அரச சமானத்துவமும் ரூபமில்லாள், கருநிறமடைவள், மந்தபுத்தியுந் தூல சரீரமும் ஆவாள், ஆயுட்குறையும் புத்திரதோஷத்தையு மனுபவிப்பள், கால்களிலும் அவயவத்திலுங் குறையடையாளமுள்ளவள், ஞானமுடையாள், கணவனுக்கு போக பங்கமாய் வாழ்வாளென வறிக.

அங்காரகன் அங்கிசமாகவரின் அம்மாது மங்கிலிய தோஷம் பாலியத்திலேயே அடைவள், துர்க்குணியாவள், செம்மையான நிறசரீரி குடும்ப நஷ்ட சோகமடைவள், மகவற்பலாபமும் அவ்வித அற்பமாகவும் மத்திய வயதில் மாணத்தையும் அடைவள், அற்ப தனமுடையவளென வறிக.

முதலாவது இரண்டாவது கூறியஸ்தானங்களில் கண்டப்பாபிகள் முன் கூறியபடியிருந்தும் சனியங்கிசமாகவரின் அம்மாது பலவித துக்கமுடையவளாகியும் தனநஷ்ட முடைபவளாய்த் தரித்திரியாய் பழஞ்செல்வமும்போம் அரூபியாவள், குலயீனுதிகளையும் மனோவிசாரத்தையும் பெறுவள், தேசாடன சஞ்சாரியாவள், மேற்படியிடங்களிலிருக்கில் பிறந்தவள் வியாதிமுதலிய மகவீனளாய்ப் பர்த்தூர் தோஷமும் வைதவ்வியவதியாய் வருந்தியிளைப்பள், குடும்ப துக்கத்தையும் சோகத்தையும் பொருந்துவள், இவ்விதம் முதற் கூறிய சுபவிதியிற் சுபாம்சமான குருவங்கிசமுங்கூட உரிற்றன மாடமாளிகையிலும் அனேக வடிமைகளுடனுஞ் செல்வம் பெருக்குடன் மகவு தோஷமாத்திர மடைவள், மற்ற வெல்லாச் சீரும் சிறப்பு முடையவளென வறிக.

சுக்கிராம்சமாகில் அம்மாது சுமங்கிலியாகி மாணமடைவள், பிரபலவாழ்வுஞ் செல்வச் செருக்குமாபரணுதி வெண்மை வஸ்திரப் பிரியமும் நாளுக்கு நாள் கணவனுக்கு யோகமும் வாகனம் பாற் பசு வடிமையுடன் பலதேசவாசத்துடனும் கீர்த்தியானதுப் பெற்று வாழ்குவாளென வறிக.

புதனங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவானுலும் அம்மாது கல்விப் பெருக்கமும் அதிக ஞானவதியாகி யாவரும் புகழ

வாழ்வாளென்று மறிகப்பாலராகின் யோகமத்தியபமாகிய புத்திரி யாகி இரந்துண்பவளென்பர், கணவனுக்கு வாயுட் குறைவுடையவ ளென வறிக.

அங்காரகன் அங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவா னாலும் அம்மாது பலவீனத்தொழில் புரிவள், பலரையும் விரோதிப் பள், அமங்கிலியம் நல்ல எவ்வன காலத்திலேயே உண்டாகும் துக்க முடையவள், தரித்திரப்படுவாளென வறிக.

குரு சுக்கிரன் அங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவா னாலும் அம்மாது விசேஷ செல்வமில்லாள், நற்குணியாவள், தேவ தா பத்தியும் மகப்பேர் அதிகமுள்ளவள், செல்வக்குறையான கண வனை மணப்பள், பின் அற்ப செல்வமுண்டாகுமென வறிக.

புதன் அங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அம்மாது கல்வி முதலியவையும் அறிவள், துர்ச்செய்கையும் பற புருஷ றல்லது பல புருஷரால் செல்வம் பெருவள், மகவு தோஷ மடைவாளென வறிக.

சுபர்கள் பாப க்ஷேத்திரத்திலுங் கன்னி, மேஷம், மிதுனம், விருச்சிகம், மகரம், இவ்விராசிகளிலுமிருந்து சுபராகிய குரு, சுக் கிரன், புதன், இவர்கள் அங்கிசத்திற் செனித்தாலும் அல்லது ருது வானாலும் அம்மாது பூர்வாச்சிதமான பிதுர்வம்சமானது விருத்தி யும் தனமுமின்றி நொடித்தவளவாய்ப் பின் புத்திரன் பர்த்தாவிவர் களாலதிக யோகவாழ்வையுஞ் செல்வத்தையுங் கிரகவாகனம் பூமி வதிகாரியாகி ஜெயத்துடன் றன்வயது யென்னும் எவ்வனப்பருவம் பின்னிடைவள், மகவுச் செல்வம் விசேஷமாய்ப் பெருகுமென வறிக.

பாபக்கிரகமாகிய சனி, குஜன், அங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அம்மாது ஆயுள் குறைவாய் விதவை தோ ஷமடைபவளாய் வியாதிஸ்தியாகியும் புத்திரசோகம் உருவ யீன முடையவளாய்த் தரித்திரமடைந்து பின் குடும்பவிகாதங்களினாற் றனலாபமும் யாவருக்குந் துர்ச்செய்கையென்று கூற நடப்பவளென வறிக.

மேற்சொல்லிய இராசிகளிலும் மேற்சொல்லிய க்ஷேத்திரத்தி லும் இருந்து சுபாங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவானா லும் அவள் ஈனதரித்திர குலத் துதிக்கினும் உரூபவதியாகியும் நற் குண நற்செய்கை யுடையவளாகி மேன்மையுடன் சிலகாலந் தரித்

திராம்சத்தையும் பின் சுகமடையினும் கடையில் வைதவ்வியமா வள், பர்த்துர் வகையுமிளைக்கும் பாபாங்கிசமாகின் அற்பாயு ளுடையவளாகியும் பல கெட்ட யெண்ணமும் பிசாசு உருவத்தையுங் கொண்டவளாய் புருஷனேயே மரிக்கச்செய்யுங் குணமுள்ளவளா கியும் அனேக விவாதம் புரிபவளாய் இருப்பாளென்பர்.

மேற்கூறியவதிற் குருவங்கிசமாகி அக்குருவும் அவ்வங்கிசங் காண வேதுவான கிரகமும் பாப பகையோராகின் அம்மாது அரச குலத்திருக்கினும் அகிருத்தியவனுசாரியாகியும் பலரையு மிகழ்ந்து தானுமிகவழுவதோடு பரதேச பரகுலஞ் சேருவளாகும், சுபமித் துரு கிரகமாகின் விசேஷ நல்ல யோக்கிய உரூபமுள்ளவளாகி அர சர் சமானமானக் கணவனை யடைந்த காலமுதல் மிகவும் மேலான பிரபலத்துடன் வாழ்வாளென வறிக.

சுக்கிரன் அங்கிச பலன்

சுக்கிரன் அங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் அசன சயனபோக போக்கிய சார்வயோகியாகி மேலான பத வியுடனும் தனத்தை விரையஞ்செய்வள், மகவின்றித் தவிப்பள், சுமங்கலியாகவே மரணமடைவளென வறிக.

புதன் அங்கிச பலன்

புதன் அங்கிசத்திற் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் விரத்தி ஞானிபோலக் காண்பித்தும் பலவிஷயா துரியாகி வாழ்வள், மத்திபத்திலேயே வைதவ்வியம் வரும், புத்திரதோஷ முண்டாகும், நாதியாவள் யென வறிக.

சனி யங்கிச பலன்

சனி அங்கிசமாகச் செனித்தாலும் அல்லது ருதுவானாலும் அவள் ஒருவருக்குத்தாதியாகி இயாவரையும் வசியம்செய்து மிகவும் மேலான இடத்திலிருந்து வருவள், இராஜ ஸ்ரீகளுக்கு மிகவும் அத்தியந்த பிராண சகித்துவத்தினல் இராஜயோக மடைவள், அனேக தனத்தையும் ஆர்ச்சித்துத் தன் கணவனையுஞ் சம்ரக்ஷணை செய்வள், இச் சனி முதலியோர் அந்தந்த அம்சப்ரதான கிரகத் துக்கு விரோதியாகிற் திருடிச் சீவனம் இராஜ தெண்டனை பொய்த் தொழிற் செய்வள், பலவித அகிருத்தியவதியாவளென வறிக.

குஜாங்கிச மித்துருவாகின் மிகவும் பிரபல பூமிவதிகா மேன் மை இருக்கினும் பலர்களினெண்ணப்படி நடப்பள், அனேக தனத் தை யார்ச்சிப்பள், செல்வவதியானாலுங் கடைசியில் மங்கிலியத்துவ

மும் உரோணத்தையும் விவாகத்தையும் அவக்கியாதியையும் நல்ல எவ்வன வயதுள்ள மகவு பெண்ணாகிலும் புருஷனாகிலும் வளர்த்து எமனுக்கிட்டு துயரமுறுவளென வறிக.

சாதகியின் வாயுட் பலன்.

ஆயுட் பாவம்

சகோதரகாரகனாகிய குஜன், வித்தியாகாரகனாகிய புதன், புத்திரகாரகனாகிய குரு, ஆயுட்காரகனாகிய சனி, இந்த நால்வரும் சுபக்ஷேத்திரமான கேந்திர திரிகோணத்திலிருந்தும் ஆட்சியுச்சம் பெறினும் அல்லது நட்புராசியிலிருந்தும் குருவங்கிசமாக அல்லது சனியங்கிசம் பெற்ற ஜாதகி மேற்கூறிய நான்கு கிரகங்களில் மூவராவது சுபாம்சம் பெறில் அந்தஸ்திரீக்கு வயது வரு (100) வரை பாமாயினுடையவள். இதில் மூன்று கிரகம் வலுத்து வேறு பாபாம்சமாகின் வயசு வரு (75,) இருவரே வலுத்து அவர்கள் சுபராய் அல்லது ஒருவர் சுபராகி மற்றொருவர் பாவராகிலும் சுபாம்சமாகின் வயது வரு 50-க்குள்ளும், பாவராகின் வரு 32-க்குள்ளும் ஒருவர் வலுத்து அவர் சுபராகிச் சுபாம்சமானால் வரு 25-க்குள்ளும், அதிற் சுபர் பாபாம்சமாகில் வரு 12-க்குள்ளு மரிப்பாளெனக் காணல் வேண்டும்.

கணவனாயுட் பாவ பலன்

சுக்கிரன, குஜன், குரு, இம்மூவருங் கேந்திரகோண பெலம் பெறினும் அல்லது இலக்கினத்திற்கு 2-ஆமிடம் 12-ஆமிடம் இவைகளிலிருக்கினும் சுபக்ஷேத்திரமாயும் 8-2-7-ல் குஜன், பாம்பு, சனி இன்றி யிருக்கினுங் குரு நோக்கமுற்றும் வலுத்தரினும் மேற்கூறிய மூவரும் சுபக்ஷேத்திரத்திலிருந்தும் பாவரைக் கூடாமலும் குருவங்கிசம் மூவருமுறில் கணவன் அநேக நாள் வாயுளுடனும் வரு 100-வரைப் பிரபலவந்தனாகி வாசனுக்கிணை மன்னவனாய்க் கீர்த்திப்பெற்றுப் பிரபல யோகத்துடனும் அனேக மாடமாளிகை கூடகோபுர வதிகார வடிமைகளுடன் மகப்பெருயோக மடைந்து வாழ்வளென வறிக.

சுக்கிரன் புதன் அம்சமாகின் அம்மாது வயதுடையக் கணவனை மணப்பள், திரவிய லீலா விநோத மேன்மையானவளாகி வரு (40) வரை கணவனுக்கு வாயுள் தீர்க்கத்துடன் வாழ்வள், செல்வமுடையவள், பிறரால் பிரபல மேன்மையும் கீர்த்தியுமுண்டாகும்.

குஜன், சனி, அங்கிசமாகின் அம்மாது யௌவன விருத்தப்ப ருவமானாலும் கடையிற் கணவனை இழப்பள், வஙு (30) க்குள்ளா கவே அமங்கலியாவள் யெனக்காணல் வேண்டும்.

மேற்கூறிய மூவரிலிருவர் மாத்திரம் வலுத்து அன்னியோன் னியராகியும் சுபாம்சம் பெறில் வஙு 40-வரை கணவனுயுளுடைய வள், பாலிய காலமின்றிப் பின் சுகத்தையும் தனத்தையுஞ்செல்வத் தையும் பெற்று வாழ்வளென்றுங் கூறல்வேண்டும் சிலபிணியாலும் அற்பகாலம் வருந்துவளென வறியவேண்டும்.

இருவர் பெலத்துப் பாபிகளினங்கிசமாகின் பாலியத்திலேயே கணவனை இழப்பள், மகவுண்டு செல்வவதியாய் பாக்கியத்துடன் வாழ்வளெனக் காணல்வேண்டும். வஙு 16-க்குள்ளாகவே கணவனை இழப்பாளென வறிக.

மேற்கூறிய கிரகங்கள் மூவரில் ஒருவர் மாத்திரம் பெலத்து மற்றவர் பெலன் கெடினும் சுபாம்சம் பெறின் வஙு 12 வரைக்கும் கணவனுயுள் விருத்தியுள்ளவள், தனயோக முடையவள், மிகவும் மேலானவளாகி வாழ்வள்.

பாபாம்சமாகின் வஙு 5-க்குள் ஜாதகியினுடையக் கணவனுயுள் முடியும், விவாக முதலியத் தனமுடையவள், பலவகை வருத்த மடைவள், இதினுங் குஜாம்சமாகின் குஜன் பெலத்து முன்கூறியப் படி இருக்கினும் 8-ஆமிடம் 3-ஆமிடம் இவைகளில் குசனுடன் குஜனை யொற்ற இரண்டு பாபிகள் சேரினும் நோக்கினும் எட்டா மிடம் பாபர் வீடாகி இரண்டாமிடத்தில் சனி, பாம்பு, இவர்களிருக் கினும் சுபசம்பந்த திருஷ்டி இருக்கின் விவாகத்துடனே கணவன் சுகமடையாள், கணவனை இழப்பாள் பலவகை வருத்த மடைவாள்.

மேற்கூறிய அவ்விதப் பாபிக்களுடன் சுக்கிரன் அல்லது சந் திரன் கூடியிருக்கில் ஜாதகி பலரையு மணப்பள், மற்றொரு விவாக மும் பூணுவள், அன்றியும் இரண்டு மூன்று முதலிய பல கணவனை மணப்பள், சில சில காலம் அவர்களின் ஆயுளைக்கண்டு பின்பு மறிப் பள்.

கொடுமையுடைப் பாபக்கிரகங்கள் 8-2-5 ஆமிடங்களிலிருக்க அவ்விராசிக்கதிபர் பகைநீச பாபக்ஷேத்திரத்தில் பாபிகளுடன் கூடியிருக்கினும் சுபக்கிரங்கள் பார்வை யில்லாதிருக்கினும் ஜாத கியினுடைய கணவனுக்கு யோகபங்கமும் கணவன் குலித்தரித்த வுடன் அப்புருடன் மறிக்குதலாவள்.

மூன்றாமிடத் ததிபருடனாவது மூன்றிலாவது ஆயுட்காரகனா கிய சனியும் வித்தியாக்காரனாகி புதனும் கூடி நிற்க வேறு சுபக்கிர கங்களின் திருஷ்டி இல்லாதிருக்கினும் சம்பந்தமின்றி யானாலும் புதன், சனி, அங்கிசமாக விருக்கிற் ஜாதகி போகத்தி லிச்சையில் லாள், மணம்புரியமாட்டாள், விரகத்திபோலுஞ் சித்த பிரமைகள் போலும் புத்தி மடித்திறப்பள்.

மேற்கூறியக் கிரகங்களுடன் அங்காரகன் கூடி அவருடைய அங்கிசம் பெற்றிருக்க ஜாதகி சிலநாள் அனுகூலிபோலிருந்து கண வனை உயிருடன் இழப்பள், பின் அவள் சித்தப்பிரமையால் வாடித் திரிவள், வியாதியினாற் றுன்பமும் பலவகை வருத்தமும் அடைந்து உலகில் யாவரும் இகழத்திரிந்து உழலுவளென வறிக.

புத்திர பாவகணிதம் அறியும் வகை.

புத்திரயோக காலயோக பலன்

புத்திரகாரகனாகிய வியாழன் அல்லது மாதுர்க்காரகனாகி யச் சந்திரன் இவர்கள் கடகம், சிம்பம், தனுசு, மீனம், இந்த விராசி களிலிருக்க சனி, இராகு. புதன், முதலியப் பாபிகளைச் சேராமல் சுபருடன் கூடியிருக்கினும் அல்லது தனித்திருக்கினும் ஜாதகிக் குப் புத்திரர் இரண்டுக்கு மேலானவர்களுடன் பல புத்திரலாபத் தை பாலியம் யௌவனம் இந்த பருவமாகிய வயசு ௵ 12-முதற் கொண்டே புத்திர விருத்தி யடைவாள்.

மேற்கூறிய வியாழன், சந்திரனுடனாவது கடகம், மீனம், தனுசு, சிம்பத்திலாவது பிதுர்க்காரனாகிய சூரியன் அல்லது சகோ தரக் காரகனாகிய அங்காரகன் இவர்கள் கூடியிருக்கில் ஜாதகிக்குப் புத்திரபாவம் முன் நசித்து பின் உண்டாகும் அதில் ஆண் சந்ததி அதிகமாய் விருத்தியுண்டாம்.

வித்தியாகாரனாகிய புதனும், களத்திர காரகனாகிய சுக்கிரன், இவர்கள் கூடி நிற்கில் ஜாதகிக்கு பெண் சந்ததி அதிகமாகும் ஆண் சந்ததி அற்ப விருத்தியடைகுவள், சனி, பாம்பு இவர்கள் சேரில் புத்திரர் உண்டாகி மறித்துப்போகும்.

மேற்கண்ட குரு, சந்திரன், சனி, பாம்பு, புதன், இவர்களில் எவருடன் கூடியாவது மிதுனம், கன்னி, துலாம், மகரம், கும்பம், மேஷம், விருச்சிகம், இந்த விராசிகளிலேறி நின்றுப் பாபபலத் துடன் இருந்தும் தனுசு, துலாம், விருஷபம், மீனம், இந்த ராசி

களில் சனி, பாம்பு, செவ்வாய், இந்தப் பாபக்கிரகங்களில் எவர் நின்றாலும் குரு முதலிய சுபக்கோட்கள் பலமில்லாதிருக்கில் ஜாதகிக்குப் புத்திரலாபங் கிடையாது அப்படிக்குச் செனித்தாலும் மறித்துப் போய்விடும்.

இவர்களுடன் சந்திரன், அல்லது சுக்கிரன், கூடி நிற்கில் ஜாதகிக்கு காலதாமதத்தின் மேல் புத்திரலாப முண்டாகும்.

குரு, சந்திரன், பலமற்று விருக்க சுக்கிரன், மீனம், தனுசு சிம்பம், கடகம், இவைகளில் பலத்துடனிருந்து சுபக்கிரகங்கள் பார்க்க நிற்கில் ஜாதகி பெண் சந்ததியே விருத்தியடைவாள், புருஷ சந்ததி கிடையாதாம்; இதில் சூரியனாவது புதனாவது சேர்ந்து நிற்க ஏக புருஷ சந்ததி விருத்தியடைவாள்.

சனி, பாம்பு முதலியோர் மேற்கூறிய இடத்திலிருக்கில் புத்திரர்களால் கர்மபாத்தியதை யுண்டாகும் அவ்வித கிரகங்களும் பகை நீச க்ஷேத்திரத்தை யடையில் எவ்விதமான புத்திரர்களும் விருத்திக்கு வாரார்களென்றறிய வேண்டியதென வறிக.

புத்திரபாவ கணிதமாவன.

புத்திர பலன்

குரு சந்திரன் எந்த கிரகத்தின் அம்சத்தில் இருக்கப்படுகிறதோ அந்த கிரகத்தின் பலாபலத்துக் கேற்ற கிரணத்துகையையும் குரு, சந்திரன், இவர்களுடன் கூடிய கிரக பலாபல வெண்களையும் தனித்தனி யெடுத்து குருவின் பெலனுக்குரிய எண் பேருக்கு கொடுத்து வந்த ஈவு சுபகிரங்களால் கண்ட சங்கை புருஷ புத்திர்களென்றும் சந்திரன், பலன் எண்பேருக்கு முன்போலவே கொடுத்து வந்த ஈவு பெண் சந்ததிகளென்றும் இதில் சனி பாம்பு முதலிய பாபிகளால் கொடுத்து வந்த ஈவு புத்திரச்சயமென்றும் கண்டறிய வேண்டுவதென வறிக.

இதில் குரு, சந்திரன், பலன்களை தனித்தனியே அவரவர் எண்களால் பெருக்கி ஒன்பதில் கழித்தசேஷமான திசாபுத்திகளில் புத்திரலாபகால மென்றறிய வேண்டியது,

குரு, சந்திரன், எவரேனும் குரு, குஜனம்சம் பெறில் புத்திரர் ராஜயோக வல்லபர்களாய் கிரகவாகனாதி பூமி க்ஷேத்திர விருத்திகளும் மிகுந்த கீர்த்தியுடனும் வாழ்வாள்.

மேற்கண்ட குரு சந்திரர்கள் சனி யங்கிச மடையில் புத்திர சோகத்துடனும் பலவாறான வருத்தமும் துக்கமும் அடைவளென வறிய வேண்டுமெனவாம்.

யோகாவ யோக பலன்

குரு, சந்திரன், சுக்கிரன், இம்மூவர்களும் விருஷபம், கடகம், தனுசு, மீனம், இந்த ராசிகளில் இருந்து அவ்விடங்கள் அவரவர்களுக்கு விரோத பாப க்ஷேத்திரமின்றி இருந்தும் பாபபகையோர் கூட சேரவாவது பார்க்கவாவது இல்லாதிருக்கில் இந்த ஸ்திரீயானவள் பர்த்தாவை யடைந்தது முதல் பர்த்தாவிற்கு விசேஷ ராஜயோகம் இல்லாதவைகள் கூட சேருதல் கிரகவாகன சம்பத்து கீர்த்தி முதலிய விர்த்தியும் இவ்விதமானப் பிரபல முண்டாகும்.

மேற்கூறிய மூவர்களில் இருவர்கள் மேற்சொல்லிய சுப பலத்தைப் பெற்று இருக்கில் மேற்கூறிய சுபபலனே நடக்கு மென்பதறிக.

மேற்கூறிய, குரு, சந்திரன் சுக்கிரன் இவர்களாவது அல்லது இரண்டு கிரகங்களாவது மகரம், கும்பம், மேஷம், விருச்சிகம் மிதுனம், இவைகளில் வேறு பாபர்களே கூடாதிருக்கில் பர்த்தாவின் பூர்வார்ச்சிதத்துடனும் பலவாறு நஷ்டமடைகுவள்.

அவ்விடங்கள் சுப மித்துரு ஸ்தானங்களாகில் ஜாதகி சிலநாள் கஷ்ட மடைந்து பின் சுக முண்டாகு மென்பதாம்.

பாபக்கிரக சம்பந்தமாகி அல்லது பாப க்ஷேத்திரமாகில் ஜாதகிக்கு விசேஷ தரித்திரத்தையும் மனோ கஷ்டத்தையும் இருந்த பொருள் அழிவதையும் பலவாராக விரோதங்களையும் அடைந்து வாழ்வள், சுபாசுபக்கிரகங்கள் சேரில் கஷ்ட நஷ்டமான பலன்கள் கலந்து நடக்கும்.

இந்த லக்கினங்களில் ஜெனனமான ஜாதகத்துக்கு குரு, பாம்பு, சூரியன், சந்திரன், இவர்கள் திசைகளிலும் சுக்கிரன், சனி, பாம்பு, சந்திரன், இவர்கள் புத்திகளிலும் ஜாதகியினுடைய குடும்பம் இவைகளுக்கு விசேஷ பிரபல்லிய யோகமும் அனேக சம்பத்து சேருதலும் இந்த திசாபுத்திகள் ராஜயோக காரர்களென்று அறியப்படும்.

செவ்வாய், பாம்பு, திசையில் சில பாகம் புதன், சனி, சுக்கிரன், இவர்கள் திசைகளில் பாம்பு, சூரியன், சனி, இவர்கள் புத்தி காலங்களில் பலவிதக் கஷ்ட நஷ்டங்களும் பர்த்துருயோக பங்காதி

புத்திர நாசமும் தேகாரிஷ்ட துன்பமும் இவ்விதமான கண்ட திசைகளெனக் காணவேண்டுவதென வறிக.

விருஷப துலா இலக்கினங்களிற் பிறந்த ஜாதகத்தின் பலாபலன்கள் கூறப்படும்.

விருஷப துலா இலக்கின பலன்.

ஆயுட் பாவம்.

களத்திர காரகனாகிய சுக்கிரனும ஆயுட்காரகனாகிய சனி இவ்விருவர்களும் பலன் கெடாமல் கேந்திர திரிகோண ராசியிலும் ஆட்சி யுச்சம் நட்பு இந்த யிடங்களிலிருந்தும் பாபிகளுடன் சேராமல் சரவிராசியிலேயே இருக்கில் வயசு வருஷம் 80-வரை யென்றும், இவர்களைப்போல சந்திரனும் பெலத்து இருக்கில் வயசு 100 வரை ஆயுளென்றும், சந்திரன், சுக்கிரன், சனி இம்மூவரில் சனி நீங்கிய மற்ற இருவர்களும் விருஷபம், கடகம், மீனம், கன்னி, இவைகளிலிருந்தும் குரு, முதலிய சுபக்கோள்கள் இலக்கினத்தில் இருந்தாவது பார்த்தாவது யிருக்கில் ஜாதகியானவள் அதிரூப முடையவளாய் மயில்போன்ற சாயலையும் குயில்போன்ற மொழியினையும் நயிச்சியமும் நாகரீக வஸ்திராபரண தனகன பொருளுடையவளாயும் வயசு 60-வரை ஆயுள் உடையவளாய் வாழ்வள்.

இவ்வித மிருந்தக் கிரகத்துடன் ஒரு பாபி கூடில் அல்பஸ்திதியுடையவளாய் அல்பவியாதியும் புத்திரசோகமும் கணவனுக்கு அரிஷ்டமுடையவ ளாவள்.

மேற்கண்ட ஸ்தானங்களில் பாபர்களே வாழில் ஜாதகிக்கு அற்பாயுள் உடனும் குடும்ப நஷ்டத்தையும் தரித்திரத்தையும் அனுபவிப்பாள்.

பாபருஞ் சுபருமாகக்கூடி பாபர்களுக்கு உத்தம க்ஷேத்திரமாகில் ஜாதகி பிரபல வாழ்வையும் தன முதலிய பொருள்களையும் அடைந்து வயசு 50-வரை சுகமாய் வாழ்வள், அவை பாவக்ஷேத்திரமாகில் பாலியத்திலேயே தேகவியோகமும் பலவிதமான கஷ்ட நஷ்டத் துன்பமும் அடைவள்.

சந்திரன், சுக்கிரன், சனி, மூவராவது மூவரில் இருவராவது மேஷம், விருச்சிகம், சிம்பம், மிதுனம், இந்த ராசிகளில் பாப பல

னுடன் மற்றொருபாபியைக் கூடியிருக்கில் ஜாதகிக்கு அற்பாயுளும் கணவன் ரோகமும் அடைவள்.

மேற்கூறியவர்கள் பாபிகளுடன் சேராமல் தனித்திருக்கில் யௌவனமான வயசு வருஷம் 32-வரை ஆயுள் உள்ளவளாய் கணவனை பரதேசத்தில் இழந்து தவிப்பள், இவர்களை குரு, முதலிய சுபக்கோள்கள் கூடினும் நோக்கினும் சிலகாலம் தேக சவுக்கியமும் பர்த்துரு சவுக்கியமும் இன்றியும் பலவகை வருத்தங்களையும் வியாதிகளையும் அனுபவித்து பின் பலவிதமான சவுக்யத்தையும் க்ஷேமத்தையும் அடைந்து வயசு வரு 60-வரை ஆயுளுடையவளாய் இருப்பாள்.

மேற்கூறிய கிரகங்களாகிய சந்திரன், சுக்கிரன், சனி, இவர்கள் துலாம், மகரம், கும்பம், சிம்பம், கடகம், இந்த ராசிகளிற் சுபருடன் கூடியிருக்கில் ஜாதகி விசேஷ ஞானமும் அறிவுடையவளாயும் புராதனதனம் படைக்கும் செல்வியாய் வயசு வரு 72-வரை ஆயுள் உடையவளாவள்.

இராகு, கேது, செவ்வாய், முதலிய பாபிகளுடன் சேரில் வயசு வரு 12-க்குள்ளும் பலவித சுகங்களை அனுபவித்து இழப்பள், சுபபலத்துடன் சுபர்களேகூடில் ஜாதகி வயசு 90-உடைபவளாய் பிரபல கீர்த்தியுடனும் சிலகாலம் செங்கோல்களைச் செலுத்தி வாழ்வாள்.

மேற்கூறிய ராசியாகிய துலாம், மகரம், கும்பம், சிம்பம், கடகம், இந்த ராசிகளில் சுபர்களே பலமற்று பாபிகளே வாழில் ஜாதகி மங்கிலிய தோஷத்துடனும் தேவதை ரோக பாதை முதலிய புத்திரா ரிஷ்டத்தையும் பலவித துக்கங்களையும் பர்த்துரு விரோதம் தேசபிரிஷ்டம் முதலிய கவலைகளையும் அடைந்து வாழ்வளென வறிக.

கணவன் ஆயுளும் யோகமும் அறியும் வகை.

கணவன் ஆயுள் யோக பலன்

ஆயுட்காரகனாகிய சனியும், களத்திரக்காரகனாகியச் சுக்கிரனும், ஆட்சியுச்சமாகிய ஸ்தானங்களிற் பலன் பெற்று யிருக்க குரு, முதலியச் சுபக்கோள்கள் அவருடன் கூடவாவது பார்க்கவாவது இருக்கில் விருத்தப் பருவமாகிய காலம் வரை ஜாதகியினுடையக் கணவன் ஆயுள் விருத்தியும் வாகனாதி பூமி முதலியச் செல்வமும்

பலவகையான பொருள்களையும் புதைத்து அனேக தனத்தையு முடைத்தாய் அடிமையாளுடன் வாழ்வள்.

இவ்விதகிரகங்களே குருவங்கிசம் பெறில் அரசனுக்குச் சமான மான ராஜயோகத்துடன் பூமிகளை யாண்டு வருவள், புதன் அங்கிச மாகில் கணவன் வித்தையில் வல்லவனாய் உலகமெய்க்க கீர்த்தி களைப் படைத்து அனேக தனத்தை ஆர்ச்சித்து ஆயுள் 50-வரை கணவனைப் படைப்பாள், சுக்கிராங்கிசம் பெறில் கணவன் பரஸ்திரீ லோல னென்றும் கந்த புஷ்பாதி மனோ சந்தோஷனாகவும் மத்தியா யுள் வரை ஆயுசுள்ளவனாகவும் கிரகம், வாகனம், பூமி, கன்று, காலி, முதலிய பலவித சம்பத்துடன் ஜாதகியினுடைய கணவன் வாழ்குவள்.

சனி, அங்கிசமாகில் ஜாதகியினுடைய பர்த்தா அடிமை சீவன முடையவனாகி உரோகாதி பாதையும் தரித்திரத்தையும் அரசர் மூல மான பகை சத்துருத்துவமும் முதலிய சோரத்துவ குணமுள்ள வனாகியும் யௌவனப் பருவத்திலேயே அவ்வித பர்த்தாவிற்கு ஆயுட்டோசங்களையும் அனுபவிப்பளென்றும்.

செவ்வாய், அங்கிசமாகில் ஜாதகிக்கு பாலியத்திலேயே கணவ னுக்கு கொலைபோன்ற மரணம் பிறதேசாடனம் பலவித வார்த்தை யும் உடையவளாவள்.

மேற்கூறிய சந்திரன், சுக்கிரன், சனி, இவர்கள் இலக்கினத் திற்கு 3-6-8-12 முதலிய ஸ்தானங்களில் பாபரோடுக் கூடினும் அவ்விதப் பாபர்களைச் சேர்ந்தாலும் ஜாதகியுடைய பர்த்தா விவாக காலத்திலேயே மரணம் சுபமனுபவிக்க மாட்டாளென்றும் பலவித துக்க சோகாதி வருத்தமும் பர்த்தர் வியாதி அரிஷ்டமும் பரதேச கேதனாதி வருந்தி யிளைப்பள்.

விருஷபம், தனுசு, துலாம் இவைகளிலும் விருச்சிகம், கன்னி மிதுனம், மேஷம், இவைகளிலும் அங்காரகன், பாம்பு, சனி, இம் மூவரும் இருக்கில் ஜாதகி பாலிய விதவையாவள், இருவர் இருக்கில் விருத்தப் பருவத்தில் விதவையாவள்.

ஜென்ம லக்கினத்திலாவது சந்திரன், சுக்கிரனோடாவது கொ டிய பாவிகளாகிய சூரியன், சனி, குஜன் இவர்கள் கூடி 6-8-12-2-ல் இருக்கில் ஸ்திரீயே பலவித வியாதியுடையவ்ளாய் ரோகியாகி யும் பிரீதி பந்தகமுடையவளாய் புத்திர தோஷங்களை யடைந்து சுகமின்றி வாழ்வள்.

குரு, முதலிய சுபக்கோட்கள் பார்க்க அல்லது கூடி நிற்கில் சிலகாலம் வருந்திப் பின் போக போக்கிய சுக சவுக்கியமும் மிகுந்த கீர்த்தியுடனும் அனேக தனங்களைப் படைத்தும் மேன்மையாய் வாழ்வள்.

இலக்கினத்திற்கு 2-12-8-மிராசிகள் சுத்தமாகி அல்லது சுபர் இருக்கினும் நோக்கினும் ஜாதகி அந்தியக் காலம் வரை சுமங்கிலியாகி அரசபோக பர்த்தாவை யடைந்து பர்த்தாவின் பூர்வார்ச்சித தனமின்றி நூதன தனத்தை யடைந்து கிரகவாகனம், பூமி, கன்று, காலி, பலவிதமான வெகுமானமும் மாடமாளிகை தனதானிய முதலிய செல்வங்களும் பர்த்தாவுக்கு உண்டாகும் இம்மனைவி சேர்ந்த நாள் முதலாக விருத்திக்கும்.

சுக்கிரன் தன் சுயாம்சமென்னும் சுக்கிராம்சம் பெறில் ஜாதகி லீலாவினோத காமாதுரியாய் ரூபமுடையவளாய் வெண்மை வஸ்துக்களிலும் வெள்ளை வஸ்திராபரணங்களிலும் பிரியமுடையவளாய் தியாகியாய் கல்விகளிலும், சங்கீதாதி கேளிவிலாச சம்பூரணியாய் இசையுடையவளாய் வாழ்வள், ஆனால் புத்திர தோஷமுண்டு.

புதனங்கிசமாகில் கல்வித்திறமை வாக்கு சாதுர்ய முடையவளாய் தாதியர்போல செல்வத்துடன் வாழ்வள்.

குரு வங்கிசமாகில் ராஜயோக முடையவளாய் சற்குணியாய் அனேக அடிமைகளை வைத்து ஆதரவுசெய்தும் பல தந்திரவித்தைகளை உடையவளாய் அரசர்களையும் வென்று கீர்த்திப் பெறுவள், புத்திரலாபாதி குடும்ப விருத்தியு முண்டாகும்.

அங்காரகன், அங்கிசம் பெறில் ஜாதகி அகிர்த்திய முடையவளாய் யுத்தங்களுக்கும் சண்டைகளுக்கும் எதிர் நிற்பவளாய் பர்த்தாவை யிழந்து தனிப்பவளாய் துர்க்குணியாய் வாழ்ந்து வருவள்.

சனி அங்கிசம் பெறில் விவாகம் இல்லாதவளாய் பின் காலதாமத பர்த்தாவை யடைந்து பலவிதிய வருத்தங்களை அனுபவித்து இல்லற வாழ்க்கையை விடுவள், தரித்திரியாகவும் இருப்பள்.

புதன், சுக்கிரன், கூடினாலும் கேந்திர திரிகோணத்திலும் சுபக்ஷேத்திரமாகி குரு, சந்திரன், வீக்ஷண்ணியம் பெற விருக்கில் அனேக இடங்களில் கிரகவாகன பூமி க்ஷேத்திரமாகிய லாபங்கள் இவளுக்குச் சேரும்.

மேற்கூறியவர்களுடன் சனி, அல்லது பாம்புகள் சேரில் புருடனைப்போல யாவரையும் ஆள்வள், மானமில்லாள், அரசரைக் கூடி

விவகரிப்பாள், பாபிகள் இன்றி சுபர்களைக் கூடி வாழில் விசேஷ கல்வி விருத்தியும் அனேகர்களுக்கு மேலானவளாய் பிரபுத்துவம் செய்து உலகெலாம் புகழ பர்த்தாவின்றி யோகமடைவள்.

மேற்சொல்லிய கிரகமாகிய புதன், சுக்கிரன், இவர்கள் இலக்கினத்திற்கு 3-6-8-12-2-11-இவ்வீடுகளில் இருந்து பாபர்களைக் கூடில் ஜாதிக்குச் சொந்தமான பொருள்களை பிறர்களுக்கு அளிப்பள்.

மேற்சொல்லிய ஸ்தானங்களில் சுபக்கிரகங்கள் வாழில் அச்சாதகி நல்ல தர்மங்களிலும் கீர்த்திப்பெற்ற விஷயங்களிலும் இவள் சொத்து சேரும் இந்த கிரகங்களுக்கு உபயபாரிசத்திலும் பாபிகளிருக்கில் தனக்குப் பலவாறுய்க்கிடைத்த பொருள்களை பலவாறுன விவாதத்தினல் அரசர்களுக்கும் சத்துருகளுக்கும் அழித்து தன்னல் கொடுத்துப் பொசித்து வந்தவர்களிடம் தானே வருந்தி இரஞ்சி இரந்து திரிவள்.

குரு, சுக்கிரன், திரிகோண ராசிகளிலும் சுபபலத்துடன் சந்திரகேந்திரமாகி சூரியன், ஆட்சியுச்சம், நட்பு, இந்த யிடங்களில் பெலத்து 4-11-10 களில் பாம்பு, சனி, முதலிய பாபர்களின்றி 7-ஆமிடமாக அல்லது சுபர்களிருந்தாலும் அவ்வித ஸ்திரீயானவள் ஏறினவாகனம் இறங்காமல் ஆசனத்தின் பேரிலும் உப்பரிகையின் பேரிலும் சர்வாலங்கார பூசிதங்களுடன் யாவரும் அரிய வரிதாய் அரசைப்போல உலகத்தில் வாழ்வாள்.

பாபர்கூடில் முன் பூர்வீகமாயிருந்த பல செல்வங்களும் அழியும் சுபர்களும் பாபிகளாகி பாபர் வீட்டில் உரையில் சகலவித கஷ்டத்தையும் தரித்திரத்தையும் துக்கத்தையும் துன்பத்தையும் அடைவள் யென வறிக.

புத்திரயோகர்வ யோகப் பலன்களாவன

புத்திரக்காரகனுகிய குருவும் ஆயுள் காரகனுகிய, சனி, இவ்விருவரும் தந்தமக்குரிய சுயக்ஷேத்திரங்களில் பலத்துடன் இருக்கில் புத்திரலாப அபிவிருத்தியும் புத்திரரால் யோகத்தையும் தனலாபாதி விர்த்தியையும் அடைந்து மிகவும் மேன்மையுடன் வாழ்குவள்.

மேற்சொல்லிய குரு, சனி, இவர்கள் விரோதபாப க்ஷேத்திரத்தில் இருந்து சனி, பாம்பு, முதலிய பாபர்களைக் கூடியும் இலக்கினத்திற்கு 6-5-2-இந்த யிடங்களில் சனி, பாம்பு, குஜன் இவர்க

ளிருக்கினும், அவ்விடத்ததிபர்கள் பகை நீசம்பெற்ற விடங்களிலும் அல்லது சனி, புதன், சொக்ஷேத்திர வீட்டுகளில் இருக்கில் ஜாத கிக்குப் புத்திரரே கிடையாது அந்த கிரகங்களுடன் சனி, அல்லது புதன், கூடிற் சுவீகாரம் முதலிய அபிமான புத்திரர் தௌகித்திர புத்திரர் இவர்களால் கர்மபாத்தியம் அடைவள், இவ்வித மிகுந்த கிரகத்துடன் 10-ஆமிடத்தில் பாபியாவது அவ்வீட்டதிபதி பெல மற்றுவது இருக்கில் கருமத்திற்கு புத்திரரின்றி வருந்துவாள்.

மேற்கூறிய விதிப்படிக்கு யிருந்த கிரகங்கள் குரு, முதலிய சுபர் வீக்ஷண்ணியம் அல்லது சம்பந்தம் பெறில் அல்பமான யேக புத்திரவிருத்தியுடன் மனே திருப்தியாய் வாழ்வள்.

சென்மலக்கினம் அல்லது ருதுவாகிய லக்கினத்திற்கு 2-5-7-9-இந்த இடங்களில் குரு, சந்திரன், அல்லது சுக்கிரன் சுப பலத்துடன் இருக்கில் ஜாதகிக்கு பெண்ணே அதிக விருத்தியுண்டு ஆண் சந்ததி அல்பமாக பின் வயதில் உண்டாகும் அவ்விதப் பெண் பிரஜை உற்பத்தியாகும் காலம் முதற்கொண்டே குடும்பத்திற்கு விசேஷமான யோகங்களும் கிரகவாகனதி க்ஷேத்திர லாபங்களும் ராஜ சன்மானமும் இவ்விதமான உத்தமபலன் நடக்கும் அவ்விடத் ததிபர்கள் சனி, புதன், க்ஷேத்திரத்தில் நின்றுலும் பாம்பு, பகை வர்கள் முதலான கிரகங்களுடன் கூடினுலும் 2-5-7-9 இவைக ளில் சனி, பாம்பு, புதன், முதலிய இரண்டு பாபிகள் சேர்ந்திருக் கில் புத்திர தோஷமும் முன் பிறந்தவை இறக்கு மென்றும் பின் பிரஜைகள் விர்த்திக்கு வருமென்றும் அறியவேண்டியது.

இலக்கினத்திற்கு 10-ஆம் வீட்டிலாவது 7-2-9-ஆம் வீட்டி லாவது சுபர்களே யின்றி சுத்தமாக யிருக்கினும் அல்லது பாபர் பார்க்கினும் புத்திரலாப விருத்தியின்றியும் பல கவலே யடைந்து புத்திர விருத்தியின்றி பலவாருன கஷ்ட நஷ்ட மடைவள், இதில் புதன், சந்திரன், முதலிய மித்துரு சுபர் கூடில் காலதாமதத்தின் மேல் புத்திர லாபத்தையும் அவ்வித புத்திரரால் பின் சவுக்கியத் தையும் அடைய கடவுள் அவ்விராசிகள் சுத்தமாகி அவ்விடத்ததி பதிகள் கேந்திரகோண சுபக்ஷேத்திரத்தில் இருந்து சுபசம்பந்த திருஷ்டியைப் பெறில் விசேஷ புத்திரனல் யோகமும் அதிக புத்திர லாபமும் கிரகவாகன சம்பத்துகளும் கீர்த்திபெற்ற ராஜயோக முள்ள புத்திரர்களால் மிகவும் யோகத்தையும் சவுக்கியத்தையும் மாடமாளிகை கூடகோபுரம் என்னும் கட்டடங்களைப் படைத்தும் அனேக ஆள் அடிமை முதலியச் செல்வங்களுடன் வாழப்படுவள்.

குரு, சனியுடனும் இலக்கினத்துக்கு 2-9-7-இவ்விடங்களினும் அல்லது இந்த ஸ்தானாதிபதிகளும் உரிய கிரகபலாபல எண்களை எடுத்து அவரவர்களின் பூராவான எண்கள் பேருக்கு கொடுத்து வந்த ஈவில் சுபபுருஷ கிரக ஈவு எத்தனையோ அத்தனை புருஷ சந்ததி தீர்க்கமென்றும் பெண்சுபக்கிரக ஈவு எத்தனையோ அத்தனை பெண் சந்ததி தீர்க்க மென்றும் காண வேண்டும்.

மேற்கண்ட சுபக்கிரக பெண்களை அவ்விராசி பல எண்ணினால் பெருக்கி 6-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை 7-ல் பெருக்கி 9-ல் கழித்த சேஷமான திசா புத்திகளில் புத்திரலாப விருத்தியும் பிரபல யோகத்தையும் கிரகவாகன சம்பத்துகளையும் விசேஷ ராஜ யோக பலன்கள் நடந்து வரப்படு மென்றும் இவ்விதமே ஒவ்வொரு திசா புத்திகளுக்கும் யோக பாவங்களைக் கண்டு நிதானித்து அறிதல் வேண்டும்.

இலக்கினங்கள் புதன், அங்கிசம் பெறில் விசேஷ கல்வித்திறமையும் வஸ்திராபரண அலங்கார வதியாயும் அதிக சுகத்துடனும் கிரகவாகன பூமி க்ஷேத்திர முடையவளாய் வாழ்வள், ஜாதகி சம உயரமும் நீண்ட கழுத்தும் வடிவுடையவளாய் மாநிறமுடையவளாய் வாழ்வள், அப்படிக்கு வாழ்வதிலும் புத்திர தோஷ மடைந்து தன விருத்தி யுண்டாகி ஞானவதியாவள், கடைக்கு புருடன் இல்லாள்.

சுக்கிராங்கிசமாகில் விசேஷ பூமி ராஜ்ஜியாதிபத்திபமும் அதிரூபவதியாயும் அனேக வஸ்திராபரண முடையவளாய் புத்திர விருத்திகளுடன் செல்வத்துடன் வாழ்வள், சிற்றின்ப விஷயத்திலேயே அதிக விருப்பமுடைய ளாவள்.

குரு வங்கிசமாகில் ஜாதகி பர்த்தாவுக்கு அதிகார உத்தியோக ஜீவனமும் சவுந்தரியவதியாய் சுகுணியாய் நல்லொழுக்க ஆசாரமும் ஜீவியாகி புத்திரவிருத்திகளுடன் யாவரும்புகழ வாழ்வார்கள்.

சனி யங்கிசமாகில் ஜாதகி மலடியாய் அதிக காமாதுரியாய் பலரையுஞ் சேருவாள்.

குஜ னங்கிசமாகில் ஜாதகி பாலிய விதவையாய் குடும்பக்ஷய மடைந்து பலர்களுக்கும் விரோத கடூரியமாய் ஸீமந்த புத்திரியாய் தேசமிழந்து வாழ்வள்.

சுக்கிரன், சந்திரன், குரு, சனி, இவர்கள் திசைகளில் சந்திரன், பாம்பு, புதன், சுக்கிரன், இந்த புத்திகளில் விவாக சோபனாதி

பர்த்துரு சுகமும் குடும்ப புத்திரலாபாதி விர்த்திகளும் பர்த்துரு ஜாதகம் இவர்களுக்கு விசேஷ ராஜயோக பிரபலமும் கிரகம், வாகனம், பூமி, கன்று, காலி அபிவிருத்திகளும் விசேஷமுமாய் தன லாபயோகமும் வஸ்திராபரண சேர்க்கையும் இந்த விதமான உத்தம ராஜயோக பலன்கள் நடக்கும் திசாபுத்திகளெனக் காண்கவும்.

செவ்வாய், சூரியன், பாம்பு, இவர்கள் திசைகளில் சனி, பாம்பு, செவ்வாய், சூரியன், இவர்கள் புத்தி காலங்களில் ஜாதகிக்கு மரணசமானதே காரிஷ்டரோக துன்யமும் கணவன் முதலிய மகவுகள் பரதேசமிழிவதும் பலவாருன கஷ்டநஷ்ட துன்பமும் பொருள் சேதமும் குடும்ப சத்துரு ரோக உபாதிகளால் துன்பமும் கெற்பங்களினுல் தேககண்டமும் பலவகை துக்க சோதிகளான திசாபுத்திகளெனக் காணவேண்டும்.

புதன் திசை, சுக்கிரன், சந்திரன், குரு, சனி, இந்த புத்தி காலம் விசேஷமான வித்தை முதலிப ஞாஞகி அபிவிருத்திகளும் அடியாள் முதலிய நகை நாணய பிரபல லாபங்களும் பிரபல சுக சவுக்கியமும் இவ்விதமான உத்தம பலன்கள் நடக்குமென் றறிய வேண்டியது.

கடகலக்கினத்திற் பிறந்தவர்களின் பலாபலன்கள் கூறப்படும்.

ஆயுட் பாவம்.

மாதுர்க்காரகனுகிய சுக்கிரனும் ஆயுட்காரகனுகிய சனி, இவர் இருவர்களும் ஆட்சியுச்சம் நட்பு இந்த யிடங்களிலும் கேந்திர கோண இராசியாகிய இருவரும் சரவிராசியிலிருக்கில் ஜாதகிக்கு வயசு வூ 72-யென்றும் ஸ்திரம் ஸ்திரமாகில் 13-க்குள்ளென்றும் உபயம் உபயமாகில் 54-க்குள்ளென்றும் சாஸ்திரமாகில் வூ 12-டென்னும் சரம் உபயமாகில் 16-வரை யென்றும் ஸ்திரம் உபயமாகில் வூ 42-க்குள்ளென்றும் அறியப்படும்.

கேந்திரகோண சுபக்ஷேத்திரம் நீங்கிய இடத்திலிருக்கில் அவ்விடங்கள் சரம், சரமாகில் வூ 16-க்குள்ளென்றும் சரம் உபயமாகில் வூ 8-க்குள்ளென்றும், சரம் ஸ்திரமாகில் வூ 4-க்குள்ளென்றும், ஸ்திரம் ஸ்திரமாகில் வூ 27-க்குள்ளென்றும், ஸ்திரமும் உபயமாகில் வூ 39-க்குள்ளென்றும், உபயம் உபயமாகில்,

வரை 50-க்குள்ளென்றும், உபயம் சரமாகில் வரை 69-வரை யென்றும் உபயம் ஸ்திரமாகில் வரை 84-வரை யென்றும் அறிய வேண்டும்.

இன்னமும் குரு, சுக்கிரர்கள் பலத்துடன் கடகம், மீனம் விருஷபம், இந்த இராசிகளிலிருந்து சந்திரனும் சுக்கிரன், அல்லது குரு, 7-க்கு 7-ஆக இருக்கில் பூரணாயுளென்றுச் சொல்லப்படும்.

குருவும், குஜனும், சேர்ந்து இலக்கினத்திலாவது இலக்கின திரிகோண சந்திர கேந்திரத்திலிருக்கில் ஆயுள் விருத்தியேயாம்.

சந்திரன், சனி, குரு, இம்மூவர்களில் இருவராவது 6-8-12-லும் பகை நீசம் பெற்று விரோதிகளான பாபிகளைக்கூடி இலக்கினத்திற்கு 2-12-ல் சனி, பாம்பு, செவ்வாய், முதலிய பாபிகள் இருக்கில் அற்பாயுளும் தரித்திரயோகாதி பீடைகளை யடைந்து வாழ்வள்.

சந்திரன், சுக்கிரன், சூரியன், புதன் இவர்கள் கேந்திரகோணத்திலும் தங்கட்குரிய சுபக்ஷேத்திரமாக யேறி நிற்க ஜாதகிக்கு ஆயுள் விருத்தியுடனும் பலவிதமான வஸ்திராபரண பூஷணவிருத்தியும் அனேக கிரகவாகனக் கட்டிடங்களும் தன்னால் பெரும் செல்வமும் கீர்த்தியும் பர்த்தாவுக்கு அடைவள், என்றும் மிக மேலான குணமும் வித்தையும் புத்திவிசால முடையவளாயும் வாகனாதி கந்த புஷ்பங்களில் அதிக வாஞ்சையும் இவ்விதமான சுகபோகத்தை அடைந்து வருவள்.

கடக லக்கினத்திலும் புதாங்கிசம் பெறில் ஜாதகி சகலவிதக் கணக்கிலும் பலவித தனலாப முயற்சியிலும் மனம் பிரவேசமுடையவளாயும் பர்த்தாவைச் சார்ந்த காலமுதல் அவ்வித புருஷனுக்கு வியாபாராதி முதலிய பலதன பெரும் பொருள் செல்வங்களும் கிரகவாகனக் கட்டப் பூமிகளும் இவ்விதமான பல லாபங்களுண்டாவதும் குடும்ப விருத்திகளும் மிகவும் மேலான சுகபதவியுடன் வாழ்ந்து வரப்படு மென்றும் சொல்லப்படும்.

சுக்கிரனுடைய அங்கிசமாகில் ஜாதகி ரூபவதியாகி பலர் இச்சைப் பொருந்தி அதிகக் காமியாய் சகல சம்பந்தமான தேகரோக உபாதியுடையவளாய் செல்வத்திலும் யோகத்திலும் மேன்மையுடன் வாழ்ந்து வருவள்,

சனி அங்கிசமாகில் ஜாதகி மறுபுருடனை மணப்பள், யாவருக்கும் விரோத முடையவளாய் வாழ்குவள்.

செவ்வாய், அங்கிசமாகில் ஜாதகி அல்ப வியாதி யுடையளாய் பர்த்துருவுக்கு விரோத முடையவளாய் கலகத்துடன் பலத்தை விவாகத்தை பொருந்தி வாழ்வள்.

குருவின் அங்கிசமாகில் ஜாதகியின் பர்த்துர் வகை முன் தன நஷ்டாதி துக்கத்துள் ஆழ்ந்தவராய் பின் ராஜாங்க முதலிய லாபத்தைப் பொருந்தி மிகவும் மேலான வஸ்திராபரண பூஷணலாப விருத்தியுடன் மேன்மையாய் அனேகங் கிராம பூமிகளேயும் பல செல்வ யோகத்தையும் அடைந்து மங்கிலிய விருத்தியுடனும் குடும்ப புத்திர விருத்தியுடனும் வாழ்ந்து வருவளென்றுங் காண வேண்டும் என வறிக.

கணவனுடைய ஆயுளும்.

யோகாவயோகத்தின் பலாபலன்.

ஆயுள்காரகனுகிய சனியும் புத்திரக்காரகனுகிய குரு, இவ்விருவர்களும் ஆட்சி யுச்சஸ்தானத்திலும் கேந்திர கோணராசியிலும் பலத்து செவ்வாய், பாம்பு, முதலிய பாபிகளேச் சேராமல் சுப பலத்துடன் மகாம், மீனம், இந்த இராசிகளில் பாபிகளின்றி இருக்கில் விருத்தப்பருவ வயசுவரை மங்கிலியவதியாய் பலதனங்களே யடைந்து சகலவித ஐசுவரிய விருத்தியுடன் மேலான சுகத்தைப் பெறுவள்.

இவர்களுடன் விரோத சுபர்கள் அல்லது பாபிகள் கூடினுலும் மத்திய வயசுவரை மங்கிலிய விருத்தியுடனும் மத்திம தனத்தையும் படைத்து சிலநாள் தரித்திரத்தையும் சிலநாள் யோகத்தையும் பெறுவள்.

மேற்கூறிய குரு, சனி, இருவரும் 6-8-12-களிலும் பகை நீச இடங்களிலும் இருந்து 7-8-9-இந்த இராசிகளில் பாம்பு, குஜன், சூரியன், முதலிய இரண்டு பாபிகள் சேர்ந்திருக்கில் பாலியத்திலேயே கணவனே இழப்பாள்.

அவ்விதம் இருக்கும் பாபிகள் குரு, முதலிய சுப வீக்ஷண்ணியம் பெறில் வூல 30-வரை கணவன் ஆயுள் விருத்தியுடன் சுகத்தைப் பெற்று வாழ்வள்.

சிம்பலத்திலாவது கும்பத்திலாவது செவ்வாய், பாம்பு, கூடியிருக்கில் பாலியத்திலேயே மங்கிலியம் இழப்பள்.

மேற்கூறிய குரு, சனி, இவர்கள், இலக்கினத்திற்கு 2-11-12- இவ்விராசிகளில் இருந்து சுப பலன் பெற்றிருக்கினும் பாப பலன் பெற்றிருக்கினும் ஜாதகி பலவித துக்கசோகத்தை அடைந்து வருத்த முறுவள்,

இலக்னகினத்திலாவது 7-ஆமிடத்திலாவது மேற்சொல்லிய குரு, சனி யிருக்கில் பர்த்தாவிற்கு ராஜாங்க மூலமான ஜீவன விருத்தியும் தனதான்னிய பிரபல விருத்தியும் விசேஷமான யோகத்துடன் செல்வமாய் வாழ்ந்து வருவள், அது வல்லாமலும் கணவனுக்கு ஆயுள் விருத்தியும் தேகசுகமும் உடையவளாய் வாழ்வார் களென வறிக.

புத்திரயோகாவ யோக பலன்.

புத்திரக்காரகனுகிய குருவும் சகோதரர் காரகனுகிய செவ்வாயும் ஆயுள்காரகனுகிய சனி, இம்மூவர்களும் தங்கள் தங்களுக்கேற்ற ஆட்சி உச்சம் நட்பு சுபஸ்தான மிவைகளிலிருக்க குரு, கடகம், சிம்பம், கன்னி, தனுசு, மீனம், விருஷபம், இந்த இராசிகளிலிருக்க சனி, கடகம், துலாம், தனுசு, மகரம், மீனம், இந்த இராசிகளிலிருக்க, செவ்வாய், சிம்பம், விருச்சிகம், மகரம், மேஷம், விருஷபம், இந்த விராசிகளிலிருக்க உள்ள ஜாதகத்திற்கு 7-9-வது இடங்களில் பாம்பு, புதன், இரண்டு பாபிகள் சேராதிருக்கில் வெகு புத்திர லாபமும் குடும்ப விருத்தியும் பிரபல சுகசவுக்கியமும் விசேஷ யோகத்துடன் அனேக பூமி, தனம், கிரகம், வாகனம் முதலான யோகத்துடன் வாழ்வள், புத்திராாலும் செல்வமும் யோகமு முண்டாம்.

இம்மூவரில் இருவராவது மேற்கூறிய விராசிகளில் பலத்திருக்கில் ஜாதகி விசேஷ வெகு புத்திரர்களைப் பெற்று வாழ்வாள்.

இலக்கினத்திற்கு 7-ஆமிடம் 9-ஆமிடம் இவைகளில் பாபிகளிருக்க குரு, குஜன், சனி, இவர்கள் பகை நீச க்ஷேத்திரத்திலாவது சனி, புதன், இவர்கள் வீட்டிலாவது இருக்கினும் 2-12-ல் பாபிகளிருந்தாலும் ஜாதகி புத்திரரின்றி பல வருத்தங்களை அடைந்து பரபுத்திரரை தான் அடைந்தும் மனக்கவலையாகி வருந்துவள்.

இலக்கினத்திற்கு 5-9-7-இடங்களிலாவது 7-5-3-க்குடையவர்களுடனே யாவது சனி, புதன், பாம்புகளிலெவரேனும் இருக்கினும் அல்லது நோக்கினும் ஜாதகிக்கு புத்திரர் கிடையாமல் பல வருத்த மடைவள்.

இவர்களுடன் குரு, சூரியன், இருந்தாலும் பார்த்தாலும் ஜாதகிக்கு பலதேச சஞ்சாராதி முயற்சியின் பேரிலும் காலதாமதத்தின் பேரிலும் புத்திரலாப முண்டாகும் அதில் முன் ஸ்திரீயும் பின் புத்திரன் உண்டாகியும் யேக புத்திர விஷயமே நிலைக்கும்.

மேற்கூறிய குரு, சனி, குஜன், இவர்களில் ஒருவர் மேற்கூறிய ஸ்தானங்களில் இருந்து மற்றவர்கள் பலன் கெடில் புத்திரர் சில காலமிருந்து மரணத்தை யடைவர் புத்திரசோக முண்டாகும்.

கன்னி, மீனம், விருச்சிகம், மகரம், இவ்விராசிகளில் இருக்கும் குஜனுடன் அல்லது குரு, சனியுடன் சுக்கிரனுவது அல்லது பாம் பாவது கிருஷ்ணபட்ச சந்திரனுவது இருந்தாலும் அல்லது பார்த்தாலும் ஜாதகத்துக்குப் பெண் சந்ததியே விருத்தி யடைவள்.

அதில் குரு, சூரியன், இவ்வித இரண்டு புருஷ கிரகங்கள் சேரில் பெண்ணும் ஆணுமுள்ள புத்திரர்களை யடைந்து சுகமடைவள்.

அவ்வித ராசிகளிலிருக்கும் கிரகங்களுடன் பகையுள்ள கிரகம் சேரில் புத்திரர்களால் விரோதமும் தனக்கு ஜெனித்தும் பிறருக்கு மகவாய் புத்திரனுல் சுகமின்றியிருப்பள்.

இலக்கினத்திற்கு 12-2-5-8-9-இவ்விடங்களில் சூரியன் செவ்வாய் கூடினுலும் அல்லது பாம்புடன் செவ்வாய் சேரினும் சுபரிருந்தாலு மவர்களுக்கு விரோதியானேர் கூட அல்லது பார்க்கவிருக்கினும் குரு, சனி, இவர்கள் தனித்தனியாக பகை நீசவிடம் 8-6-இவ்வித ஸ்தானங்களில் இருந்தாலும் ஜாதகிக்கு புத்திரர் பிறக்கப் பிறக்க மண்ணிற் கிரையாகி வருந்தி யிளைப்பள்.

அவ்வித கோட்களை குரு முதலிய சுபகோள் பார்த்தால் ஜாதகிக்கு அனேகம் புத்திரர்கள் பிறந்து யிறந்த பின்பு புத்திர தீர்க்க முண்டாம்.

குரு, சனி, மகரம், மீனம், இவைகளுடன் கூடி கிரக பலாபல எண்களை யெடுத்து அவரவர்களின் பூராயெண்பேருக்கு முன் கூறியபடி கண்டறிந்த எண்கள் எத்தனையோ அத்தனை புத்திரிகளாகவும் இந்த ஒவ்வொரு சம்பந்தமான கிரக பலா பலனுக்கு இசைந்து வந்த எண்களை இராசி பலனுடைய எண்ணில் பெருக்கி 8-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை முன்போலவே 7-ல் பெருக்கி 9-ல் கழித்த சேஷமான திசாபுத்திகளில் அந்த புத்திர பாவங்களுக்கு சுபமித்துருவான கிரகமாகில் அத்திசாபுத்திக் காலங்களில் விவாகாதி

புத்திரலாபமும் வஸ்திராபரண பூஷணாதி செலவு விருத்தியும் மிக வும் மேன்மையான யோகங்களைக் கொடுக்கப்படும்.

மேற்கண்ட சேஷத்திற்கு வந்த திசா புத்தியான கிரகங்கள் பாபிகளாய் இலக்கினத்திற்கு 2-12-8-6-இந்த ஸ்தானத்திற்குடை யவர்களாவது அல்ல தவ்விடங்களி லிருக்கும் கிரகங்களாவது வரில் அவ்வித திசாபுத்தி காலங்களில் பலவித புத்திர நஷ்டமும் பாத்துரு தேகாரிஷ்ட ரோககண்டமும் பர்த்துருவுக்கு ராஜதெண் டனை முதலான பல துன்பங்களும் பொருள் சேதமும் இராஜ ஜீவ னங்கள் தவறுதலு மிவ்விதமான பலவித கஷ்ட பலன்களை அனு விக்கப்படும்.

செவ்வாய், சந்திரன், குரு, சுக்கிரன் இவர்கள் திசைகளில் சனி, பாம்பு, சுக்கிரன், இந்த புக்திகளில் விவாக சுப சோபன சந்தோஷமும் புத்திரலாபங்களிலும் கணவன் சாதகமிவர்களுக்கு ராஜயோக ஜீவனாதி விருத்திகளும் மிகவும் பிரபலயோகமும் தனம், பூமி, கிரகம், வாகனம், சம்பத்து நூதனமாக விருத்தியாகுதலும் விசேஷ யோகதிசையாக நடந்து வரும்.

மற்ற சூரியன், புதன், கேது, இந்த திசைகளிலும் சனி, சுக் கிரன், புதன், சந்திரன், இந்த புத்தி காலங்களிலும் ஜாதகிக்கு குடு ம்ப தேகாரிஷ்டரோக பாதைகளுந் துக்க சோகங்களும் பர்த்துரு புத்திரர் முதலியவைகளில் ஜீவனக்குறைவு ராஜதெண்டனை ரொ ணம் முதலிய பலவகை நஷ்டந் தேசாடனம் சோரம் இப்படி பல விதமான துக்க சோக பலன்கள் நடந்துவரப் படுமென்று கண்டறிய வேண்டியது.

சிம்பலக்கினத்திற் பிறந்தவர்களின்.

யோகபாவ பலன்களாவன.

சிம்பலக்கினத்திலும் குரு, அம்சத்திலும் ஜெனிக்கில் ராஜ உத்தியோகமுடைய பர்த்தாவையடைந்து நல்லொழுக்க ஆசாரமும் சுகசீவியாய் குணரூபவதியாய் புத்திரபாக்கிய சம்பத்துடன் வாழ் வள்.

சுக்கிராங்கிசமாகில் அதிபோக மோகியாய் சரீரகாந்தியும் ரூப லாவண்ணிய முடையவளாய் பெண் சந்ததிகளை அதிகமாய்ப் பெற்று கிரகவாகனம் கன்றுபூமி சகல பாக்கியத்தையு மடைந்து காவியம்

விவகாரம் வியாபாரம் என்னும் தொழிலையுடைய பர்த்தாவை யடைந்து சுகம்பெறுவள், சங்கீதம் முதலிய வித்தையறிவாள்.

புதாங்சிசமாகில் ஜாதகி கல்வியும் ஞானமும் உடைவளாய் வியாபாரமுடைய பர்த்தாவையடைந்து மிகவும் கீர்த்தியுடையவளாய் வாழ்வள்.

குஜாங்கிசமாகில் ஜாதகி விரோத முடையவளாய் ரோகஸ்தியாய் புருடனை முன்னிழப்பள்.

சனி அங்கிசமாகில் ஜாதகி தேகக்ஷீண முடையவளாய் புத்திர தோஷத்தை யடைந்து பர்த்துரு க்ஷயத்தையும் பெறுவள்.

ஆயுர்பாவ பலா பலன்.

புத்திரகாரகனுகிய குருவும் ஆயுள்காரகனுகிய சனி, இவர்கள் கூடினும் அல்லது ஒருவருக்கொருவர் பார்வையாகி கேந்திரகோண இராசியிலும் சோக்ஷேத்திர உச்சமித்துரு க்ஷேத்திரத்திலும் பலத்தும் சூரியன், சந்திரன், இவர்கள் விருஷபம் மிதுனம், கடகம், சிம்பம், தனுசு, இவ்விராசிகளில் இருந்து சூரியன் புதனைக்கூடி சூரியனுக்கு இரண்டாவது ராசிகளில் சுக்கிரன் இருக்கினும், லக்கினத்திற் குரு, கேந்திர திரிகோண ராசியானுலும் ஜாதகத்திற்கு வருஷம் 89-வரை திடசரீரத்துடனும் விர்த்தியானுலும் யௌவன வயது ஸ்திரீயைப்போல தேக சவுக்கியத்தை யடைந்து வருவள்.

மேற்கண்ட சூரியன், சந்திரன், இவர்கள் கன்னி, துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், இந்த இராசிகளில் சேர்ந்து அல்லது தனித்திருந்தாலும் குரு, சனி, இவர்கள் பலத்து மேற்சொல்லிய இடங்களில் இருந்தாலும் லக்கினத்திலாவது சந்திரனுடனுவது பாபிகள் சேராதிருக்கில் வருடம் 96-வரை ஜாதகி ஆயுளுடன் வாழ்வள்.

கணவன் ஆயுளும் யோகமும் கூறுகின்றன.

களத்திரக்காரகனுகிய சுக்கிரனும் ஆயுள்காரகனுகிய சனி, இவர்கள் துலாம், ரிஷபம், கும்பம், மீனம், இவ்விராசிகளில் பலத்துடன் இருந்து இலக்கினத்திற்கு 2-8-9-இவ்விராசிகளில் பாம்பு, குஜன், சூரியன், இவர்களில்லா திருக்கினும் 7-9-இடங்களில் குரு, அல்லது சுபர்கள் இருக்கில் ஜாதபியினுடைய பர்த்தா வெகு நாள் ஆயுள் தீர்க்கத்துடனும் பலவிதமான ராஜ உத்தியோக சம்பந்தத்

தாற் பிரபல ஜீவனமடைந்து பெரும் செல்வத்துடன் கீர்த்திப் பெற்று உலகத்தில் வாழ்வள்.

இவ்விதமிருக்கும் சனி, சுக்கிரனுடனுவது இலக்கினத்திற்கு 2-7-9-இந்த இடங்களிலாவது பகை பாபிகள் கூடினுலும் சுபர்க களேயன்றி பாபிகள் மாத்திரம் இருந்தாலும் அந்த ஸ்தானதிகள் பலன் பெற்றிருக்கிற் ஜாதகி சொற்பகாலம் வருந்தி இனேத்த பர்த்தாவும் வர வர விருத்தியுடனும் வயது 60-வரை மங்கிலியத்துடனும் பின் சவுக்கியத்தை யடைந்து வாழ்வார்கள்.

சுக்கிரன், சனி, பலமற்று பகை நீச க்ஷேத்திரங்களில் இருந்தாலும் பாபர் கூடி யிருந்தாலும் இலக்கினத்திற்கு 2-7-8-இந்த விடங்களில் சனி, செவ்வாய், பாம்புகளில் இரண்டு பாபிகள் கூடியிருக்கினும் ஜாதகி அதிக யௌவனத்திலே பர்த்துரு மாரகமும் பர்த்துரு வகை பொருள்களால் விவாதத்தை யடைந்து பலவகையான கிலேச மடைவாள்.

இலக்கினத்திற்கு 2-7-8-இந்த ஸ்தானங்களில் சுபர்களும் அல்லது சுத்தமாக யிருந்து புதன், சனி, குரு, இவர்கள் தங்கள் தங்களுக்குரிய மித்துரு சுபக்ஷேத்திரங்களில் இருந்தும் சுக்கிரன், விருஷபம், கும்பம், மீனம், கடகம், இந்த ராசிகளில் இருக்கில் விசேஷ பூமி கிராமாதி நகரங்களுடன் மிகுந்த கீர்த்தியோடு ஸ்திரீ மூலமாய் பர்த்தாவுக்கு யோகத்தை யடைந்து சுமங்கிலியாய் வாழ்ந்து பல திரவிய விருத்தியுடன் இருந்து வாழ்வள்.

சனி, கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த ராசிகளிலிருந்து இச்சனிக்கு 2-7-9-10-இந்த ராசிகளில் சுக்கிரன், சந்திரன், குரு, புதன், இவர்களில் யெவரேனும் சுப பலத்துடன் இருக்கில் அவ்விடங்கள் இலக்கினத்துக்கு 6-8-12-அல்லாத விடங்களாகில் ஜாதகியினுடைய பர்த்தா வெகு நாள் ஆயுளுடனும் பல பொருள் செல்வத்தையும் படைத்து அதிகார ஜெனமேன்மைகளுடன் பூமி, கிரகவாகன சம்பத்துகளை நூதனமாக ஆர்ஜித்து பிரபலமாக வாழ்வள்.

அவ்விடங்கள் லக்கினத்துக்கு 6-8-12-ஆம் இடங்களானுலும் சனி, பகை நீச முதலிய துர்ப்பலனைப் பெற்றிருந்தாலும் முன் சொல்லிய விடங்களில் சுபர்களின்றி பாபர்கள் வசிக்கினும் ஜாதகிக்குப் பிரபலயோகமின்றி பரதேசங்களில் சஞ்சரித்து பர்த்தாவுழலுவனென்றும், பல தரித்திராம்சை யடைந்து வாழப்படுவளென்றும்

பாலியம் யௌவனம் இவ்வயதுகளிலேயே பர்த்துருமாரகமு முண்டாகும்.

புத்திரயோகாவ யோக பலன்

சகோதர காரகனுகிய அங்காரகனும் புத்திர காரகனுகிய குருவும், இவ்விரண்டு பேர்களும் அவரவர்களின் சொக்ஷேத்திர வீடுகளிலிருந்தும் அல்லது கன்னி, துலாம், கும்பம், மேஷம், மிதுனம், கடகம், இவ்விராசிகளில் நீசம் பகை முதலியது பெருமல் இருந்தாலும் தனுசு, மேஷம், கும்பம், ரிஷபம், இந்த ராசிகளில் பாம்பு, புதன், சனி, இவர்களில் இரண்டு கிரகங்கள் சேராமலிருக்கினும், சந்திரன் சுக்கிரனும் 7-9-ஆம் இடத்திலும் 7-9-ஆம் இடத்ததிபர்களும் குரு, பூரண சந்திரன், முதலிய சுபர்களுடன் கூடி இருந்தாலும் அல்லது சுபர் பார்த்தாலும் ஜாதகிக்கு விசேஷ புத்திரலாபமும் யோகபால பிரபலமும் தனதான்னிய கிரக, பூமி, வாகனம் முதலிய பல செல்வங்களும் நாள்தோறும் விர்த்திக்கு வருமென்றும் வெகு புத்திரயோக சாதகமென்றும் அறிய வேண்டியது.

மேற்கூறிய 7-9-ஆம் இடங்களில் சனி, பாம்பு, பாபர் இருக்கினும் குஜன், சனி, இவ்விருவர்களும் மகாம், கும்பம், மிதுனம், கன்னி, கடகம், தனுசு, இவ்விராசிகளி லிருந்தாலும் புத்திராரிஷ்டத்தையும் ஸ்வீகார முதலிய புத்திராதிகளை வளர்த்தும் அவ்வித புத்திரர்களால் கர்மபாத்தியதை யுண்டாகும்.

அப்படிப்பட்ட கிரகங்களை குரு முதலிய சுபக்கோட்கள் பார்க்கினும் சுபசம்பந்தஞ் சேரினும் ஜாதகி அநேக நாள் புத்திரரின்றி வருந்தி பின் புத்திரலாப முண்டாகும் யோகமும் பின் காலத்தில் விசேஷ பிரபலமும் பூமி, கிரகம், வாகனம் இவைகள் தொந்தப்படும்.

இலக்கினத்திற்கு 2-7-9-இந்த யிடங்களில் பாபிகள் இன்றி சுபரிருந்தாலும் அல்லது சுபர் பார்த்தாலும் புதன், சனி குஜன் இம்மூவர்களில் இரண்டு பேர்களாவது குரு, சுக்கிரன், சந்திரன், இவர்கள் சொக்ஷேத்திர வீட்டிலாவது அல்லது சிம்பம், தனுசு, கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், இவைகளில் இருக்கினும் சாதகத்திற்கு யேராளமான புத்திரலாபாதி விருத்தியும் யோகப் பிரபலமும் பர்த்தாவுக்கு ராஜாங்க மூலமான ஜீவனமும் அதிக யுக்தி புத்தி மேன்மை குடும்ப விருத்தியுடன் வாழ்வாள்.

இலக்கினத்திற்கு 7-2-9-இந்த ஸ்தானத்திலாவது புதன் சனி, குஜனுடனுவது பாம்பு முதலிய விரோதிகள் சேரினும் அல்லது பகை நீசமானுலும் புதன், சனி, கூடி யிருந்தாலும் ஜாத கிக்கும் புத்திரரே கிடையாது அன்னிய புத்திரர்களை ஆதரவு செய் யினும் அவையும் விர்த்திக்கு வாராது பலவிதமானக் கலகங்களையும் விவாதங்களையும் சத்துருத்துவமான குடும்பங்களையும் அடையப் பட்டு அவைகளால் ஜாதகி பல வருத்த மடைவள்.

அவ்வித கிரகங்களை குரு முதலிய சுபக்கோட்கள் பார்க்கி னும் அல்லது குடினும் ஜாதகி அதிக செல்வத்துடனும் குடும்ப விருத்தியுடனும் இரண்டு முதலிய புத்திரலாபங்களை அடைந்து சுகப்படுவாள்.

இலக்கினத்திலும் 5-9-இந்த விடங்களினும் செவ்வாய் ராகு கூடினுலும் அல்லது சூரியனுடன் மற்றொரு பாபிகூடினுலும் குரு, சூரியன், குஜன் இவர்கள் மகரம், மீனம், கடகம், அல்லது சூரிய னுடன் அஸ்தங்கதமாயானுலும் அல்லது சந்திரன், சுக்கிரனுக்கு, 5-7-9-களில் மேற்கூறிய பாபிகள் இருந்தாலும் அல்லது பார்த் தாலும் ஜாதகிக்கு கெர்ப்பத்திலுைம் பிரசவத்திலுைம் தேகாரிஷ்ட கண்டங்களையடைவள், கெர்ப்பசேதம் சிசு சேதங்களை உதிரத்தி லேயே அடைந்து அவைகளால் உயிர்ச்சேதங்களையும் பல துக்கங் களையும் அடைவாள்.

மேற்சொல்லிய ஸ்தானங்களை அல்லது கிரகங்களை குரு முத லிய சுபக்கோள்கள் பார்க்கினும் அல்லது சேரினும் அவ்வித சிசுக் களின் மரணதுக்கங்களையும் கெர்ப்பத்திலுைம் பிரசவத்திலுைம் தேகாரிஷ்ட உபாதையடைந்து பின் சுகப்பட்டு விருத்தியானுல் புத்திரர்களை பின் பெற்று சுகப்படுவள்.

மேற்கூறிய இடங்களில் சந்திரன், சுக்கிரன், பாம்பு, முதலிய பெண்கிரகங்கள் அதிக பலத்துடன் இருக்கில் பெண்ணே பெறு வளே அல்லது ஆண்பெறுள், அதில் சூரியன், அல்லது குரு, முத லிய புருஷக் கிரகங்கள் நோக்கினும் அல்லது சேரினும் அனேக ஸ்திரீ பிரஜைகளைப் பெற்று வருந்தி பின் அற்பமான புருஷ சந்ததி யைப் பெற்று வாழ்வள், ஸ்வீகாரத்தின் பின்னும் மகவுண்டாம்.

மேஷத்திலும் கும்பத்திலும் சனி, குஜன், குருவுடனும் கூடிய கிரக பலாபல எண்களை அவரவர்களின் பூரா எண்பேருக்கு கொடு த்து வந்த ஈவு புத்திரலாபமென்னும் ராசி பல எண்களையும் கிரக

பல எண்களையும் பெருக்கி 8-ல் கழித்த சேஷமும் வந்த ஈவை 7-ல் பெருக்கி 9-ல் கழித்துவந்த சேஷமும் உரிய திசாபுத்தி சுபக் கிரக சஞ்சாரக் காலங்களில் புத்திரலாப விருத்தியும் யோக பிரபல விருத்தியு முண்டாம் பாபகிரகங்களின்றி திசாபுத்திக் காலங்களில் புத்திராரிஷ்ட நஷ்டமும் தேகாரிஷ்ட உபாதிகளும் யோகபங்கமும் உண்டாகும்.

செவ்வாய், சந்திரன், சூரியன், குரு, திசை சிலபாகம், புதன், சுக்கிரன், இந்த திசைகளிலும் குரு, சனி, பாம்பு, புதன், சுக்கிரன், இந்த புத்தி காலங்களில் சாதக விவாக சுபசோபனமும் குடும்ப விருத்தியும் பர்த்தாவுக்கு பிரபலமான யோகமும் நூதன கிரக வாகன கன்று, காலி, பூமி, பல செல்வ விருத்திகளும் இவ்வித உத்தம யோக பலன்கள் நடந்துவரும்.

குரு, திசை மற்றொருபாகமும் பாம்பின்றிசை சிலபாகமும் சனி இந்த திசைகளில் தனது சூரியன், செவ்வாய், பாம்பு, இந்த புத்தி காலங்களில் கணவன் புத்திரர் தேகாரிஷ்ட துக்க தோஷமும் தேசப்பிரஷ்ட சஞ்சாரங்களும் கணவனுக்கு யோகபங்கமும் தனம் பூமிகளால் பலவித விவாதமும் பலவியாதிகளால் தேகாரிஷ்ட கண்டமும் இவ்விதமான கஷ்ட பலன்கள் நடந்து வரும்.

தனுசு மீன இலக்கினங்களில் பிறந்தவர்களின் பாவபலன்களாவன.

ஆயுற்பாவம்.

புத்திரகாரகனாகிய குரு, கேந்திர திரிகோணத்தில் சோக்ஷேத்திர உச்ச மித்துரு இடங்களில் இருந்தும் சந்திரன், சுக்கிரன், இவர்கள் மீனம், விருஷபம், கன்னி, துலாம், மகரம், இந்த யிடங்களில் தனித்தாவது சேர்ந்தாவது இருக்கில் வயசு வரு 60-வரை உண்டென்றும் அதிக ரூபலாவண்ணியவதியாயும் யாவரும் புகழ புத்தி யுக்தியுடன் மிகவும் மேலானவளாய் ஆசார சீவியாய் வாழ்ந்து வருவாள் ஜாதகி, என்றறியவும்.

மேற்சொன்ன இடம், கிரகம் இவைகளுடனே சனி, பாம்பு, குஜன் இவர்களில் யெவரேனும் கூடியிருக்கில் அனுசாரியாய் ஆயுள் விருத்தியுடன் சாதி பிருஷ்டடைவள்.

குரு, சந்திரன், சுக்கிரன், கேந்திர திரிகோண நீங்கிய இடத்தில் பகை நீச முதலிய அப்பலன்களைப் பெற்று வாழினும் இலக்கி

னத்திற்கு 2-12-களில் பாபிகளிருக்கினும் ஜாதகிக்கு ஆயுள் அற்பத்துடன் வியாதியஸ்தியாய் வாழ்வள்.

குரு, சந்திரன், இவ்விருவர்களும் சர ராசிகளே யிருக்கில் பூரணாயுளான ஷூ 100-வரை விருத்தியாய் வாழ்வள், ஸ்திரராசிகளில் இருக்கில் அற்பாயுளென்றும் உபயத்திலிருக்கில் மத்திமாயுளென்றும் சரமும் ஸ்திரமாகில் ஷூ 70-க்குள்ளென்றும் சரம் உதயமாகில் ஷூ 50-க்குள்ளென்றும் உபயம் ஸ்திரமாகில் ஷூ 30-க்குள்ளென்றும் காணவேண்டியது.

குரு, சந்திரன், இவ்விருவர்களும் பலமுடைய கேந்திர திரிகோண ராசிகளில் இருக்கில் பூரணாயுளான வயதுடைவளாம்.

இலக்கினத்திற்கு 6-8-12-ல் இருக்கில் அற்பாயுள் இதில் இரண்டு பாபிகளைக் கூடி இருக்கில் ஷூ 16-க்குள்ளாகவே ஜாதகிக்கு ஆயுள் முடிவாகும் இரண்டு சுபர்களைக்கூடில் ஷூ 66-வரை என்றும் சொல்லவேண்டியது.

குரு, சந்திரன், இவர்கள் ஒவ்வொரு பாபிகளைக் கூடினாலும் முன் கூறிய க்ஷேத்திரங்களில் இருந்தாலும் அல்லது பாப க்ஷேத்திரமாகிய 3-6-8-12-இவ்விடங்களில் நின்றாலும் அற்பாயுளென்று ஜாதகிக்குச் சொல்லப்படும்.

தனக்கு மித்துருவான ஒரு பாபரைக்கூடில் ஷூ 18-வரையில் ஆயுளென்றும் குரு, சந்திரன், இருவர்களும் பலமற்று பகை நீசமுதலிய அசுபக்ஷேத்திரத்தில் இருந்து இலக்கினத்திலாவது இலக்கினத்தின் இருபாரிசத்திலாவது பாபிகள் இருக்கில் ஜாதகி நன்றாய் வாழ்ந்து வருங்காலத்தில் மரணமாவாளென்றும் குரு அல்லது சந்திரன் மாத்திரம் பலக்கில் ஷூ 52-வரை ஆயுளுடையவளாவளென்றும் சந்திரனுக்கு உபய பாரிசங்களிலாவது இலக்கினத்துக்கு உபய பாரிசத்திலாவது அல்லது 6-8-ஆமிடங்களிலாவது இரண்டு பாபிகள் சேர்ந்திருக்கில் ஷூ 32-க்குள்ளாகவே பாலியத்தில் ஆயுள் தோஷமடைவளென்றும் இதில் குரு அல்லது சுக்கிரன் லக்கினத்திலாவது 7-ஆமிடத்திலாவது இருக்கில் ஆயுள் விருத்தியுடன் மிகவும் யோகமாய் வாழ்வள்.

கணவன் ஆயுள்யோக பலா பலன்

இலக்கினத்திற்கு 2-3-ல் சனி, பாம்பு முதலிய பாபர்களின்றி சுத்தமாயிருக்கினும் அல்லது சுபர் இருக்கினும் 1-7-9-இந்த இடங்களில் குரு, சந்திரன், சுக்கிரன், புதன் ஒன்றாகி கேந்திர திரிகோண

உச்ச சோக்ஷேத்திரமித்துரு இடங்களில் வாழினும் செவ்வாய் கேந்திரங்களிலாவது திரிகோணத்திலாவது இருந்தாலும் அவ்வித ஜாதகத்திற்கு கணவன் பிற்பல ஆயுள் விருத்தியுடனும் தனதான்னிய லாபத்துடனும் பல ஆயுள் அடிமை முதலிய செல்வங்களைப் பொருந்தி வாழ்வளென்றும் மேற்கூறிய சூரியன், புதன், செவ்வாய் இவர்கள் பகைநீச பாப க்ஷேத்திரமாகிய மகரம், கும்பம், விருஷபம், துலாம், விருச்சிகம், இவ்விராசிகளில் இருந்தும் பாம்பு, சனி முதலிய கோட்களைக் கூடினாலும் இலக்கினத்திற்கு 2-9-7-இந்த இடங்களில் குஜனுடன் பாம்பு, சனி முதலிய இரண்டு பாவிகள் சேரினும் 7-ல் அல்லது 8-ல் குஜனுடன் ஒரு பாபக்கிரகம் கூடி இருந்தாலும் இவ்வித ஜாதகங்களும் பாலியத்திலேயே கணவனுயுள் தோஷமும் பலவாறுன குடும்பச் சேதமும் இவ்வித 'கெடுதற்பலன் நடக்குமெனவறிக.

சுக்கிரன், புதன், குரு, இம்மூவர்களும் பலத்து கேந்திர திரிகோண ராசிகளிலும் சுபமித்துருவான இடங்களிலும் பாபரைக் கூடாமல் இருக்கில் ஜாதகி விருத்தப் பருவகாலம்வரை கணவனுயுளுடன் பல செல்வத்தையும் கணவனுல் ராஜயோக பலனையும் அடைந்துவரப் படுமென்றும் அறியவும்.

மேற்கூறிய கிரகங்கள் மூவரில் இருவர் பலம் கெடினும் பாப பகை க்ஷேத்திரத்திலாவது 6-8-12-லாவது மேற்படி கிரகங்கள் இருக்கினும் ஜாதகி பாலியத்திலேயே கணவன் தோஷமும் பல வகை கஷ்ட நஷ்டமும் உண்டாகும்.

மூவரில் ஒருவர் கெடில் 30-க்கு மேற்பட்ட மத்திமாயுள் காலத்திலேயே கணவனை கைசோருவள்.

இலக்கினத்திற்கு 2-7-8-9-இந்த இடங்களில் பாபிகளன்றி யிருக்கில் ஜாதகியினுடைய புருடனுக்கு பலவகை செல்வயோகத்துடன் வாழ்ந்து வருவள்.

இலக்கினத்திற்கு 2-ஆமிடத்தில் சுபர்களும் 8-ஆமிடத்தில் பாபர்களும் இருக்கில் ஜாதகி சுமங்கலியாகவே மரிப்பாள்.

இலக்கினத்தினும் 9-ஆமிடத்தினும் சுபர்கள் இருக்கில் அனேக வஸ்திராபரண பூஷணம் அணிவாள் அணிவாள் என்றும் கூறப்படும்.

இலக்கினத்திற்கு 3-7-11-இந்த யிடங்களில் இருக்கும் சுக்கிரனுடன் சனி, அல்லது பாம்பு வாழினும் அல்லது பார்க்கினும் ஜாதகி அதிமோகி புருடனை விட்டு இழப்பள்.

புத்திரயோகாவ யோக பலன்

சூரியன், புதன், குரு, இம்மூவர்களும் கேந்திர திரிகோண இராசிகளிலும் உச்ச சொக்ஷேத்திரங்களிலும் சனி, பாம்பு, முதலிய பாபரைக்கூடாமல் இருக்கில் புத்திர விருத்தியும் குடும்பக்ஷயமும் புத்திரால் மிகவும் யோகமும் நடக்கும்.

இலக்கினத்தில் 9-7-ஆமிடங்களில் பாம்பு முதலிய பாபிகள் இன்றி சுத்தமாயிருக்கினும் அல்லது சுபர்கள் பார்க்கினும் இருக்கினும் புத்திரச்செல்வ விருத்தியும் தனதான்னிய பிரபலயோகமும் பர்த்தாவினாலும் புத்திராலும் மிகவும் பிரபலமான யோகத்தையுமடைவாவளென அறியவேண்டும்.

குருவும், புதனும், கேந்திர திரிகோணத்தி லிருந்தாலும் 2-12-3 11-ல் இருந்தாலும் பகைநீச க்ஷேத்திரமின்றி இருக்கில் அதிக பாலியத்திலேயே புத்திரலாப விருத்திகளை யடைந்து யோக பிரபலத்துடன் வாழ்ந்து வருவளென்றும் இவர்களுடன் பாபிகளாவது 2-12-9-7-இந்த யிடங்களில் குருபகை நீசம்பெற்று பாம்பு, புதன், சனி, முதலிய பாபர்களிருக்கில் ஜாதகத்தின் பலபொருள் நாசமும் தனதான்னிய குறைவும் புத்திரநஷ்டமும் குழந்தைகளைப் பெற்று இழப்பள் அதை குரு, சந்திரன் முதலிய சுபக்கோட்கள் நோக்கில் முன் உண்டானதெல்லாம் நஷ்டப்பட்டு பின்காலத்தில் புத்திரலாபத்தை யடைந்து விருத்தியாய் வாழ்வளென்றும் 2-7-9-இவ்விடங்களில் பாம்பு, சனி, புதன், இவ்வித கொடிய கோட்கள் இருக்கில் புத்திரரே உற்பத்தியாகாதென்றும் மலடியாய் வாழ்வாளென்றும் ஸ்வீகார முதலிய அபிமான புத்திரர்களால் கர்மபாத்தியம் அடைவளென்றுங் காணவேண்டியது.

இலக்கினத்திற்கு 2-7-9-இவ்விடங்களில் ஏதேனு மிரண்டு ஸ்தானங்களிலாவது சுக்கிரன், அல்லது புதன், கிருஷ்ணபக்ஷமி சந்திரன் பாம்பு, இவர்களில் எவர் நின்றாலும் சுபக்கிரக திருஷ்டியுடன் இருக்கினும் ஜாதகி ஸ்திரீ சந்ததி அதிக பிரபலமாகி அவ்வித ஸ்திரீவகை புத்திரர்களால் தனக்கு சுகமடைவள்.

அவ்விராசிகள் பாபர்கள் கூடியிருக்கினும் நோக்கினும் எவ்விதமான புத்திரர்களும் விருத்தியின்றி குடும்ப க்ஷயமும் ரோகாதிபாதைகளையும் அடைந்து வருவளென்றும் புத்திரர்கள் இருக்கினும் மத்தியகாலத்திற் சேதமும் புத்திரர் பர்த்தா முதலியவர்கள் பரதேசமடைந்து மரணமடைவார்கள் என்றுங் கூறப்படும்.

குரு, குஜன், சூரியன், புதன், பாம்பு, இந்த திசைகளில் சந்திரன், சுக்கிரன், குரு, சனி, இந்த புத்தி காலங்களில் விசேஷ யோகமும் விவாக சுபசோபனுதி புத்திரலாப யோகமும் பர்த்தாவுக்கு பிரபலசெல்வமும் கிரகவாகன சம்பத்தும் தனதான்னியாதி வஸ்திராபரண பூஷணலாபமும் ராஜத்துவ அதிகாராதி விர்த்திகள் கணவனுக்கு உண்டாகுதலும் இவ்விதமான உத்தமபலன் நடக்கும்.

சனி, சந்திரன், சுக்கிரன், இவர்கள் திசைகளில் குரு, பாம்பு, சந்திரன், சனி, இவர்கள் புத்திகாலங்களில் ஜாதகிக்கு அனேகவித விவாதமும் தேகாரிஷ்டாதி புத்திரதோஷமும் கணவன் ஜாதகம் இவைகளுக்கு தொந்தமின்றிப் பிரிதலும் பலவிதமான மனுேபாதைகளும் அவயோக பலன்கள் நடக்கும்.

புதன், அங்கிசமாகில் அனேக பூமி கிரகம் வாகனம் சம்பத்துடையவளாய் புத்திரரின்றி வருந்திஸ்தூல சரீரியாய் வாழ்வள்.

குரு, அங்கிசமாகில் ஜாதகி பர்த்தாவினுல் விசேஷ ராஜயோகமும் தனதான்னிய கிரகவாகன சம்பத்துக்களும் குடும்பம் முதலிய புத்திர விருத்திகளை யடைந்து மங்களத்துடன் அனேக தனங்களைப் படைத்து ஆசாரச் சீவியாய் வாழ்வள்.

சுக்கிரன் அங்கிசமாகில் ஜாதகி பர்த்துரு விரோதியாய் பரர்களுக்கு அனுகூலியாய் பரர்களுக்கு தனங்களை அளித்து வாழ்வாள்.

சனி, அங்கிசமாகில் ஜாதகி குடும்ப விருத்தியின்றி வியாதி முதலிய தேவதா பாதைகளைப்பொருந்தி ஈனஸ்திதியுடன் குடும்பம்மாறி தேசபிரஷ்டத்துடன் வாழ்வள்.

செவ்வாய், அங்கிசமாகில் ஜாதகி பாலியத்திலேயே பர்த்துரு தோஷத்தை அடைந்து குரூபியாய்ப் புத்திரரைப் பெற்றிழப்பள்.

மகர கும்பலக்கினத்திற் பிறந்தவர்களின் யோகாவயோக பலன்களாவன.

ஆயுற் பாவம்.

ஆயுள் காரகனுகிய சனியும், புத்திரகாரகனுகிய குருவும் மாதுர்க் காரகனுகிய சந்திரன், இம்மூவர்களும் தங்கள் தங்களுக்கேற்ற சோ க்ஷேத்திர உச்சமித்துரு ஸ்தானங்களிலும் கேந்திர கோணத்திலும் இருந்து சூரியன், புதன், இவர்கள் மேஷம், சிம்பம், தனுசு, மிதுனம், துலாம், கும்பம், இவைகளில் இருக்கில் ஜாதகிக்கு பூரணயு

ளான வருஷம் 90-க்கு மேல் ஆயுள் உடையவளாவளென்றும் இம் மூவரில் இருவர் மாத்திரம் சொல்லியபடிக்கு இருந்து சந்திரனைச் சுபர்பார்க்கில் வருஷம் 66-க்குள்ளென்றும் சந்திரன் பலன்கெட்டு பகைநீச க்ஷேத்திரத்திலாவது 3-6-8-12-களிலாவது இருந்து குரு பலன் கெடினும் சனி மாத்திரம் பலக்கில் வருஷம் 46-வயசு உள்ளவ ளென்றும் சனி பலன் குறைந்து 3-6-8-12-லும் அல்லது பகைநீச க்ஷேத்திரம் அடைந்தாலும் வருஷம் 32-க்குள் பாலியத்திலேயே மாரகமென்றும் 8-2-12-இவ்விடங்களில் பாம்பு, குஜன், ரவிமுதலிய வர் இருந்து சுபர்கள் கேந்திரகோணத்தில் இல்லாதிருக்கில் பாலியத்தி லேயே மாரகமென்றும் சனி, குரு, இரண்டு பேர்களும் சூரிய சந்திர கேந்திரகோணத்தில் பலத்து சுபசம்பந்தம் பெறில் வருஷம் 60-வரை ஆயுளுண்டென்றும் இவர்களுடன் பாபிகள் கூடினும் லக்கினத்துக்கு இரண்டு பாரிசத்திலும் பாபிகளிருக்கினும் அற்பாயுளென்றும் சனி பகை நீசக்ஷேத்திரங்களில் இருந்து பாபரைக்கூடின் பாலியத்தி லேயே ஆயுள் முடிவென்றும் இவ்விதமிருக்கும் கிரகங்களை குரு, பூரணச்சந்திரன், சுக்கிரன், நோக்கினும் அல்லது சேரினும் லக்கினத் துக்கு உபய பாரிசத்திலாவது அல்லது சந்திரனுக்கு உபய பாரிசத்தி லாவது சுபர்கள் இருக்கினும் வருஷம் 50-க்கு மேலான வயதுடை யவளாய் அதிக பிரபல்லிய யோகமும் தனதான்னிய லாபவிருத்தி களை அடைந்து சுகமாக வாழ்வள்.

கணவன் யோக பலன்.

சூரியன், சந்திரன், பலமுள்ள சுபக்ஷேத்திரங்களிலும் கேந்திர கோணத்திலும் இருந்து அவரவர்களுக்கு இணையுள்ள சுபக்கிரகங் களைக் கூடி இருக்கினும் 7-9-ம் ராசிகளில் பாபர்களின்றி சுபவீக்ஷ ண்ணியம் அல்லது சுபர் இருக்கில் கணவன் விருத்தப்பருவ காலம் வரை ஆயுள் உடையவனாய் பர்த்தா ராஜயோக வல்லபனாய் யாவரும் பணிய வாழ்வன். இவ்வித மிருக்குங் கிரகத்துடன் இரண்டு பாவி கள் சேரில் மத்திமவயதிலேயே கணவன் மரணமும் தனதான்னிய நஷ்டத்தையும் அடைந்து கிலேசிப்பள்.

இலக்கினத்திற்கு 7-12-9-இந்த இடங்களில் சுபர் இருந்தாலும் அல்லது சுத்தமாகி அந்த ஸ்தானாதிபதிகள் சுக்கிரன், சந்திரன் குரு வைப்போய்ச் சேர்ந்தாலும் ஏராளமான பூமி சிரகவாகன விருத்தி யுடன் விருத்தப் பருவகாலம் வரை மாங்கிலியவதியாய் வாழ்வள்.

இலக்கினத்திற்கு 7-8-12-இந்த இடங்களில் பாபர்களிருக்கினும் இவ்வீட்டதிபதிகள் பாபர் வீட்டிலாவது பாபர்களுடனாவது கூடியிருக்கினும் நோக்கினும் யௌவனத்திலேயே அமங்கிலியவதியாகி, தனம், பூமி, பொருளை மாத்திரம் படைத்து வாழ்வள்.

இலக்கினத்திற்கு 2-7-9-இவ்விடங்களுக்கு அதிபதிகள் செவ்வாய், சனி வீட்டிலாவது 3-6-8-12-லாவது இருக்கினும் 2-7-9-இவைகளிலேதேனும் ஒன்றில் பாபர்களிருக்கினும் பாலியத்திலேயே பர்த்துரு மாரகமுண்டாம்.

இவ்வித கிரகங்களுடன் இரண்டு சுபர்கள் கூடின் வயசு 66-வரை மாங்கிலிய விருத்தியுடன் வாழ்வள்.

சுக்கிரன், சந்திரன் இவர்களுடன் செவ்வாய், பாம்பு முதலிய தீக்கோள்கள் எவரேனும் சேரில் புருஷனுக்கு விரோதியாய் பரர்களையே ஆதரிப்பள், பின் மத்திமவயதிலேயே கணவன் ஆயுள் முடிவாகும்.

குரு, சந்திரன் இவ்விருவர்களும் சந்திரன் அல்லது லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களிலிருந்து 10-6-2-ம் இடங்களில் சுபர் இருக்கில் பர்த்தாவினால் அனேக கிராமம், பூமி முதலிய செல்வங்களும் ராஜ அதிகாரங்களையும் பொருந்தி பிரபல வெற்றியுடன் விருத்தப் பருவ வயசு வரையிலும் மங்கிலியத்துடன் இருந்து வருவள்.

புத்திர யோகாவ யோக பலன்

வித்தியாகாரகனாகிய புதனும் களத்திரக்காரகனாகிய சுக்கிரனும் பிதுர்க்காரகனாகிய சூரியனும் மாதுர்க்காரகனாகிய சந்திரன் இந்நால்வரும் தங்கள் தங்களுக்குரிய கேந்திர திரிகோண ராசிகளிலும் சுப பலத்துடன் இருந்து 9-7-2-இந்த இடங்களில் பாபர்களேயின்றி சுபர்யிருந்து அல்லது சுத்தமாக விருக்கில் ஜாதகி மிகவும் பிரபலமான புத்திர லாபத்தையும் ஸ்திரீபுருஷ சந்ததியையும் படைத்து மிகவும் ராஜ யோகத்துடன் வாழ்ந்து வருவள்,

மேற்கூறிய கிரகம் நால்வரில் மூவர் பலத்து 9-லாவது 6-லாவது சுபர் இருக்கில் அற்பமான புத்திர லாபங்களானாலும் ஸ்திரீ புருஷ சந்ததிகளுடன் மிகவும் மேலான சுகத்தை யடைந்து வாழ்பவளென்றும் மேற்சொல்லிய நால்வரில் இருவர் மாத்திரம் பலத்து சுப க்ஷேத்திரமாகி குரு வீக்ஷண்ணியம் பெறினும் அல்லது சந்திரன்,

சுக்கிரன், பார்த்தாலும் மிகவும் ஸ்திரீ சந்ததி சாஸ்தி விருத்தியும் புருஷ சந்ததி அற்பவிருத்தியுடன் வாழ்வள்.

மேற்சொல்லிய நால்வரில் ஒருவர் மாத்திரம் பலக்கில் ஜாதகிக்கு புத்திர விருத்தியின்றி வருந்தி இழப்பள்,

இலக்கினத்திற்கு 2-7-9-ம் இடங்களிலும் சூரிய சந்திரர்களுடனும் சனி, பாம்பு, புதனில் இரண்டு பாபிகள் கூடினும் அல்லது பாம்பு, குஜன், சனி, 2-7-9-இடங்களிலிருக்கினும் ஜாதகிக்குப் புத்திரரே கிடையாது ஸ்வீகாரம் முதலிய அபிமான புத்திரர்களின்மேல் இச்சை யடைவாள், இதில் சுபர்களும் கூடிக்கலந்து நிற்கில் முன் சில நாள் புத்திரரின்றி வருந்தி பெண் சந்ததியைப்பெற்று பின் காலதாமதத்தின் மேல் அற்பமான புருஷ சந்ததிவிருத்தி யடைவாள், அவ்வித கிரகங்களுடன் இரண்டு பாபிகள் சேரில் சிலகாலம் வரை சந்ததி விருத்தியா யிருந்து பின் காலத்திற்கு உதவும் சந்ததிகள் நஷ்டமடைந்து பலவாறுய்ச் சிதறிப் போமென்றும் காணவேண்டும்.

புத்திரபாவக் கணிதங்களை முன் சொல்லிய பிரகாரம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சுக்கிரன், சூரியன், சந்திரன், பாம்பு, இத்திசைகளிலும் குஜன், குரு, சந்திரன், சனி இந்த புத்திகளிலும் விவாகசுப சோபனமும் ஏராளமான பூமி கிரகவாகன க்ஷேத்திரலாபங்களும் பர்த்தா முதலிய குடும்பங்களுக்கு ராஜயோக பிரபலங்களும் வஸ்திராபரண பூஷணுதிகள் நூதனமாகச் சேர்தலும் இவ்வித உத்தமயோக பலனுகை நடக்கும்.

செவ்வாய், குரு, சனி, புதன், இந்த திசைகளில் சனி, பாம்பு, குரு, சுக்கிரன் புத்திகளில் பர்த்துரு புத்திராதிகளுக்கு தோஷமும் கெர்ப்பங்களாலும் பலவித அரிஷ்டங்களாலும் உபாதி செய்தலும் கணவன் முதலியவர்கட்கு யோகபங்கமும் பலவித துக்க ரோகங்களும் பரதேச சஞ்சாரம் முதலிய கஷ்டங்கள் பர்த்துரு முதலியவர்கட்கு நேர்தலும் சித்தப்பிரமை முதலிய வியாதிகளால் அரிஷ்டமுண்டாகும்.

இவ்வித லக்கினங்களும் குரு அங்கிசமாகில் குடும்பவிருத்தியும் ஆசார சீவியாயும் தேவதா பக்தியும் வஸ்திராபரண செல்வத்துடனும் பர்த்தாவின் மேன்மையான அதிகாரங்களைப் பொருந்தி வாழ்வள் என்றும் அறிக.

புதன் அங்கிசமாகில் கல்வி முதலிய வித்தையில் அறிவும் விவேகமும் புத்திரஸந்தோஷத்தையும் அடைந்து வாழ்வள்.

சுக்கிரன் அங்கிசமாகில் ரூபவதியாயும் தனுர்ச்சிதத்தில் வல்லமையும் நடன நாடக சங்கீத கேளிவிலாசங்களில் உல்லாச முடையவளாயும் யோகத்துடன் வாழ்வள்.

சனி அங்கிசமாகில் ஜாதகி பொய்த் தொழிலும் புருஷன் முதலிய விரோதத்தையும் படைத்து வாழ்வள்.

செவ்வாய் அங்கிசமாகில் ஜாதகி தைரிய திட சித்தமும் பூமி முதலிய தனங்களையும் படைத்து யௌவனத்தில் பர்த்தாவின் சுகமின்றி கலகமாக வாழ்வள்.

எவ்வித கிரகங்களிற் ஜெனனமோ அல்லது ருதுவோ ஆன ஸ்திரீ ஜாதகங்களுக்கு புருடனுக்கு இளங்கொடியாக வாவதோ அல்லது முதன் மனையாளாகப் பலிப்பதோ இவ்வித பலன்களும் விசேஷமான தொழிற் பூணுதலையும் விசேஷ யோகத்தையும் யோக மாசாரவனுசாராதி பலன்களையுங் கூறப்படு மென்றறிக.

சுக்கிரன், இலக்கின மிவைகளுக்கு 2-7-8-11, இந்த விடங்களிற் சந்திரனுடன் அல்லது புதன் ரவியுடன் சனியாவது பாம்பாவது எதேனும் ஒரு பாபிகள் கூடியிருக்கினும் அவ்விடம் மித்துரு சமகிரகத்தினுடைய க்ஷேத்திரமானலும் அப்படிக்கொற்ற விராசிகள் மீனம். மிதுனம், விருச்சிகம், மகரம், கும்பம், எவ்விராசியில் மேற்கூறிய கிரக மிருந்தாலும் குரு, சூரியன், சுபர்களாகி மேற்கூறியவர்களுடன் கூடாமற் பார்க்காம லிருக்கினும் சுக்கிரன் உடனுவது மேற்கூறிய-2-7-8-இந்த யிடத்திற் கதிபர்களுடனே யாவது மேற்கூறிய பாபிகள் கூடியிருக்கினும் அவ்வதிபர்களே பாபிகளாக வந்தாலும் அவர்களுடன் வேறு மற்றொரு பாபிகள் கூடியிருக்கினும் இவ்விதமாக யிருக்குஞ் சாதிகள் புருடனுக்கு மறுதாரமாகவாவது இளங்கொடி யென்னும் பின் மனையாளாக வாவது தன் வயது ஓர் மடங்கு அதிகமான வயதுடையதும் தளர்ந்த பர்த்தாவை யடைவளென்றும் அப்படி யிருக்குங் கிரகங்களைக் குரு, முதலிய சுப திருஷ்டியல்லது சேர்ந்தாலும் யௌவனக்கடையான வசையுடைய பர்த்தாவை விவாகஞ்செய்துக் கொள்ளுவ ளென்றும் மேற்கூறிய சுக்கிரன் ஏழு எட்டாமிடத்ததிபதிகள் புதன், கிருஷ்ணபக்ஷ சந்திரன், சனி இவர்களின் திரியங்கிசாங்கிசத்தைப் பெற்றும் முன் கூறிய விதிப்படிக்கு மிருக்கினும் மேலே சொல்லப்பட்ட விருத்த வயதுடைய புருடனையும் புருடனுக்குப் பின் மனையாளாகவும் பலிப்பளெனக் காணவேண்டியது.

புதன், குரு, சந்திரன் இவரி லெவரேனும் இருவர் பலத்துடன் சுக்ஷேத்திர உச்சமாகிப் பலத்துப் புதன், சந்திரன் கேந்திரத்திரி கோணத்திலும் இருந்து இலக்கினத்திற்கு 4-2-11-9-இவ்விடங்களி லும் சரவிராசியாகினும் அவை கேந்திரகோண ஸ்தானமாகவுமிருந்து மேற்கூறிய கிரகங்களில் எவரேனும் குரு வங்கிசத்தைப் பெறில் உபாத்தியாயத் தொழில் செய்வள், சுக்கிராங்கிசம் பெறில் சங்கீத நடன நாடகத் தொழில் புரிவள், உலகமெச்சக் கீர்த்திப் பெறுவள், புதாங்கிசமாகின் அன்னியதேச பாஷையிலும் கைத்தொழிற்களி லும் விசேஷ கியாதி பெறுவள், சனி அங்கிசமாகின் அனுசாரத்தா லும் சாதிவிட்டு சாதியிற் போகுதல் இழிவுகுலமடைவள், அவ்விடங் களிற் சென்று படிப்பு முதலியவற்றைக் கற்பித்து இயாவருமவமதிக் கச் சீவனம் பண்ணுவள், குஜாங்கிசம் பெறில் பூமி யாதிபத்தியமும் யுத்தரங்கியாவள், குலத்தொழிலும் தேக சாதக்மான மல்ல காகிதத் தொழிலான வித்தையில் வல்லப முடையவளாகி உலகத்திற் சஞ்ச ரிப்பாளெனக் காணல் வேண்டும்.

பகை நீசம் முதலியதையும் பகை பாபக்கிரகங்களுடன் கூடியது மான கிரகங்கள் மேலே கூறியவர்க ளிருக்கினும் அம்சம்பெற்ற கிர கங்களும் ஆதிபத்தியம் ஸ்தானத்திலிருக்குங் கிரகங்களும் ஸ்பா பகை பாவராகில் அந்தந்தக் கிரகங்களின் அங்கிசங்களுக்குச் சொன்ன வித்தை முதலிய தொழிற்களோ தாழ்மையும் அனுசாரமும் இவ்வித பல பிராப்தியின்றி யிழிவுடன் வாழ்வளென்றும் ஒரு பாபியும் ஒரு சுபரும் மித்துருவானல் சில வயசு காலத்திற்குப் பின் அவ்வித கிர கங்களுக்குக் கூறிய வித்தை முதலியவற்றை யற்பமாகப் பெறுவ ளென்றும் பாபிகளிருவருமாகி நட்புபெறில் சாதாரண வறிவுடையவ ளென்றும் சமமான கிரகமாயினும் அந்த விதியேயாம்.

இன்னும் பத்தாமிடம் ஒன்பதாமிடம் பனிரெண்டா மிடத்ததி பதிக்கு மேற்கூறிய விதியின்படிக்கு கேந்திரகோணுதி உச்சம் முத லிய பலன்களைப் பெற்றும் இருந்தும் மேலே சொன்ன அங்கிசங்க ளைப் பெற்றிருக்கில் அந்தந்த அங்கிசக் கிரகங்களுக்குச் சொன்ன வித்தை சீவனத்தைப் புரிவளென்றும் இதில் இன்னும் ஒரு விதம் குருவாகிய வங்கிசம்பெறில் தருமசாஸ்திராதி வித்தை விவகாரவதி யாகியும் பலவேத ஞானி சிலநாள் அரசவதிகாரம் பெறுவள்.

புதனுகில் வைத்தியம் விதிநூல் ஞானியாகி வாழ்வள், சுக்கிரனு கில் காவிய முதலிய பாத சாஸ்திரம் பயிலுவள், சனியாகில் விஷமுத லிய ஒளஷதஞ் செய்தும் பில்லி சூன்னிய முதலிய தொழில் அறி வள், குஜனுகில் தைரிய முதலிய அடிமை வேலை யாசவாசத்தை யடுத்து வாழுவள் எனக்காண்க.

ஸ்திரீ ஜாதகத்திறவுகோல் முற்றுப்பெற்றன.

கடவுள்துணை.

புருஷ ஜாதகத் திறவுகோல்.

நூன்முகம்.

பாலாரிஷ்டம்.

3930

வாசகம்.

ஒரு பிரஜை ஜனித்த லக்கினத்திற்கு விரையத்தானமாகிய பனிரெண்டா மிடத்தினும் ஆயுர்த்தானமாகிய எட்டாமிடம் இவைகளில் களத்திரக் காரகனாகிய சுக்கிரனும் புத்திரக்காரகனாகிய குரு, இவர்கள் தனித்து நிற்க ஜாதகனுக்கு ஆயுள் தீர்க்கமாகும் அவர்கள் சத்துருஸ்தானமாகிய 6-ஆமிடத்தினும் மேற்கண்ட எட்டாமிடத்தினுமிருக்கிற் கெண்டஞ் சம்பவிக்கும். இப்பலன் கிரகங்களின் வலிவறிந்துக் கூறவேண்டுமென வறிக.

மாதுருஸ்தானமாகிய 4-ஆமிடத்தினும் குடும்ப ஸ்தானமாகிய 2-ஆமிடம் இவைகளில் சந்திரன், குரு இவர்கள் நிற்க ஜாதகனுக்குத் தீம்புண்டாம் ஆயுள்காரகனாகிய சனியும் சகோதர காரகனாகிய செவ்வாயும் கூடி மேற்கண்ட ஸ்தானங்களிலிருக்க தீம்புண்டாகும் ஒருவருக்கொருவர் எதிராக நிற்கில் மரணஞ் சம்பவிக்குமென வறிக.

சகோதர ஸ்தானமாகிய 3-ஆமிடத்தினும் 4-8-இந்த ஸ்தானங்களில் சனி, செவ்வாய் இவர்கள் நிற்க இவரைப் பத்தாமிடத்தோன் பார்க்க ஜாதகமானவனுக்கு வருடம் ஒன்றில் கண்டஞ் சம்பவிக்குமென வறிக.

பாம்புஞ் சனியும் புத்திர ஸ்தானமாகிய 5-ஆமிடத்திலிருக்க ஜாதகனுக்குத் தீம்புண்டாகும் குலநாசமும் அன்னையற்கு தோஷமும் செய்தொழில் கெடுதியும் சலத்தினாற் பயமும் சளிப்பும் இவை முதலானதும் வயது வருடம் பனிரண்டுக்குள் நேருமென வறிக.

சனி, இராகு இவர்கள் கூடி ஒரு ராசியிலிருக்க அவர்களுடன் சூரியன் கலக்க ஜாதக மானவனுடைய பிதுர்க்குத் தோஷம் பந்துக்களில் மரணமும் வயது வருடம் 9-க்குள் நேருமென வறிக.

செவ்வாயும் சந்திரனுங்கூடி ஒரு ராசியிலிருக்க அவருடன் புதன் கலக்க சந்திரனுக்கு 7-ஆமிடத்தில் சனி நிற்க ஜாதகனுடைய

மாமனும் மாதுரு வம்சமும் நாசமாகுவர் வயது வருடம் 6-க்குள்ளென வறிக.

சுக்கிரனுஞ் சனியுங்கூடி ஒரு ராசியிலிருக்க அவர்களுடன் சூரியன் கலக்க அவர்க்கேழில் செவ்வாய் நிற்க ஜாதகனுக்கு விவாக மானதுக் கூடி ஒருவரிடத்தில் தீம்புண்டாகும் பின்பு எங்குள்ள மாதர்கட்கும் சோரநாயகனுக விருப்பனென வறிக.

குரு, சூரியன் கூடி நிற்க அவ்விராசிக்கு 7-ம் இராசியில் சனி, செவ்வாய் இவர்கள் நிற்க ஜாதகனுடைய வம்சம் அழிந்துபோகும். அவருடன் சந்திரன் கூடில் தாய் தந்தையர்களுக்கு தோஷம் சம்பவிக்கும். வயது ஷூ 9-க்குள்ளென வறிக.

களத்திரக் காரகனுகிய சுக்கிரன் 3-ஆமிடத்தில் நிற்க அவரை மற்றக் கிரகங்கள் பாராதிருக்க ஜாதகமானவனுடைய குலம் நாசமாகியும் கலகமும் துன்பமும் நேர்ந்து கருவானது அற்றும் மனையானது பாழாகியும் போமென வறிக.

சனி, செவ்வாய் கூடிநின்ற விராசிக்கு 5-ம் இராசியும் 7-ம் இராசியும் அம்பலமாக விருக்க அல்லது செவ்வாயால் பார்க்கப்பட்ட ஜாதகனுக்கு தீமையுண்டாகும் வயது ஷூ ஒன்றினிற் குள்ளென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 3-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க ஒன்பதாமிடத்தில் சனி நிற்க ஜாதகனுடைய உடன் பிறப்பிற்கு கெண்டமென்பர் அதுவல்லாமலும் தகப்பனுக்குத் தோஷம் வயது மாதம் நான்கினுக்குள் காணும் பகைப்பெற்றக் கிரகங்களின் பார்வை யுண்டாகில் மாதாவிற்கு மரணமும் அம்மனைக்குத் தோஷமு முண்டாகுமென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 10-ஆமிடத்தில் சனி நிற்க சந்திரன் பலவீனமாக 4-ஆமிடத்தில் சூரியனிருக்க 7-ஆமிடத்திற் செவ்வாய் நிற்க மற்ற கிரகங்கள் 6-8-ல் நிற்க ஜாதகமானப் பிள்ளையும் மாதாவும் மரணமாகுவர் அம்மனைக்குந் தோஷ முண்டாகுமென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 6-ஆமிடத்திற் சனி நிற்க அந்த ராசியாதிபதி பலவீனமாக 7-ஆமிடத்தில் சூரியன் பலத்துநிற்க குரு, செவ்வாய் இவர்கள் கூடி நிற்க ஜாதகனுடையத் தகப்பனுக்குத் தோஷம்

நேருவதுடன் ஜாதகன் வயது ௯-ம் ஒன்றில் மரணமாகுவனென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 5-ஆமிடத்திற் சந்திரனுஞ் சனியுங்கூடி நிற்க 7-ஆமிடத்திற் செவ்வாய், சூரியன் நிற்க ஜாதகமானவனுடைய பாட்டன் பாட்டி தாயார் சுற்றத்தாருடன் ஜாதகனும் வயது மாதம் மூன்றுக்குள் மரணமாவரென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 7-ஆமிடத்தோனும் 2-ஆமிடத்தோனும் அஸ்தமனமாக விருக்க சந்திரன் 6-ஆமிடத்திவிருக்க உதையத்தில் சனி, பாம்பு, குரு, செவ்வாய், சுக்கிரன், இந்நால்வருங் கூடி நிற்க ஜாதகமானக் குழவிக்கு வயது ௯ ஒன்றில் மரணமாகுமென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 8-ஆமிடத்திற்கு குரு நிற்க, அதற்கு 7-ஆமிடத்தில் சுக்கிரன் நிற்க சந்திரன் 3-ஆமிடத்தில் நிற்க அம்மனையோன் பலவீனமாகி 8-ஆமிடத்திலிருக்க உதையத்தில் சனி நிற்க அவருடன் செவ்வாய் கூடிய ஜாதகம் கொஞ்சநாளில் மரணமாகி விடுமென வறிக.

இலாபஸ்தானதிபதியும் அத்தானத்தில் நின்றோனும் அஸ்தமனமாக விருக்க 9-ஆமிடத்தில் சனி நிற்க 4-ஆமிடத்திற் செவ்வாய் நிற்க விரையஸ்தானத்தில் குரு, சுக்கிரன், சந்திரன் இம்மூவரும் நிற்க ஜாதகமானக் குழவியும் தனமும் நாசமாகுமென வறிக.

சந்திரன் மீனவிராசியி லிருக்க குரு, சுக்கிரன் இவர்கள் க்ஷீணமாக விருக்க பார்வை யில்லாதாக மற்றத் தீக்கோட்கள் பலத்து நிற்க ஜாதகமான பிள்ளை உடனேமரணமாகும்; இக்குறியானதுத்தப்பாது; ஆதலால் கோட்களின் நிலையறிந்து சொல்வதென வறிக.

சந்திரன், குரு, சுக்கிரன், இவர்கள் கலக்கமில்லாம லிருக்க இவர்களைப் பார்ப்போரும் சந்திரன் நின்ற இராசியாதிபதியும் உறவாக விருக்க ஜாதகனுக்கு நன்மையானது உண்டாகும் தீக்கோட்களாகிற நீம்பு செய்வாரே அல்லது மரணமடையச் செய்யார்களென வறிக.

விருத்தம்.

ஒருசுபன் மிகுத்திருந்தா லொட்டார்க டயர்சூழ்ந்து
இருசுபர் மிகுத்திருந்தா லீரெட்டாப் பகையேசெய்யான்
திருநல மானோர்நன்மை தீயருக் கட்டார்தூரம்
பெருசுப னுலேயாகிற் பேர்சொலக் காணார்தீயர்.

இ து வு ம து.

உதையாதி சுங்கன்ராஜ ஞெளிர்மதிபதியு நல்லோர்
இதமிலாப்பாபி மந்தனிற் விசேசே யெட்டோன்
இதுவைந்து பேருமாகு மெழிற்புதன் சமனேயாகும்
இதிலாகும் நன்மை யெண்ணி யினிப்பலன் சொல்வாய்மாதே.

இ து வு ம து.

உதித்ததற் கெட்டோன் காரிமதிக்கெட்டோன் பகையாய்நிற்க
மதித்தந்த விடத்தினின்ற மன்னனும் பகையேயாவர்
கதித்தவர் மேலாய்நின்முற் கண்டமுந் தோஷமுண்டு
பதித்துடன் மாரிநின்முற் பாவமுமில்லை மாதே.

இ து வு ம து.

இப்படி நட்பாட்சியுச்சமு மிழந்துபோகும்
போய்ப்பட விருந்தபேர்கள் போய்பகை நீசமானல்
நற்படியாகிநின்று நலந்தரும்வகையே செய்வார்
சொற்படித் தப்பாதாருந் தொல்புவி யோர்க்குமாதே.

வா ச க ம்.

சந்திரனின்ற விராசிக்கு 6-ம் இராசியில் சனி, பாம்புங்கூடி நிற்க, 8-ஆமிடத்தில் சூரியன், செவ்வாய், இவர்கள் நிற்க, ஜாதக மானப்பிள்ளை மரணமாகுமென வறிக.

சந்திரனுக்கு முன்னும் சனி நிற்க, பின் பக்கம் செவ்வாய் நிற்க, அவர்க்கு 8-ஆமிடத்தில் பாம்பும், சூரியனுமாக விருக்கில், ஜாதக மான பிள்ளை இரண்டு மாதத்தில் மரணமாகுமென வறிக.

சந்திர லக்கினத்திற்கு 8-ஆமிடத்திற் குரு நிற்க, விரையஸ்தா னத்தில் சனி நிற்க, அவர்க் கேழமிடத்திற் பாம்பு நிற்க, அல்லது சூரியன, செவ்வா யிவர்களிருக்க, ஜாதகமானமகவும் ஆறுமாதத்திற் குள் மரணமாகுமென வறிக.

சந்திரன் நின்ற விராசிக்கு முன் சூரியன் நிற்க, சந்திரனுக்கு 8-ஆமிடத்தில் சனி நிற்க 7-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க, இலாபஸ் தானத்திற் சுக்கிரனிருக்க 5-ஆமிடத்தில் குரு ஒருவனுக தனித்தி ருக்க ஜாதகமான பிள்ளை மாதம் நாலில் மரணமாகுமென வறிக.

சந்திரன் ஒருவனுக நிற்க, அவர்க்கு 4-ஆமிடத்தில் சனி நிற்க, இலக்கினத்திலும் 6-ஆமிடத்தினும் செவ்வாயிருக்க, அவருடன்

இராகு கூட குரு, சுக்கிரன், இவர்கள் சந்திரனுக்கு 9-ஆமிடத்தி லிருக்க ஜாதகமானக் குழவி யன்றே மரணமாகுமென வறிக.

பூரணச்சந்திரனாக நிற்க அவர்க்கு 5-ஆமிடத்தில் சனியும் செவ்வாய் நிற்க 10-ஆமிடத்தில் பாம்பும் சூரியனுமிருக்க சுக்கிரன், குரு, இவர்கள் கூடாமல் 6-8-ல் நிற்க ஜாதகமான பிள்ளை யெட்டு நாளுக்கு முன்னதாகவே மரணமாகி விடுமென வறிக.

பூரணச் சந்திரனாகவிருக்க அவர்க்கு 7-ஆமிடத்தில் புதன் நிற்க, 10-ல் சனி நிற்க, 4-ல் செவ்வாய் நிற்க, சூரியன் இலக்கினத்திலிருக்க 8-ல் குரு நிற்க, ஜாதகமான மகவும் உடனே மரணமாகுமென வறிக.

தேய்பிறை சந்திரன் நின்ற விராசிக்கு ஒரு பக்கம் குரு நிற்க அவர்க்கேழாமிடத்தில் சனியும் பாம்புங்கூடி நிற்க, தன் ஸ்தானத்தில் செவ்வாய் நிற்க, தனத்திற்கு 7-ல் சுக்கிரனிருக்க பூரணச் சந்திரனுக்கு 7-ல் புதன் நிற்க, ஜாதகமானக்குழவி உடனே சாகுமென வறிக.

பாம்புடன் சந்திரன் கூட அவர்க்கு 7-ல் சனியுஞ் செவ்வாயும் நிற்க, செவ்வாயிற்கு 7-ல் சுக்கிரனும் புதனுங்கூடி நிற்க குரு, சூரியன், இவர்கள் கூடி 8-ல் நிற்க ஜாதகமானக்குழவி ஆறு மாதத்திற் சாகுமென வறிக.

சனி, சந்திரன், பாம்பு, இவர்கள் கூடி நிற்க 7-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க சூரியன், புதன், இவர்கள், குருவிற்கு 8-ல் நிற்க சுக்கிரன் சனிக்கு 8-ல் நிற்க ஜாதகமானப்பிள்ளை உடனே மரணமாகுமென வறிக.

சந்திரன் பூரணனாக விருக்க குரு, பகையாகவிருக்க அல்லது நீசமாக சந்திரன் நின்ற இராசியாதிபதியும் சனியும் சேர சுக்கிரன், அஸ்தமனமாகவிருக்க ஜாதகமானக்குழவி மரணமாகுமென வறிக.

பூரண சந்திரன் நின்ற விராசிக்கு 3-ஆமிடத்தில் நின்றேனும் சூரியன் சனி இவர்கள் நிற்க, 5-ல் செவ்வாய் நிற்க, அவர்க்கேழில் சூரியன் நிற்க 6-ல் புதன் நிற்க, 12-ல் குரு நிற்க, சந்திரனும் புதனுங்கூடி நிற்க, ஜாதகமானக் குழவி சாகுமென வறிக.

பாம்புடன் சந்திரன் நிற்க, அவர்க்கு 5-ல் சூரியன் சனி நிற்க இலக்கினத்திற் செவ்வாய் நிற்க, 6-ஆமிடத்தில் சுக்கிரனிருக்க 8-ஆமிடத்தில் குரு நிற்க, ஜாதகமான குழவி ஆறுமாதத்திற் சாகுமென வறிக.

சனியுஞ் சந்திரனும் உதையத்தினும் மீனவிராசியினும் பகை வீட்டினும் மரப்பாகவும் அஸ்தமனமாகவும் நிற்கில், மரணமாவது நிசமாகும் பகையாகிற் பொல்லாதெனவறிக.

விதியானது அற்றுப் போனவர்களுக்கு சந்திரனைப் பார்த்துச் சொல்லவேண்டும் மதியற்றவர்களுக்கு சனியைப் பார்த்துச்சொல்ல வேண்டும் சனி யற்றுப் போகுங்காலில் உதையத்தைப் பார்த்துச் சொல்ல வேண்டும் சனி, சந்திரன், உதையம் இவைகளைக் கொண்டுப் பார்க்கில் மரணந்தப்பாம லகப்படுமெனவறிக.

பாலாரிஷ்டம் முற்றிற்று.

ஜாதக பலாபலன்.

கிரகநிலை.

ஜென்ம லக்கினத்திற்கு 5-ஆமிடமாகிய புத்திர ஸ்தானத்தினும் 10-ஆமிடமாகிய கீர்த்தித் தானத்தினும் மாதுர்க்காரகனாகிய சந்திரனும் சகோதரக்காரகனாகிய அங்காரகனும் இருக்க ஜாதகன் அம்மானுக் காகாவாம் ஆயுர்க்காரகனாகிய சனி நிற்பாராகின் ஜாதகனுக் காகாவாம், சந்திரன் நிற்கில் தாயாருக்காகாவாம், இலக்கினத்திற் பிதுர்க்காரகனாகிய சூரியனிருக்க தகப்பனுக் காகாவாம், சூரியன் சந்திரன் இவ்விருவர்கள்நின்ற விராசிக்கு 7-ஆமிடத்திற் சனி செவ்வாயிவர்கள் நிற்க அவர்களை புத்திரக்காரகனாகிய குருபகவான் பாராதிருப்பாராகில் ஜாதகனுடைய தகப்பனுந் தாயாரும் மரணமாவார்களெனவறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 6-ஆமிடமாகிய சத்துரு ஸ்தானத்தில் பிதுர்க்காரகனாகிய சூரிய பகவானிருக்க அவர் நின்ற விராசிக்கு 7-ஆமிடத்தில் ஆயுர்க்காரகனாகிய சனியும், சகோதரக்காரகனாகிய செவ்வாயும் நிற்க ஜாதகமானப்பிள்ளை மரணமாகும். மேற்கண்ட ஸ்தானத்தில் சந்திரனிருக்க, சந்திரனுக்கு 7-ல் சனி செவ்வாயிவர்களிருக்க, பிறந்த பிள்ளை மரணமாகும். ஜென்மலக்கினத்தில் சனி யிருக்க, சனிக்கு 4-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க ஜாதகனுடைய தகப்பன் மரணமாகுவன். ஜென்மந்தவிர மற்ற விராசிகளில் நன்மையாகிய கிரகங்கள் நிற்க, சாதகமானப் பிள்ளை உடனே மரணமாகுவனெனவறிக.

ஜென்மலக்கினத்திற்கு 5-ஆமிடமாகிய புத்திரத்தானத்திற்கு 3-ம் இராசியில் சகோதரக்காரகனாகிய செவ்வாய் நிற்க, சாதகனுடைய பெரிய சகோதரன் மரணமாகுவன். மேற்கூறிய விராசியாகிய 3-ல் சனி செவ்வா யிவர்களிருக்கச் சாதகமானப் பிள்ளைச் சாகும். மாது ருக்காரகனாகிய சந்திரன் களத்திர ஸ்தானமாகிய 7-ஆமிடத்தில் நிற்க, ஜாதகனுடைய தாயார் மரணமாகுவள். அந்த 7-ஆமிடத்தில் சூரிய னிருக்கத் தகப்பன் மரணமாகுவன். கர்க்கடக விராசிக்கு 3-ஆம் இராசிக்கப்பால் கிரகங்கள் நிற்கினும் விரையஸ்தானமாகிய 12-ஆமி டத்தில் சுபக்கிரகங்களிருக்க ஜாதகமானப் பிள்ளை மரணமாகுமென வறிக.

ஜென்ம லக்கினத்திற்கு 6-ஆமிடமாகிய சத்துருஸ்தானத்திலும், 7-ஆமிடமாகிய களத்திரஸ்தானத்தினும், 8-ஆமிடமாகிய ஆயுர்ஸ்தா னத்தினும், 12-ஆமிடமாகிய விரையஸ்தானத்தினும், பிதுர்க்காரகனா கிய சந்திரனிருப்பானாகில் ஜாதகனுக்கு மரணஞ் சம்பவிக்கும் சந்திர னும் சூரியனுங் கூடி நிற்கில் ஜாதகனுக்கு இரண்டு கண்ணுங் குரு டாகப் போகும் இருவரில் ஒருவர் நிற்கில் ஒரு கண் குருடாகப் போ கும் சந்திரன் நின்ற விராசிக்கு 9-ஆமிடத்தில் இராகு கேது இவர் களி லெவரேனு மொருவர் நிற்க ஜாதகனுடைய மாதா மரணமாகு வள். ஆயுர்த்தானமாகிய 8-ஆமிடத்தில் சனி, செவ்வாய், இவர்க ளிருக்கச் சாதகமானப் பிள்ளை மரணமாகுமென வறிக.

பூராடம், சித்திரை, புனர்பூசம், இந்த நட்சத்திரங்களுக் குரிய விராசிகளில் சந்திரன் நிற்க, ஜென்ம லக்கினத்தில் செவ்வாய் நிற்க, ஜாதகமானவனுடைய தகப்பனுக்குத் தோஷமுண்டாம். மேற்கூறிய நட்சத்திரத்தில் இரண்டாங் காலில் சந்திரன் நிற்கில் தாய்க்குத் தோஷமுண்டாகும். 3-ம் பாதத்திலிருக்க ஜாதகமானப் பிள்ளைக்கு தோஷம்.4-ம் பாதமாகில் தாயாருடன் பிறந்த அம்மானுக்காகாவாம். 9-ஆமிடமாகிய பாக்கியஸ்தானத்தினும் 11-ஆமிடமாகிய இலாபஸ் தானத்தினும், சனி, செவ்வாய், இராகு, கேது, இவர்கள் நிற்க, மேற் கூறிய தோஷம் தப்புமென வறிக.

பிதுர்க்காரகனாகிய சூரியன் நின்ற விராசிக்கு 7-ஆமிடாராசியி லும் ஆருமிராசியிலும் உச்சக் கிரகங்கள் நிற்க, சிம்ப விராசி லக்கின மாகப் பிறந்தப்பிள்ளை இராசனாகுவன். ஐந்துக் கிரகங்கள் உச்சமாக விருக்க குரு நிற்க ஜாதகமானவன் தீர்க்காயிலுள்ள மன்னனாகுவன் நாலுக் கிரகங்களுச்சமாக விருக்க கும்ப விராசி லக்கினமாகச் சாதக

மானவன் பாராஜ சிங்கமாகுவன். இவை கிரகநிலையும் இராசிகளையும் பார்த்துச் சொல்ல வேண்டுமென வறிக.

கர்க்கடக விராசியில் குரு, சூரியன் உதையமாக விருக்க, சூரியன் மேஷ விராசியிலிருக்க, சுக்கிரன் புதனுடன் கூடி கீர்த்தி ஸ்தானமாகிய 10-ஆமிடத்திலிருக்கச் சாதகமானவன் சித்தனுகுவன். சந்திரன் ரிஷப விராசியிலிருக்க சூரியன் சிங்க விராசியிலிருக்க, குரு தனுசு விராசியிலிருக்க, சுக்கிரனுடைய விராசியில் உதையமாக வியாழனுடைய காலில் ஜாதகமானவன் அரசனுகுவனென வறிக.

மகர விராசியில் சனி யிருக்க, மேஷ விராசியில் செவ்வாயிருக்க, கடக விராசியில் சந்திரனிருக்க, துலா விராசியில் சுக்கிரனிருக்க, தனுசு விராசியில் வியாழனிருக்க, அல்லது 10-ஆமிடத்திலிருக்க, சிங்க விராசியில் சூரியனிருக்க, மிதுன விராசியில் புதனிருக்க, சாதகமானவன் தீர்க்காயுளுள்ள அரசனுகுவனென வறிக.

சூரியன், புதன், சுச்கிரன், இவர்கள் இராசி ஒன்றுக்கு ஒரு மாதம் நிற்பார்கள். சந்திரன் இராசி ஒன்றுக்கு இரண்டே கால் நாள் நிற்பன். செவ்வாய் இராசி ஒன்றுக்கு ஒண்ணறை மாதமாக நிற்பன். சனி, இராசி, ஒன்றுக்கு இரண்டரை வருடமாக நிற்பன். குரு, இராசி ஒன்றுக்கு ஒரு வருடமாக நிற்பன். இராகு, கேது, இவர்கள் இராசி ஒன்றுக்கு ஒண்ணறை வருடமாக நிற்பரென வறிக.

அற்பாயுளறியும் வகை.

உதையாதிபதியும் சுபக்கிரகங்களும் கூடி ஒரு யிராசியில் நிற்க, சந்திரனுடன் பாபக்கிரகங்கள் கூடி மற்றொரு ராசியிலிருக்க, சுபக்கிரகமும் பாபக்கிரகமும் கூடி ஒன்ருக நிற்கினும் ஜாதகனுக்குத் தீம்பானது உண்டாகி வயது ௨௫ இருபத்தைந்து வரைக்குமிருந்து மறிப்பானென வறிக.

ஜென்ம லக்கினத்திற் சுபக்கிரகங்கள் சேர்ந்து நிற்க குருவுடன் பாபர்கள் சேர்ந்திருக்க பாம்பு, சுக்கிரன் இவர்கள் தனித்தும் ஜென்மத்தினும் சனி நின்ற விராசிக்கு 7-ஆமிடத்தினுமிருக்க, ஜாதகமானவன் ஈனமடைந்தும் வயது ௨௫ இருபத்தைந்து வரைக்கு மிருந்து மறிப்பானென வறிக.

ஜென்மாதிபதியும் சனியுங்கூடி 7-ஆமிடத்தில் நிற்க, சன்மாதிபதிக்கு யெதிரோனும் சூரியனுங்கூடி 4-ஆமிடத்திலிருக்க தன்மாதி

பதி தனுதிபதி இவர்கள் சேர்ந்து செவ்வாயுடன் கூடி நிற்க, ஜாதக மானவனுக்கு வயது ஷூ பதினாறு வரைக்கு மிருந்து மறிப்பானென வறிக.

ஜென்ம லக்கினத்தில் வியாழனிருக்க, சந்திரனுடன் சனி கூடி நிற்க செவ்வாய் சூரியனுக்கு 7-ஆமிடத்தில் நிற்க, சுக்கிரன், சனி, நின்ற விராசியில் பாம்பு நிற்க, ஜாதகனுக்கு வயது ஷூ பதினாறு வரைக்கு மிருந்து மறிப்பானென வறிக.

ஜென்ம லக்கினத்திற் சனி, சந்திரன் இவர்கள் கூடி நிற்க, உதையாதிபதியும் சுக்கிரன் சூரியன், இவர்கள் 7-ஆமிடத்திலிருக்க, இலக்கினத்திற்கு 6-ஆமிடத்தில் பாம்பும் குருவுங்கூடி நிற்க, ஜாதக யானவனுக்கு வயது ஷூ பத்து வரைக்கு மிருந்து மரணமாகுவா னென வறிக.

இலக்கினத்திற்கு 9-12-ல் சந்திரனுஞ் சனியும் நிற்க, உதை யாதிபதி ரிஷபத்தினுங் கன்னியா விராசியிலிருக்க, ஜாதகமானவ னுக்கு வயது ஷூ ஏழுவரைக்கு மிருந்து மரணமடைகுவா னென வறிக.

உதைய விராசிக்கு 7-ஆமிடத்தில் குரு நிற்க, அவர்கட்கு 8-ஆமிராசியில் சனி நிற்க, சந்திரன் 10.ஆமிடத்திலிருக்க, அவர்க்கே ழில் புதன் நிற்க, 8-ல் சுக்கிரனிருக்க, சந்திரனுக்கு ஆறில் தீயர்க ளிருக்கினும் நட்பாகினும் ஜாதகமானவனுக்கு வயது ஷூ 6-5-ல் மரண மடைகுவானென வறிக.

பனிரெண்டு விராசிகளில் நின்ற கிரகங்கள் ஒன்பதில் அதி லொருக்கிரகம் 8-ஆமிடமாக நிற்க, அந்த யிராசி யின்பமற்றிருக்க ஜாதகமானவன் ஒருவரிடத்திற் மரணமாகுவன், சந்திரன் நின்ற விரா சிக்கு 8-மிராசியில் சனியிருக்க, ஐந்து வருஷத்தில் மரணமடைகு வான். சுக்கிரன் நின்ற விராசிக்கு எட்டாமிராசியில் செவ்வா யிருக்க மரணம் நேருமென வறிக.

சந்திரன் நின்ற விராசிக்கு 8-மிடத்தில் சனி நிற்க, குரு, செவ் வாயினுக்கு எட்டா மிராசியிலிருக்க, அவர்க்கெட்டில் சுக்கிரன் நிற்க, சூரியன் நின்ற விராசிக்கு எட்டில் சுக்கிரனிருக்க உதையத்திற்கு 8-ஆமிடத்தினும், புதனுக்கு ஏழா மிராசியினும், சந்திரனிருக்க, ஜாதகமானவனுக்கு வயது ஷூ எட்டுவரைக்கு மிருந்து மரணமடை குவானென வறிக.

சூரியன் நின்ற விராசிக்கு 8-ம் இராசியில் சந்திரனிருக்க, சனி உதையத்திற்கு எட்டாமிடத்தில் நிற்க, இலக்கினத்திற்கு எட்டா

மிடத்தில் வியாழனிருக்க ரிஷபத்திற்கு 7-ம் இராசியில் உதையாதிபதி நிற்க, காரியத்திற்கு எட்டாமிராசியில் சுக்கிரனிருக்க சந்திரனுக்கு ஏழில் செவ்வாயிருக்க சாதகமானவனுக்கு வயது ௺ பத்தரை வரைக்கு மிருந்து மாண மடைவானென வறிக.

செவ்வாயும் சனி நின்ற வீட்டானும் உதையத்திலிருக்க காமஞர் இருந்த வீட்டாலும் சனியுங்கலந்து நிற்க, சந்திரனும் சூரியனுங் கூடி உதையத்திலிருக்க, உதையத்திற்கு 8-ஆமிடத்தில் குரு, செவ்வாயிவர்களிருக்க, சாதகனுக்கு வயது ௺ இரண்டு வரைக்குமிருந்து மறிப்பானென வறிக.

தீர்க்காயுளறியும் வகை.

சனி யிருந்த வீட்டான் மர்பில்லாமலிருக்க, அவருடன் சுபக்கிரகங்கள் சேரில் அஷ்டமாதிபதி நட்புஸ்தானத்திலிருக்க சூரியனுக்கும் சனிக்கும் முன் பின்ஞக நின்ருேரும் உளவாக விருக்க ஜாதகமானவனுக்கு வயது வருஷம் நூறுகுமென வறிக.

அஷ்டம ஸ்தானத்தில் பாபரில்லாமல் சுபக்கிரகங்களிருக்க, சனி நட்புப்பெற்று சுகமாக விருக்க, இரண்டாமிடத்தோன் நின்ற சனி வீட்டான் சமமாக 4-ஆமிடத்திலிருக்க ஜாதகமானவனுக்கு வயது வருஷம் நூறுகுமென வறிக.

சனி நின்ற விராசிக்கு இரண்டு பக்கமும் ஆறுமிடத்தினும் சுபக்கிரகங்கள் நிற்க, நட்பாட்சியாக விருக்க, குரு நாலாமிடமாக விருக்க, ஜாதகமானவனுக்கு வயது வருஷம் நூறுகும். பூரணச் சந்திரஞக விருக்கில் இன்னமும் வயததிகமாகுமென வறிக.

இலக்கினத்திற்கு 6-8-12-ல் சுக்கிரன், குரு, சந்திரன் இவர்கள் நிற்க, சனி நின்ற விராசிக்கு 6-இராசியில் நட்பாகியக்கிரகங்களிருக்க அவர்க்குச் சமஞகச் சனி வீட்டானுமிருக்க, அதற்கு 4-ம் இராசியில் குருநிற்க, அவருடன் அஷ்டமத்தோன்கூட, ஜாதகனுக்கு வயது வருஷம் நூறுகுமென வறிக.

6-8-12-க்குடையோர் 4-மிடத்திலிருக்கினும் அல்லது சுபருடன் சேர்ந்திருக்கினும் 6-மிடத்தில் சனி நிற்கினும் இவர்களை சுபக்கிரகங்கள் பார்க்க ஜாதகன் நூறு வயதிருப்பனென வறிக.

சனிக்கு 6-8-ல் குரு, சுக்கிரன், புதன், இவர்கள் சேர்ந்து நிற்க சென்மாதிப் பதிக்கு நாலாமிராசியில் 8-ஆமிடத்தோன் கூட

அவருடன் சந்திரன் சேர ஜாதகனுக்கு வயது வருஷம் நூறுகுமென வறிக.

தீர்க்காயுளும் செல்வமும் அறியும் வகை:

அஷ்டம ஸ்தானத்தான் சனியும் கூடினும் ஆக்ஷியில் நாலு கிரகங்கள் நான்கு நிற்கினும், சந்திரனும் ஆக்ஷி பெறினும் மற்றக் கிரகங்கள் நாலுக்கு நாலாக யிராசிகளில் நிற்க, ஜாதகமானவனுக்கு வயது வுண்டாகி தரித்திரமானது விலகுமென வறிக.

சனி, புதன், சுக்கிரன், சந்திரன் நின்ற வீட்டான் உதையாதிபதி இவர்கள் கூடி நிற்க மற்றக் கிரகங்கள் அவர்க்கு 5-4-ம் இராசிகளி லிருக்கச் சாதகமானவன் செல்வமானதுப் பெற்று நூறு வயதளவும் பாக்கியத்துடன் வாழ்ந்து மறிப்பானென வறிக.

அஷ்ட மாதிபதி புதன், சுக்கிரன், சந்திரன் உதையாதிபதி இவர்கள் கூடி நிற்க அவர்கள் நின்ற மனை ஆக்ஷியாக விருக்க மற்றக் கிரகங்கள் நின்ற வீட்டிற்குச் சரியாக இருபுறமாக விருக்க ஜாதகமானவனுக்கு வயது தீர்க்கமும் செல்வமு முண்டாகுமென வறிக.

எட்டாமிடத்தில் எட்டோனிருக்க மற்ற கிரகங்கள் அவர்க்கு இருபுறமுஞ் சேர்ந்து நிற்க சனிக்கு முன் மனை அமிசமாக விருக்க ஜாதகமானவனுக்கு வயது நூறு அத்துடன் செல்வமானதுப் பெற்று வாழ்குவானென வறிக.

எட்டாமிடத்தோனும் எட்டில் நின்றோனும் இவர்களுடன் குரு, சுக்கிரன், சந்திரன், சனி இவர்கள் கூடி ஒரு விராசியிலிருக்க ஜாதகமானவனுக்கு தீர்க்கமாகி வயது நூறுடன் நீங்காதச் செல்வமானதுப் பெற்று யானை, குதிரை, முதலானதும் பெற்று வாழ்குவனென வறிக.

சனியுடன் இரண்டு கிரகங்கள் கூடி நிற்க அவர்க்கு ஐந்து ஐந்திற்கு மும்மூன்றுப் பேருக நிற்க, சாதகமானவன் வயதானது நூறும் பெற்று தனபாக்கிய முடையவனுய்ப் பூமியின்மீது வாழ்குவானென வறிக.

மூன்று கிரகங்களுடன் சனி முதல்வனுக நிற்க இரண்டு ஒன்ருக மற்றக் கிரகங்கள் நிற்க, சாதகமானவன் செல்வமானதுப் பெற்றும் வாழ்வானதுப் பெருகியும் ஆணுடன் பெண்ணும் பெற்றும் யாவரும் புகழும்படியாக அவனும் நூறு வயதளவு மிருப்பானென வறிக.

மகரம் கும்பம் இவைகளில் சனி நிற்க நீசவம்சம் பெறுதிருக்க உச்சவம்சமாக விருக்க ஜாதகமானவன் இலட்சுமி கடாக்ஷமும் செல்வமும் பெற்று நூறு வயதளவும் கீர்த்தியோடிருந்து வாழ்குவனென வறிக.

சனி உச்சமாக விருக்க சந்திரன் ஆக்ஷியாகவிருக்க குரு, சுக்கிரன் அவர்க்கு நாலாமிராசியாக விருக்க ஜாதகமானவன் செல்வமும், பால்பாக்கியமும், பெருகி வயது நூறுவரையிலு மிருந்து வாழ்குவானென வறிக.

ஆயுர்யோக பலாபலன்.

சுக்கிரனோடு பாம்பு கூடி நிற்க, மற்றோர்கள் அவரவர்கள் குறிபோல் நிற்க, ஜாதகமானவன் கீர்த்திமானாகியும் எங்குமுள்ள அரசர்கள் இவனைத் தொடர்ந்து நிற்கவும் யோக பாக்கியமுடையவனாய் வாழ்குவானென வறிக.

ஜென்மாதிபதியும் இலாபாதிபதியும் சந்திரன் நின்ற வீட்டிற்கு 9-ஆமிராசியோனும் பாம்பும், குருவும், சுக்கிரனும் நின்ற யிராசியாதிபதிகளிவர்க்கும் இலாபமாகக் கூடாமல் தனித்திருக்க ஜாதகமானவனுக்கு வயது நூறாகவும் பெற்று உலகமுழுதும் ஒரு குடைக்கீழ் ஆளுவானென வறிக.

ஆட்சி வீட்டிற்கு இலாபமாக அவரவர்கள் நிற்க, ஜாதகமானவனுக்கு காக்ஷியாகச் செல்வமானதுப் பெருகும் அதற்கு உச்சமாக விருப்பாராகில் சகலவிதமானச் செல்வமும் தழைத்து ஓங்கி வாழ்குவானென வறிக.

பாம்பு நின்ற விராசிக்கு இலாபமாகிய விராசியில் குரு நிற்க, சுக்கிரன், பாம்பு இவர்கள் 3-ஆமிடத்தில் நிற்க, பாம்புக்கு 7-ஆமிராசியில் புதன் நிற்க, ஜாதகமானவனுக்கு துர ராஜயோகமுண்டாகுமென வறிக.

சந்திரனுக்கு இலாபமாக மற்றக் கிரகங்கள் நிற்க ஒன்றாகக் கூடாமல் அவரவர்கள் இலாபமாக விருக்க ஜாதகமானவனுக்கு அமிர்தயோகமுண்டாம் செல்வமானது வளர்பிறைச் சந்திரனைப் போல் நாளுக்கு நாள் பலக்கும் கீர்த்திப் பெருகுமென வறிக.

வேத புத்திரர் உண்டாவது அறியும் வகை.

புத்திரஸ்தானமாகிய 5-ஆமிடத்தோன் ஆட்சியாகி யிருக்ரி, வியாழன் பகையில்வாமலும் பாபக்கிரகங்களைச் சேராமலும் சுக

யன் நின்ற விராசி 12-லும் சனிக்கு பக்கமாக 7-ல் நிற்க, ஜாதக மானவனுக்கு அனேக புத்திரருண்டாம்.

ஐந்தாமிடத்தில் நின்றவனும் ஐந்தாமிடத்ததிபதியும் ஐந்தாமிடத்தைப் பார்க்க வியாழன் ஆட்சியாக விருக்க பாம்பு, சூரியன், புதன், சனி, இவர்கள் 2-6-8-இந்த ஸ்தானங்களி லிருக்க ஜாதகனுக்கு வெகு புத்திரர்க ளுண்டாம்.

புத்திரஸ்தானத்தில் நன்மையாகிய சுபக்கோட்கள் நிற்க, நட்புக் கோட்களின் பக்கல் புத்திரக்காரகனாகிய குரு சேர்ந்திருக்க, சத்துருவாகியப் பாபக்கோட்கள் சரியாக நிற்காதிருக்க வியாழன் நிற்க, புத்திர ருண்டாம்.

நாலு ஆறு இந்தஸ்தானத்தில் சுபக்கோட்கள் நிற்க, வியாழன் உச்சமாட்சியாக விருக்க அல்லது 6-7-லும் இலாபஸ்தானத்திலுமிருக்க 6-12-8-ல் பாபக்கிரகங்கள் நிற்க, ஜாதகனுக்கு மகிட்சியாகியப் புத்திரருண்டாம்.

வியாழன் பலன் பெற்று நிற்க, அவர்க்கைந்துக் குடையோன் நட்பாக விருக்க, 5-ஆமிடத்தை சத்துருக் கோட்களாகிய பாபர்கள் பாராதிருக்க பாபக்கிரகங்கள் நட்பாட்சியுச்சமாக விருக்க ஜாதகமானவனுக்கு தீர்க்க வயதுலடய புத்திரர்களுண்டாம்.

வியாழன் பலவீன மில்லாமல் கோணத்திற்கு நடுவாக நிற்க, ஐந்தாமிடத்தோன் இலாபஸ்தானமேறிநிற்க, பாபக்கிரகங்களாகிய செவ்வாய், சனி, 6-8-லிருக்க ஐந்தாமிடத்தில் சுபக்கிரகங்க ளிருக்க, ஜாதகனுக்குப் புத்திரருண்டாம்.

வியாழன் சந்திரனாக விருக்க, அவர்க்குப் பகையில்லாதிருக்க செவ்வாய், சூரியன், பாம்பு, சனி இவர்கள் சுபருடன் கூடாமல் 10-7-4-2-இந்த ஸ்தானங்களிலிருக்க, ஜாதகனுக்குப் புத்திருண்டாகி வாழ்குவன்.

ஐந்தாமிடத்தோன் ஐந்தாமிடத்தில் நின்றோன் வியாழன் இவர்களிருக்கு மிடத்தில் பாபர்கள் சேராமலும் பாராமலுமிருக்க, அஸ்தமனமில்லாமல் முன் பின்னாக பாபர் நிற்காதிருக்க, ஜாதகனுக்கு அனேக புத்திரர்களுண்டாம்.

பத்தாமிடத்திற் குடையோர்க்கும் ஐந்தாமிடத்திற் குடையோர்க்கும் ஏழுநான்கிற் குடையோன் ஐந்தாமிடத்திலிருக்க 10-ஆமிடத்தில் ஒரு நட்புக்கோள் நிற்க, சனிக்கு 7-ல் ஐந்தாமிடத்

தோனிருந்துப் பார்வையில்லாதிருக்க பாபர்கள் ஒதுங்கி நிற்க ஐந்தாமிடத்தைச் சுபர்கள் பார்க்க ஜாதகனுக்கு வெகு புத்திருண்டாம்.

வியாழன் ஐந்தாமிடத்தைப் பார்க்காதிருக்க, ஐந்தாமிடத்திற்குடையவன் சனிக்கெதிரில்லாதிருக்க, ஐந்தாமிடத்தி லிருக்காமல் இருபக்கமும் சூரியன் செவ்வாய் இல்லாதிருக்க, 7-5-ல் யேறியும் நிற்காமலும் சந்திரனுக்கு எதிரில்லாமலும் 5-7-ல் சனியில்லாமலுமிருக்க, ஜாதகனுக்கு வருங்குழவி நில்லாதெனவறிய வேண்டும்.

மேஷவிராசியில் செவ்வாய் நிற்க, அதுவே ஐந்தாமிடமாகவிருக்க, வியாழன் மீனவிராசியிலிருக்க, ஜாதகனுக்கு வெகு புத்திருண்டாய் கெடிதியில்லாதிருக்கும் இப்பலன் 7-ஆமிடத்திற் சனியில்லாதிருக்க வேண்டுமெனவறிக.

விருச்சிக விராசியில் செவ்வாய் நிற்க, அது ஜென்மத்திற் கைந்தாமிடமாக வியாழன் தனுசு விராசியிலிருக்க முக்கோணத்துக்குப் பின்பக்கம் சனி இல்லாதிருக்க ஜாதகனுக்குப் புத்திர ருண்டாம்.

புதன் ஆட்சியாகி ஐந்தாமிடத்திலிருக்க, வியாழன் மேஷ விராசியிலிருக்க, சனி மிதுன விராசியிலிருக்க, அதற்குச் சந்தியாகி புதன் சத்துரு வில்லாதிருக்கச் சாதகமானவனுக்கு திரளாகப் புத்திரவிருத்தியுண்டாகி வாழ்வன்.

ஐந்தாமிடத்தில் நின்றக் கோள் பெண்ணாக அவ்விராசியாதிபதி ஆண்கிரகமாக ஜென்மாதிபதி ஆண்கிரகமாகி சந்திரன் நின்ற இராசியாதிபதி பெண்கிரகமாக கேந்திர கோணமேறி வியாழனுக்கு 7-மிராசியிலிருக்க ஜாதகனுக்கு ஆணும் பெண்ணும் தீர்க்காயுளுடன் பிறக்குமெனவறிக.

சந்திரன் நின்ற விராசி புருஷவிராசியாக குரு நின்ற விராசிக்கு ஐந்தாம் இராசியோன் பெண்ணாக கேந்திரமேறி நிற்க ஜென்மவிராசி பெண்ணாக அதில் ஐந்தாமிடத்தோன் நிற்க, ஜாதகனுக்கு ஆணும் பெண்ணுமாக வேண புத்திருண்டாகும்.

சுக்கிரன் ஐந்தாமிடத்தில் நிற்க, அந்த விராசி வியாழனுடைய ஆக்ஷியாக வியாழன் நின்ற விராசி சந்திரன் வீடாக ஐந்தாமிடத்தோனின்ற மனை சுக்கிரன் வீடாக ஜாதகனுக்கு பெண் சந்ததி அதிகமுண்டாம்.

சந்திரன் ஐந்தாமிடத்தில் நிற்க, அந்த விராசி சுக்கிரன் வீடாக ஐந்தாமிடத்தோனும் சுக்கிரனும் நடுவாகக் கூடி நிற்க வியாழன் கடகத்திலிருக்க கன்னியா விராசியும் மீனவிராசியும் அங்கிசமாக ஜாதகனுக்கும் பெண் சந்ததி யுண்டாம்.

வியாழனும் ஐந்தாமிடத்தோனும் நின்ற விராசியில் புதன் கூடி நிற்க, நின்றவனுக்கு 7-ம் இராசியில் நின்றோன் பெண்ணங்கிசமாக விருக்க, அவரை குரு பாராதிருக்க மற்றத் தீக்கோட்களும் பாராமவிருக்க ஜாதகனுக்கு யெந்நாளும் பெண்சந்ததி யுண்டாம்.

மலடாவதறியும் வகை.

உதையத்திற்கு ஐந்தாமிடத்தில் சனி நிற்க 3-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க 7-ஆமிடத்தில் வியாழனிருக்க அவருடன் ஐந்தாமிடத்தோனும் செவ்வாயுஞ்சேர மதியுடன் பாம்பு சேர்ந்து சனிக்கு ஏழாம் இராசியிலிருக்க ஜாதகமானவன் மலடாகுவன்.

பத்தாமிடத்தில் சனி, செவ்வாய் நிற்க ஐந்தாமிடத்தில் சூரியனிருக்கப் பார்க்க சனியும் இலாபாதிபதியும் உதையத்தோனுங் கூடி நிற்க, ஐந்தாமிடத்தோன் நீசமாக ஜாதகன் உடன் பிறப்பில்லாமல் மலடாகுவான்.

ஐந்தாமிடமும் ஐந்தாமிடத்தோன் நின்ற வீடும் வியாழனுக்குப் பார்வையாகில் ஐந்தாமிடத்திற்கு 7-மிராசியில் சனி, செவ்வாய், சேர்ந்து நிற்க, இலக்கினாதிபதியை சூரியன் பார்க்கக் கூட ஜாதகன் யெந்நாளும் மலடாக விருப்பானென வறிக.

6-8-க்குடையோர் சேர்ந்து ஐந்தாமிடத்திலிருக்க, சூரியன் நீசமாகவிருக்க, வியாழனும் ஐந்தாமிடத்தோனுஞ் சேர்ந்திருக்க, உதையத்தில் சனியுங் குளிகனுங்கூடி நிற்க, 6-8-ல் சந்திரன், செவ்வாய், இவர்கள் சேர்ந்து நிற்க, ஜாதகமானவன் மலடாக விருப்பானென வறிக.

6-க்குடையவன் 8-ஆமிடத்திலிருக்க அவருடன் சூரியன் கூட 3-2-ல் 8-மிடத்தோனும் செவ்வாயும் சேர்ந்து நிற்க, குரு, நீசமடைந்திருக்க உதையத்தில் சனி நிற்க, அவருடன் பாம்பும், சந்திரனுங் கூடி நிற்க, ஜாதகமானவன் மலடாகுமென வறிக.

பத்தாமிடத்தோன் பாபியாகியும் சுபக்கிரகங்கள் நீசமாகவிருக்க 5-ஆமிடத்தில் உதையாதிபதியும் சுக்கிரனும் சந்திரனுங் கூடி நிற்க, 5-ஆமிடத்திற்கு 7-ஆமிடத்தில் பாம்பு நிற்க, 6-ஆமிடம் 5-

ஆமிடம் உதையமாக ஜாதகமானவனுக்குப் புத்திரரேயில்லையாமென வறிக.

சனி 5-ஆமிடத்திலிருக்க சந்திரனுடன் பாபிகள் சேர 5-ஆமிடத்தோன் நட்பாக குருவுடன் பாபிகள் கூட உதையத்தில் கேதுவிருக்க ஜாதகமானவனுக்கு புத்திரர் உண்டாகி நசித்துப் போகுமென வறிக.

5-ஆமிடத்தோன் பாபர்களுடன் சேர 5-ஆமிடத்தில் சுபர்களிருக்க, குருவும் பாபர்களுங்கூடி நடுவாகவிருக்க, சந்திரன் செவ்வாயுடன் கூடிநிற்க, ஜாதகனுக்குப் பிறக்கும்படியானப் பிள்ளைகள் மடிந்துபோமென வறிக.

5-ஆமிடத்தில் பாம்பு நிற்க, அவர்க்கு 4-5-ல் சனி செவ்வாய் இவர்களிருக்க தனஸ்தானத்தில் குரு நிற்க, உதையத்தில் சந்திரன் பலன் குறைந்து நிற்க ஜாதகமானவனுக்குப் பிறக்கும் பிள்ளைகள் நாசமடைந்துப் போகுமென வறிக.

6-4-ல் சூரியன் சனி நிற்க, அவர்க்கு 4-ல் குரு செவ்வாய், இவர்களிருக்க 4-ல் 5-ஆமிடத்தோன் நிற்க, குருவிற்கு 4-6-ஆமிடமாகவும் உதையத்தினும் சுபக்கிரகங்கள் நிற்க ஜாதகமானவனுக்குப் பிள்ளைப் பிறந்தும் மாணமாகுமென வறிக.

உதையத்தினும் 3-ஆமிடத்தினும் சுக்கிரனிருக்க சூரியன், பலவீனமாக குரு சுபஸ்தானங்களிருக்க சூரியன், சனி, செவ்வாய் இவர்கள் உறவாகவிருக்கச் சாதகமானவனுக்கு ஆணும் பெண்ணும் அடுக்காகப் பிறந்தும் நில்லாமல் மாணமாகப் போய்விடுமென வறிக.

ஜென்மத்தில் பாபக்கோட்கள் நிற்க, குருவுடன் தீயோர்கள் கூட கர்மத்தானத்தில் பகைப்பெற்ற கோட்கள் நிற்க, சுபர்கள் 6-8-ல் நிற்க தர்மஸ்தானத்தில் பாம்பு நிற்க, ஜாதகமானவனுக்குப் பிறந்த பிள்ளை உடனே மரணமாகுமென வறிக.

பூரணச் சந்திரனோடு சுபக்கிரகங்கள் மேலாக விருக்கினும் 5-ஆமிடத்தோனும் குருவும் மூடமாக சனி, செவ்வாய், குரு இவர்கள் ஐந்தாமிடத்தில் நிற்க ஜாதகனுக்குப் பிறக்குங் குழவியானது நாசமாகுமென வறிக.

சுபக் கோட்களும் பாபக்கோட்களும் கலந்து நிற்க, அவருடன் குருவுங் கலக்க, 5-ஆமிடத்தோனும் பாபக்கோளாகி பலன் பெற்றிருக்க, ஜாதகமானவனுக்குப் பிறக்கும் பிள்ளை கொஞ்ச நாள் கூட நில்லாமல் மறித்துப் போகுமென வறிக.

இலக்கினத்தில் சந்திரனிருக்க 5-ஆமிடத்தில் குரு நிற்க சுபக்கிரகங்கள் பார்வை யில்லாதிருக்க, பாபர்களே மிகுத்திருக்க, ஜாதகனுக்குப் புத்திரரில்லையாமென வறிக.

குருவும் சந்திரனுங் கூடி நிற்க, அவரை வேறொரு கிரகங்களும் பாராதிருக்க, 5-ஆமிடத்தில் நிற்க, ஜாதகனுக்குப் புத்திரநாசமாகும் இவை கிரகவலி வறிந்து சொல்லவேண்டும்.

சகோதரர்கள் அறியும் வகை.

3-ஆமிடத்தில் பாபர்கள் நிற்க, அவர்க்கு முன் பின்னாக நின்றோர் அஸ்தமிக்க, 9-ஆமிடத்தில் சனி நிற்க, அவர்க்கு 4-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க, சுபக்கிரகங்களில்லாமல் பகையாகி நிற்க, ஜாதகனுக்குச் சகோதர மில்லையாமென வறிக.

இலக்கினத்தினும் 2-ஆமிடத்தினும் செவ்வாய் இராகு சனி இவர்கள் நிற்க, உதையாதிபதியும் சனியுங்கூடி நிற்க, உதையாதிபதியும் பாம்புங் கலந்துநிற்க, ஜாதகமானவனுக்குச் சகோதரமின்றி ஒண்டியாகத் திரிகுவானென வறிக.

வியாழன் 8-ஆமிடத்தில் நிற்க, செவ்வாயுஞ் சனியுங்கூட சூரியனுக்கு ஆக்ஷியான தானத்தில் குருவும் 3-ஆமிடத்தோனுங் கூடவும் பாம்பு கூடி 6-ஆமிடத்திலிருக்கவும் ஜாதகமானவன் சகோதர மின்றி தனியாக விருப்பானென வறிக.

ஆறாமிடத்தோன் 3-ஆமிடத்தில் நிற்க, சந்திரனுடன் பாம்பு, புதன், 3-ஆமிடத்தோன் இவர்கள் கூடி 8-ஆமிடத்திலிருக்க சனிக்கு 7-ம் இராசியில் செவ்வாயும் கரும்பாம்புங் கூடி நிற்க ஜாதகமானவனுக்குத் துணைவரில்லையென வறிக.

சுக்கிரனுடன்கூடிச் சூரியன் 3-ஆமிடத்திலிருக்க, 5-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க, அவர்க்கு எ-ல் சந்திரனிருக்க உதையத்தில் பாம்புவிருக்க, சனியுடன் 3-ஆமிடத்தோன் சேர்ந்திருக்க ஜாதகமானவனுக்கு சகோதரர்கள் இல்லையாமென வறிக.

மூன்றாமிடத்தில் பாபர்கள் நிற்க, அவருடன் சந்திரன் கூட அல்லது எதிராக விருக்க, சந்திரனுக்கு 7-ல் சனி நிற்க, அவர்க்கு கேழில் குருநிற்க, குருவும் சந்திரனும் 4-ஆமிடத்திலிருக்க சூரியனும் 3-மிடத்தோனுங் கூடி நிற்க, ஜாதகமானவனுக்குச் சகோதரர்கள் இல்லையாமென வறிக.

சனியும் செவ்வாயுங் கூடி உதையம் 3-ஆமிடம் இவைகளிவிருக்க, சூரியனுடன் 3-ஆமிடத்தோனும் சுபரும் பாராதிருக்க,

பாம்பும் சந்திரனும் 4-மிடத்திலிருக்க, ஜாதகமானவனுக்குப் பின்பு புத்திரரில்லையாமென வறிக.

3-ஆமிடத்தில் பாபர்களிருக்க், செவ்வாய் நீசமாக 3-ஆமிடத்தோனும் பாபரும் இருபுறமுமிருக்க பாம்பு சனி, சூரியன் இவர்கள் சந்திரனுக்கு 4-ம் இராசியிலிருக்க ஜாதகனுக்குச் சகோதர மென்பதே யில்லையாமென வறிக.

செவ்வாய்க்கு 4-ம் இராசியில் குரு நிற்க, புதனுக்கு 7-ல்-2-ஆமிடத்தோனிருக்க கர்மஸ்தானத்திற்கு 3-4-லும் சனிக்கு 7-ல் சுக்கிரனிருக்க மூன்று கோட்களுக்கு நடு மூன்றுகவும் 3-ல் சூரியன், பாம்பு, நிற்க, சந்திரனுக்கு 4-ல் செவ்வாயாக விருக்க, ஜாதகனுக்குச் சகோதர முண்டாமென வறிக.

ஆறுமிடத்தில் சுபக்கிரகங்களிருக்க அதற்கு அதிபதி அதிலிருக்க, அவரை பாபர்கள் பாராதிருக்க, செவ்வாய் ஆட்சியாக 2-ஆமிடத்தில் வியாழன் நிற்க, அவர்க்கு 4-ல் சந்திரனிருக்க, ஜாதகனுக்கு சகோதரம் மிகுதியாக உண்டாகுமென வறிக.

இரண்டாமிடத்தோன் ஆட்சியாக அவருடன் குரு சேர்ந்திருக்க, அவரைப் பாபர்கள் பாராதிருக்க, 9-2-ல் செவ்வாயுஞ் சுக்கிரனும் நிற்க, ஜாதகனுக்குச் சகோதரர்கள் வீரியமாக உண்டாகுமென வறிக.

4-ஆமிடத்தோன் உச்சமாக 5-ஆமிடத்தோன் ஆக்ஷியாக செவ்வாய், புதன்,குரு, இவர்கள் கூடிநிற்க 3-ஆமிடத்தில் சந்திரனிருக்க, 12-ல் சூரியன் சனி இவர்களிருக்க, ஜாதகனுக்குச் சகோதரர்கள் திரளாக உண்டாமென வறிக.

9-ஆமிடத்தில் வியாழன் ஒருவனுகை விருக்க சந்திரன் 6-ஆமிடத்திலிருக்க, ஆறுமிடத்தோன் இலாபத்திலிருக்க, பாபர்கள் நீசமடைந்திருக்க சுக்கிரன் உதையத்திலிருக்க ஜாதகனுக்குச் சகோதரர் அனேகம் பேருண்டாமென வறிக.

3-ஆமிடத்தில் செவ்வாயுமிருக்க சுபர்களும் பார்க்க அல்லது கூடி நிற்க, ஜென்மாதிபதியமாகப் பாபர்களிருக்க ஜாதகனுக்குப் பின் வேண்டிய சகோதரங்களுண்டாகுபென வறிக.

3-ஆமிடத்தில் செவ்வாயிருக்க, அவர்க்கு 7-ல் செவ்வாயிருக்க சனி,3-மிடத்திலிருக்க, சூரியன் 7-ஆமிடத்திலிருக்க, சனியும் பாம்பு,

மாக ஜாதகமானவனுக்குச் சகோதாம் பின்பு இல்லையா மென வறிக.

3-ஆமிடத்தில் செவ்வாயுஞ் சனிநிற்க ஜாதகனுக்குப் பின் சகோதாம் பிறந்து இறந்துபோகும். சுபர் பாராதிருக்கில் வித்துடன் அழிந்துபோகும். சூரியனும் 3-ஆமிடத்தோனும் சேர்ந்துநிற்க, இப் பலத்தில் ஒருவரிடத்தில் காட்டுமென வறிக.

3-ஆமிடத்தில் குருவுஞ் சந்திரனுங்கூடி நிற்க இவர்களை நல்லவரெனச் சொல்லப்போகாது சுபக்கிரகமென்று நம்புவதுமாகாது ஜாதகனுக்குச் சகோதாம் மோசமாகுமென வறிக.

மாதுருபலன் அறியும் வகை.

உதையத்தில் சுபக்கிரகங்களிருக்க, சுபக்கிரகங்களோடு 4-ஆமிடத்தில் சந்திரனிருக்க சூரியன், சனி, செவ்வாய் இவர்கள் பாராதிருக்க, குரு, 4-ஆமிடத்திலிருக்க பாம்பு சந்திரனைப் பாராதிருக்க ஜாதகனுடைய தாய்க்கு தீர்க்காயுளுண்டாம்.

10-4-ல் பாபர்களில்லாமல் சுபக்கிரகங்களிருக்க, 4-ஆமிடத்தோன் பாக்கியத்திலிருக்க, அவருடன் வியாழன் கூட 4-12-ல் இருந்தவன் ஆக்ஷிப்பெற்றிருக்க, ஜாதகனுடையத் தாயார் தீர்க்கமாக விருப்பாள்.

ரிஷபத்திலும் 4-ஆமிடத்திலுமிருக்க, அவரை சனி செவ்வாய் பாராதிருக்க, குரு 7-ஆமிடத்திலிருக்க சுக்கிரன் 4-ஆமிடத்திலிருக்க, உச்சமாகி சந்திரன் உதையத்திலிருக்க, ஜாதகனுடைய தாயார் தீர்க்காயுளுடன் நூறுவயதிருப்பாள்.

உதையாதிபதி 4-7-10-க்குடைய யிவர்கள் திரிகோணமேறி நிற்க, ஆ௺வ கேந்திரமாக ஜாதகனுடைய தாயார் தீர்க்க வயதுடையவளாகும். சந்திரன் 2-ஆமிடத்திலிருக்க, அவரை செவ்வாய் சனி சூரியன் இவர்கள் பாராதிருக்க தீர்க்க வயதாகும்.

சந்திரன் பெருமையாகி நிற்க, அவரை மற்ற தீக்கோட்கள் பாராமலிருக்க 4-ஆமிடத்தில் குரு நிற்க, அவரைச் சத்துருக்கிரகம் பாராமலிருக்க, இவர்கள் கேந்திரத்திலும் 4-ஆமிடத்தினுமிருக்க, ஜாதகனுடைய தாயார் நூறுவயதளவு மிருப்பாள்.

4-க்குடையோன் சந்திரன்நின்ற விராசியாதிபதி 7-ஆமிடத்தோனும் கூடிநிற்க, 7-ஆமிடத்தில் சுபர்களிருக்க அவரை சூரியன் செவ்வாய்ப் பாராதிருக்க 9-6-8-ல் நிற்க ஜாதகனுடையத் தாய்க்கு தீர்க்க வயதுண்டாம்.

4-ஆமிடத்தினும், நாலாமிடத்திற்கு 4-ஆமிடத்தினும், சுபக்கிரகங்களில்லாதிருக்க, 4-ஆமிடத்தோனும் 7-ஆமிடத்தோனும் நீசமாகியிருக்க, சந்திரன் மீனவிராசியிலிருக்க ஜாதகமானவனுடைய தாயார் பிழைப்பது அரிதாகும்.

10-ஆமிடத்தில் சனி, செவ்வாய், பாம்பு இவர்கள் நிற்க, 4-7-க்குடையோனும் நீசமாக யிருக்க, சுபக்கிரகங்கள் அஸ்தமனமாக விருக்க, சீரண சந்திரனாக விருக்க ஜாதகனுடைய தாயார் மரணமாகுவள்.

சந்திரன் 4-ஆமிடமாக நிற்க அவர்க்கு 4-ல் சூரியனிருக்க, உதையத்தில் சனி யிருக்க, இவர்களுடன் சுபர்கள் கூடாதிருக்க குரு-98-ல் நிற்க ஜாதகமானவனுடைய தாயார் மரணமாகி விடுவாள்.

4-ஆமிடத்தினும் 7-மிடத்தினும் பாபர்களிருக்க,சுபக்கிரகங்கள் நீசமாகவிருக்க, சனியுடன் சந்திரன் கூடி அஸ்தமனமாக விருக்க, 4-ஆமிடத்தில் குரு நிற்க, சூரியன் உதையத்திலிருக்க, ஜாதகன் வந்த நாளே தாயார் மரணமாகுவாளென வறிக.

குரு, சந்திரன் இவர்கள் 4-ஆமிடத்தில் கூடியிருக்க, ஜாதகனுடைய தாயாருக்கு ஆகாவாம் அத்துடன் வங்கிசம் நாசமாகும். சுபக்கிரகங்கள் பாராதிருப்பாராகில் கருவுடனே மாதா மரணமாகுவள், இக்குறி தப்பாதென வறிக.

செவ்வாய் 4-ஆமிடத்திலிருக்க, அவரைச் சுபக்கிரகங்கள் பாராதிருக்க 4-மிடத்தில் சந்திரனிருக்க அவர்க்கு 4-ல் சூரியனிருக்க, சனி உதையத்திலிருக்க, ஜாதகமரனக் குழவியுடன் தாயாரும் மரணமாகுவாளென வறிக.

மூன்றுமிடத்தோனும் 8-ஆமிடத்தோனுங் கூடி 4-மிடத்தில் நிற்க, 4-ஆமிடத்தோன் 6-8-12-லிருக்க, இவர்க்கு 6-8-ல் பாம்பும் சந்திரனுங்கூடி நிற்க, சூரியன் உதையத்திலிருக்க ஜாதகமானவனுடைய தாயார் மரணமடைவாளென வறிக.

செவ்வாயும் சனியுங்கூடி 4-ஆமிடத்தில் நிற்க, சந்திரன் நீசமாகவிருக்க, க்ஷீணமாக அவரை சுபர்கள் பாராதிருக்க, ஜாதகனுடைய தாயார் மரணமாகுவள்.

சூரியன் 4-ஆமிடத்திலிருக்க, 7-ஆமிடத்தில் சந்திரனும் சனியுங் கூடி 4-ஆமிடத்திலிருக்க, 7-ஆமிடத்தில் செவ்வாய். பாம்பு, நிற்க, புதன் உதையத்திலிருக்க, சுபர்கள் நட்பில்லாதிருக்க, சுபக்கிரகங்

கள் பார்வையில்லாதிருக்க ஜாதகமானவனுடைய தாய் அன்று இரவிற்றுனே மரணமாகி விடுவள்.

ச-மிடத்தில் தீயோர்களிருக்க, அவரைச் சுக்கிரன், குரு, இவர்கள் பார்க்க ஜாதகனுடைய தாயார் சிறு நோக்காடாக விருப்பாள், 5-6-ல் நிற்க, தாய் மரணமாவாள். சுபர்களின் பார்வை யுண்டாகில் எட்டு வருடம் வரைக்கும் தாயாரிருந்துப் பின்பு மரணமடைகுவாள்.

சுபரும் பாபிகளுங்கூடி 4-மிடத்திலிருக்க, சந்திரனுடன் செவ்வாய் கூடிநிற்க, 4-ஆமிடத்தோனும் பாம்புங்கூடிநிற்க, இவர்களுடன் கூடாமல் உதையாதிபதியிருக்க, ஜாதகமானவனுடைய தாயார் மரணமாகுவள்.

விருத்தம்

சுத்தமும் பாபிகூடிச் சூரியனுடனே யில்லா
பத்து முன்னான்குமேழில் பணிமதியொரு வனில்லா
அத்தமுந்நான்கு நான்கோ ணுட்சியில்லாமலில்லா
நித்தநுங்கன்னியாகி நெடுங்கால மிருப்பாளன்னே.

பிதுர்ப்பலன் அறியும் வகை

9-மிடத்திற்கு 9-ஆமிடத்தினும் 5-ஆமிடத்தினும் குருநிற்க அத்தானுதிபதியோடு சந்திரன் கூடப்பார்க்க, கிரணன் ஆக்ஷியாக விருக்க, இலாபஸ்தானமேற, ஜாதகமானவனுடைய தகப்பன் நூறு வயதிருப்பன்.

சூரியன் உச்சமாகி நிற்க கோணுதிபதியும் ஆக்ஷியாக விருக்க, கோணத்தில் சந்திரனுங் குருவுமிருக்க பாம்பு, செவ்வாய், சனி, புதன், இவர்கள் 6-8-12-ல் நிற்க, ஜாதகனுடைய தகப்பன் திரவியவானுமாய் தீர்க்காயுளுடன் இருந்து வாழ்குவான்.

5-ஆமிடத்தோனும் 9-ஆமிடத்தோனும் உச்சமாகவிருக்க, சூரியன் நட்பாக விருக்க, 9-ஆமிடத் ததிபன் குரு, சுக்திரன், இவர்கள் மேற்கண்டவர்களுக்கு 4-7-ல் நிற்க, சனி சூரியனுக்கு 5-7-ல் நிற்க, சந்திரன் திரிகோணத்திலிருக்க, ஜாதகனுடைய தகப்பனுக்குத் தீர்க்காயுளுண்டாம்.

எட்டில் நின்றவனையும் 8-ஆமிடத்ததிபனையும் சூரியனையும் சுபக்கிரகங்கள் பார்க்க, சனி, செவ்வாய், பாம்பு, இவர்கள் 9-8-ல் நிற்க, உதையத்தில் சுக்கிரனும் புதனும் நிற்க, ஜாதகனுடைய தகப்பனுக்குப் பாக்கிய மழியாம லிருக்குமென வறிக.

குரு பலவானாக விருக்க, அவர்க்கு 5.9-ல் குரு நிற்க, சூரிய னுடன் புதன், சுக்கிரன் கூடிநிற்க, சனி, செவ்வாய் பாம்பு, இவர் கள் கூடி 4-7-ல் இல்லாதிருக்க ஜாதகனுடைய தகப்பனுக்கு ஆயுள் தீர்க்க முண்டாமென வறிக.

4-ஆமிடத்தில் குரு, சந்திரனிருக்க, 7-ஆமிடத்தில் சூரியனிரு க்க, சூரியனுக்கு இருபக்கமாக புதனும் சுக்கிரனும்நிற்க, அவர்களைப் பாபர்கள் பாராதிருக்க, ஜாதகனுடைய தகப்பன் யோகவானாய்ப் பெருஞ் செல்வம் பெற்று வாழ்குவன்.

சூரியனுடன் புதன் கூடிநிற்க சனி, செவ்வாய், 4-ஆமிடமன்றி யிருக்க, 9-ஆமிடத்தோன் சந்திரன் இவர்கள் வியாழனுக்கு 4-7-ல் நிற்க, சுக்கிரனுக்கு 4-5-ல் நிற்கினும் ஜாதகனுடைய தகப்பனுக்கு யோகமுண்டாம்.

சுக்கிரனும் குருவும் உதையத்திலிருக்க, மறவில்லாமல் சூரி யன் இலாபத்திலிருக்க, 6-ஆமிடத்தோன் சந்திரனுடைய வீட்டி லிருக்க, சந்திரன் உதையத்திலிருக்க, அவரைப் பாபர்கள் பாரா திருக்க, ஜாதகனுடைய தகப்பனுக்கு அதியோகமும் தீர்க்காயுளு முண்டாம்.

9-ஆமிடத்தில் பாபர்களின்றி சுபர்களிருக்கப் பார்க்க தனத்தில் நல்லோர்கள் கூடி நிற்க, மிருக வாகனமுடையோன் கன்னியா விராசி யிலிருக்க, ஜாதகமானவனுடையத் தகப்பன் தீர்க்கமாக வயது நூருக விருப்பான்.

குரு நீசமாக 5-9-ல் நிற்க, சனியும் அவர் நின்ற மனையோனும் கூடி நிற்க, அவரை புதனும் சுக்கிரனும் பாராதிருக்க, பாம்பு, சூரிய னுக்கு 7-ல் நிற்க, ஜாதகமானவன் பிறக்குமுன்னே பிதா மரணமாகி விடுவன்.

குரு 8-ஆமிடத்திலிருக்க, சூரியன் 12-ல் நிற்க,அவருடன் சனி கூட செவ்வாயும் 9-ஆமிடத்தோனுங்கூடிநிற்க, 9-ஆமிடத்தில் பாம்பு நிற்க. சூரியனுக்கு 7-ல் சந்திரனிருக்க, ஜாதகன் பிறவாதற்கு முன் னமே பிதா மரணமாகிவிடுவானென வறிக.

சுக்கிரன் அஸ்தமனமாக குரு நீசமாக விருக்க, அவர்க்கு 7-ல் செவ்வாய், புதன் நிற்க, சூரியனும் 9-ஆமிடத்தில் பாம்பு நிற்க, சூரிய னும் 9-ஆமிடத்தோனும் 4 - ஆமிடத்திலிருக்க ஜாதகமானவன் பிறக்குமுன்னே அவன் பிதா மரணமாகுவானென வறிக.

களத்திர பலன் அறியும் வகை

சனிக்கு 7-ல் சுக்கிரனிருக்க, அவன் நின்ற விராசியாதிபதி நீசமாக உதையத்தில் சந்திரனிருக்க, அந்த விராசிக்கெதிரில் புதன் நிற்க, 7-க்குடையவன் செவ்வாய்க்கும் சூரியனுக்கும் நாலாமிடமாக நிற்க, ஜாதகனுக்கு களத்திரம் நாசமாகுமென வறிக.

குரு மூடமாகி நிற்க, செவ்வாய் 7-ல் நிற்க, சூரியனுடன் ஏழாமிடத்தோன் கூடிநிற்க, பாம்புக்கு நாலாமிடமாக சுக்கிரனிருக்க, சனி கூட நாலாமிடத்திலிருக்க, ஜாதகமானவனுக்கு களத்திரமிறந்துபோமென வறிக.

சனியும் செவ்வாயுங்கூடி 7-ஆமிடத்திலிருக்க, சூரியன், சுக்கிரன் கூடி நிற்க, 7க்குடையவன் 12-ஆமிடத்திலிருக்க ஜாதகனுக்கு உண்டாகியக் களத்திரம் நாசமடைந்து போகுமென வறிக.

குருவும் சந்திரனுங்கூடி 7-ஆமிடத்தில் நிற்க, அவர்களைச் சுபரென்று சொல்லப்போகாது ஜாதகனுடைய களத்திர ஹானியும் வங்கிச நாசமுமாகும்.

சுக்கிரன் மீனவிராசியிலிருக்க, வியாழன் ஏழுக்கு ஏழாகவிருக்க, பாம்பு, சனி, இவர்கள் 2-4-ல் நிற்க உதையத்தில் செவ்வாய் நிற்க, 7-ல் சூரியனிருக்க, ஜாதகனுடையத் துணைவி நாசவடைகுவளென வறிக.

சுக்கிரனும் 7-க்குடையோனும் சுகமாகவிருக்க, இவர்களுடன் நல்லோர் கூடிப் பார்க்க அவருடன் பாபர்கள் கூடிப் பார்வையில்லாதிருக்க ஜாதகனுடைய மனையாள் பங்கமில்லாதப் பதிவிரதையாகவிருப்பாள்.

7-ஆமிடத்தில் நின்ற சுக்கிரனோடு யிருப்பவர்கள் சுபர்க்காளாகவிருக்க, அவரைப் பாபர்கள் பாராதிருக்க, ஜாதகனுடைய களத்திரம் வாழ்வானது பெருகியும் குடும்பத்திற்கு லட்சுமி போலுமிருப்பாள்.

தனஸ்தானாதிபதியும் 7-க்குடையோனும் நட்பாகவிருக்க குரு, சுக்கிரன் புதன் இவர்கள் 4-7-ல் இருக்க, அவரைப் பாபர்கள் பாராதிருக்க, 7-ல் குரு விருக்க, சந்திரன் உதையத்திலிருக்க, ஜாதகமானவனுக்கு மேகம்போல் களத்திரமானது கலந்து வாழ்ந்திருக்குமென மேலோர் கூறுகின்றனர்.

ஸ்திரீபுருஷ ஜாதகத்திறவுகோல்

முற்றிற்று.

கடவுள் துணை.

இராசி ஆரூட சாஸ்திரம்

மீனம் பங்குனி	மேஷம் சித்திரை	ரிஷபம் வைகாசி	மிதுனம் ஆனி
கும்பம் மாசி	இராசி மாதச் சக்கரம்		கடகம் ஆடி
மகரம் தை			சிங்கம் ஆவணி
தனுசு மார்கழி	விருச்சிகம் கார்த்திகை	துலாம் ஐப்பிசி	கன்னி புரட்டாசி

ஆருடம் பார்க்கும் விபரம்

ஆரூடம் கேழ்க்க வந்த மூன்னின்றோர்களை பனிரண்டில் குறையவாவது அல்லது பனிரண்டு மாதத்தில் ஒரு மாதப் பெயராவது கேட்டு அவர்கள் சொல்லும் லக்கமாவது மாதமாவது ஞாபகமாக வைத்து அந்த லக்க மாதத்திற்குரிய பாடலை வாசித்து பலாபலனைச் சொல்லவேண்டும் அல்லது மேற்கண்ட ராசியில் ஒன்றை தொடச் சொல்லியும் அந்த இராசிக்குறிய பாடலை வாசித்தும் சொல்லலாம்.

1-வது சித்திரை மாதப் பலன்

விருத்தம்.

பாரப்பா ஆரூடங் கேட்கும்போது
பரிவாக சித்திரையென் றுரைப்பாராகில்
சீரப்பா செல்லுமொரு கருமமாகும்
சிதரியே போனஜீவன் வந்துசேரும்
கூரப்பா குடும்பத்தின் கலகம் நீங்கும்
கொற்றவரால் பழையநாள் வழக்குதீரும்
நேரப்பா நினைத்தபொருள் வசமேயாகும்
நீடிய பிணிதீரும் நிலைமைகூறே.

2-வது வைகாசிமாதப் பலன்

கூறென்ற வைகாசி யுதையமாகில்
கொடுமைமெத்த விளையுமப்பா குற்றமாக
காரென்ற களவாகிப் போனசொத்து
கானவொருப் போதினுமே வாரதில்லை
ஊறென்ற வூர்விட்டுப் போனபேர்கள்
உத்தமனே வருவதற்கு நாளேயாகும்
பாரென்ற செய்தொழிலும் பலிதமாகா
பாவையர்களால் கலகம் நேருஞ்சொல்லே.

3-வது ஆனிமாதப் பலன்

சொல்லவே யானிதிங்க ளுதையமாகில்
சோதனையாய் போனவர்கள் வந்துசேர்வர்
வெல்லவே தொடுத்ததோர் வழக்குதீரும்
வேணதோர் பெரியோரா லுதவியுண்டு
புல்லவே பேசியதோர் பெண்ணுங்கிட்டும்
புகழாக விவாகமது செய்யநன்று
அல்லவே மெய்யினுளப் பிணியுந்தீரும்
ஆரூடந்தப்பாது அறிந்து பேசே.

4-வது ஆடிமாதப் பலன்

பேசவே யாடிமாதம் உதையமாகில்
பீடிக்கும் வியாதியது பின்னால்தீரும்
நேசனால் கலகம்வரும் நிந்தையுண்டாம்
நிலையாகச் செய்தொழிலுங் கைவிட்டேகும்
வாசமாய் போனதொரு ஜீவன்றானும்
வருவதற்கு யின்னமொரு ஆண்டதாகும்
பாசமா யவரிருக்குந் திசையேதானும்
பரிவாகும் வடமேற்கு மூலையாமே.

5-வது ஆவணிமாதப் பலன்

ஆமெனவே யாவணியே யுதையமாகில்
ஆறிழையால் கலகமுண்டு அதுவுமன்றி
தாமெனவே நினைந்தவையு முடியாதப்பா
தாணிமன்னர் தன்னாலே பொருளுஞ்சேதம்
நாமெனவே வாணிபத்தில் நஷ்டமுண்டாம்
நலியென்னும் நோயாலே பாதைமெத்த

போமெனவே பொல்லாங்கு மெத்தவுண்டு
போனபொருள் வருவது மில்லைதானே.

6-வது புரட்டாசிமாதப் பலன்

தானெனவே புரட்டாசி யுதையமானல்
தானினைத்தக் காரியங்கள் சித்தியாகும்
ஊனெனவே யொருவனு லுதவியுண்டு
உத்தியோக விருத்தியுண்டு வோங்குஞ்செல்வம்
தேனெனவே தேவியரும் பெருவாள்பிள்ளை
தீங்காணப் பிணிதீரும் விளைவுமுண்டு
நானெனவே நஷ்டமாய் போனசொத்து
நாடிவரும் திங்களுக்குள் நன்மையன்றே.

7-வது அற்பிசிமாதப் பலன்

நன்மையென அர்ப்பிசியே யுதையமாகில்
நங்கையரு லுதவியுடன் கிரகமுண்டு
தன்மையாய் போனவரும் வந்துசேர்வர்
தாங்கிய நோய்தீரும் மனமுங்கூடும்
வன்மமாய் வாய்த்ததொரு வழக்குதீரும்
வளம்பெருக வுத்தியோக விருத்தியாகும்
துன்மையெனுர் துயரமெலாம் விலகிப்போகும்
துணைவனு லுதவியது பெருகும்பாரே.

8-வது கார்த்திகைமாதப் பலன்

பெருகவே கார்த்திகையு முறையுமானல்
பெரும்பிணிதந் தீராது யிதைமெத்த
உருகவே ஒருவனுல் கலகம்நேரும்
உத்தமனே போனபொருள் திரும்பிடாது
தருகவே நினைத்ததுவும் முடிந்திடாது
தக்கதோர் கைப்பொருளும் விரையமாகும்
குருகவே குடும்பத்தில் கலகமுண்டாம்
கொற்றவால் பயமதுவும் நேருங்காணே.

9-வது மார்கழிமாதப் பலன்

காணவே மார்கழியு முதையமாகில்
கதிர்வடி வேலன்றன் வுதவியுண்டு
பூணவே போனபொருள் வந்துகிட்டும்
பொல்லாங்குத் துலைந்துவிடும் பகழுண்டாகும்

வேணவே வியாபார விருத்தியாகும்
வெகுபேர்கள் நேயமுடன் விளவுமுண்டு
தோணவே தோன்றிய பிணியுந்தீரும்
துலங்கவே மனைதனிலே மனமுங்கூடும்.

10-வது தைமாதப் பலன்

கூடவே தைமாத முதையமாகில்
கோதையற்கு கெர்ப்பமுண்டாம் குலம்விளங்கும்
தேடவே தென்மேற்கு மூலைதன்னில்
திகழாகக் கேட்டபெண் தானேகிட்டும்
நீடவே நினைத்ததுவும் வசமேயாகும்
நிலமையாய் சொன்னமொழி யுருதியாகும்
நாடவே நல்லுறவும் வந்துகூடும்
நலம்பெருக குடும்பமது விருத்தியாகும்.

11-வது மாசிமாதப் பலன்

ஆகவே மாசியுமே யுதையமாகில்
அடுத்ததோர் பிரபுவால் நன்மையாகும்
ஏகவே யெத்தொழிலுஞ் சித்தியாகும்
எடுத்ததோர் வழக்குவெல்லு மிடரும்நீங்கும்
போகவே போனதோர் ஜீவன்தானும்
புகழாக தானதுவே வந்துசேரும்
தாகமே யில்லையப்பா தரணிமீதும்
தைபிரியமா யாரூடந்தான் சொல்வாயே.

12-வது பங்குனிமாதப் பலன்

வாயெனவே பங்குனியு முதையமாகில்
வழக்கதுவும் வெல்லாது வருத்தஞ்செய்யும்
தோயனவே தோன்றிய பிணிதீராது
தோஷமாம் கைப்பொருளும் விரையமாகும்
நேயமுள நேசர்களும் பகையேயாவார்
நிடியதொழி லதுவும் பலிதமாகா
ஆமெனவே ஆரூடமிது தப்பாது
அகிலமிசை சொல்லி மனமகிழுவீரே.

இராசி ஆரூடசாஸ்திரம்.

முற்றிற்று.

தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப் பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றாம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.